"கூட்டுறவுச் செம்மல்"

*திரு: S.K.சென்னியப்பகவுண்டர் அவர்களின்



திரு உருவச் சிலை திறப்புவிழா-

சிறப்புமலர்

ஈரோடு

21-11-1971

தமிழக அரசின் முழு மூலதன ஆதரவில் கைதேர்ந்த
நெசவாளர்களால் நடத்தப்பட்டு வரும்

சென்னிமலை
தொழிலியல் நெசவாளர்
கூட்டுறவு சங்கத்தின்
தயாரிப்புகள் தான்

Chencoptex
AA 399

கைத்தறி படுக்கை விரிப்புகள்
தலையணை உறைகள் மற்றும்
டர்க்கி டவல்கள்

தமிழக அரசின் முதல் பரிசை தொடர்ந்து 5 ஆண்டுகள்
1966 முதல் வென்று வருகிறது

S. சென்னியப்பன்
தலைவர்

Gohal Bagh,
Coimbatore.

“கூட்டுறவுச் செம்மல்”

திரு. S. K. சென்னியப்ப கவுண்டர்

அவர்களின்

திருஉருவச் சிலை திறப்பு விழா

ஈரோடு 21—11—1971

சிறப்பு மலர்

''கூட்டுறவுத் தந்தை''
செம்மல் சென்னியப்பரின் சிலைத் தோற்றம்

சென்னை
1—1—1971

எனது வெகுகால நண்பரும், எங்கள் குடும்ப நண்பருமான உயர்திரு. S. K. சென்னியப்பன் அவர்களுடைய சிலை திறப்பு சம்பந்தமாக வெளியிடப்படும் மலருக்கு என்னுடைய கட்டுரை ஒன்று வேண்டும் என்று கேட்பது எனக்கு மிகவும் பெருமை அளிக்கக் கூடிய காரியமாகும் என்பதோடு மலர் வெளியிட வேண்டியதும் மிக அவசியம் ஆகும்.

திரு. சென்னியப்பன் அவர்கள் அவரது குழந்தைப் பருவத்திலிருந்தே எனக்கும் எங்கள் குடும்பத்துக்கும் மிக்க வேண்டியவர் என்பதோடு, அவரது பொது நல உணர்ச்சியை அக்காலத்திலிருந்தே பாராட்டி வருகிறேன். அவர் பெயரால் வெளியிடும் மலர் அவரது அரும் பெருங்குணங்களையும், செயல்களையும் தாங்கி, மற்றவர்களுக்கு ஒரு படிப்பினையாக இருந்துவரும் என்று கருதுகிறேன்.

ஈ. வே. ரா.

सत्यमेव जयते

DEPUTY MINISTER FOR HOME AFFAIRS
NEW DELHI

25th November 1970

I am glad to learn that a Statue of Thiru S. K. Chenniappa Gounder is to be erected at Erode.

Thiru Chenniappa Gounder is a courageous, generous and loveable person. He is an ardent social worker and a great co-operator. He has won the admiration of the people by his service in the Erode Municipality and Coimbatore District Board in various capacities. He has given a great fillip to co-operative movement as President of the Coimbatore Central Co-operative Bank and Copress.

I pray for his useful service for many more years and wish the function all success.

K. S. Ramaswamy

புலவர் **கா. கோவிந்தன்,**
எம். ஏ., எம். எல். ஏ.

கோவை மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கித் தலைவர் திரு. எஸ். கே. சென்னியப்ப கவுண்டர் அவர்களுக்கு ஈரோட்டில் ஒரு சிலை நிறுவப்பட இருப்பது கேட்டு மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். இந்நிகழ்ச்சியை முன்னிட்டு ஒரு சிறப்பு மலர் வெளியிடப்பட இருப்பது கேட்டு மகிழ்ச்சி. திரு. சென்னியப்ப கவுண்டர் அவர்கள் கூட்டுறவு இயக்கத்திற்குச் செய்துள்ள பணியினை விளக்கும் வகையில் மலர் விளங்கும் என நம்புகிறேன். மலர் சிறப்புடன் வெளிவர என் நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

கா. கோவிந்தன்

கே. வி. சுப்பையா,
பி. ஏ., எம். எல். ஏ.

வளர்ந்து வரும் பொருளாதாரத்தில் நிதியின் பங்கு இன்றியமையாததாகும். உழவியல் துறையிலும் தொழிலியல் துறையிலும் நிதி சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது.

பசுமைப்புரட்சி கண்டுள்ள தமிழ் நாட்டில் கூட்டுறவு வங்கியின் சாதனையை யாரும் மறுக்கமுடியாது. கோவை மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கி தலைவர் திரு. எஸ். கே. சென்னியப்ப கவுண்டரின் உழைப்பால் கோவை மாவட்டத்தில் கூட்டுறவு சிறப்படைந்துள்ளது. திரு. எஸ். கே. சென்னியப்ப கவுண்டருக்கு சிலை வைப்பதையும், சிறப்பு மலர் வெளியிடுவதையும் அறிந்து மெத்த மகிழ்ச்சியடைகிறேன். சிறப்பு மலர் சிறக்க என் வாழ்த்துக்கள்.

கே. வி. சுப்பையா

கே. எஸ். பழனிசாமி
நீதிபதி, சென்னை உயர் நீதி மன்றம்

சென்னை
தேதி: 5—1—1971

என் சிறுபிராயம் முதற்கொண்டு திருவாளர் சி. கு. சென்னியப்ப கவுண்டர் அவர்களை எனக்கு நன்கு தெரியும். அவர் உள்ளதை உள்ளபடி சொல்லும் உள்ளம் படைத்தவர். அதனுல் ஏற்படும் பகைமைக்குக் கொஞ்சமும் அஞ்சாதவர். தன் உதவியை நாடி வருபவர்களுக்குத் தன்னுல் ஆகக் கூடிய உதவியை செய்ய முடியுமென்று தோன்றினுல் செய்கிறேனென்று சொல்லித் தன் வாக்குறுதியை நிறைவேற்றுவார். தன்னுல் ஆகாது என்று தோன்றினுல் அதே போல் சொல்வதில் கொஞ்சமும் தயங்க மாட்டார். பகைவனுக்கும் அன்பு காட்டும் பண்புள்ளவர். பொது மக்களுக்குச் சேவை செய்வதில் அதிகாரத்தையும் சுயநலத்தையும் நாடாமல் பொதுப் பணிகளை நேர்மையுடனும் சுயநலமின்றியும் திறமையுடனும் நடத்த வேண்டுமென்பதற்கு ஒரு உயர்ந்த சான்முக அவர் விளங்குகிறுர். அதே போன்று இன்னும் பல்லாண்டுகள் பணியாற்ற அவருக்கு உடல் நலத்தை இறைவன் அருள்வானுக!

கே. எஸ். பழனிசாமி

T. M. NARAYANASWAMI PILLAI, M. A., B. L.

ASHOK BHAVAN
JUNCTION ROAD
TIRUCHI

4th January 1971

The Co-operative movement in Tamil Nadu had the honour of having for its Presidents, stalwarts like the late Mr. T. A. Ramalingam Chettiar, Sri C. S. Rathnasabapathy Mudaliar etc. Mr. Chenniappa Gounder has been its distinguished President for a long time, and during his time, the Co-operative business has made very good progress. In a country like ours, the importance of its movement and its service to the people cannot be exaggerated. I wish the Co-operative Movement continued growth and prosperity. Personally, I tender my felicitations and grateful thanks on behalf of the Public to the distinguished President, Mr. S. K. Chenniappa Gounder, and it is only in the fitness of things that his work for the public should be commemorated by a statue in Erode, his home town.

T. M. Narayanaswami Pillai

T. M. நல்லசாமி, M. L. A.

"அருள் நிலை"
தோட்டக்குறிச்சி
(வழி) புகளூர் சர்க்கரை ஆலை அஞ்சல்
கரூர் தாலூக்கா

தேதி : 17—12—1970

கோவை மாவட்டச் செம்மல் — கூட்டுறவுத் துறையின் தந்தை உழைப்பிற்கோர் உத்தமர் — என ஏழை, எளியோர் — உள்ளோர், உரியோர் அனைவராலும் ஒருமித்துப் பாராட்டப்படும் உயர்ந்த மனிதர் உயர்திரு. எஸ். கே. சென்னியப்ப கவுண்டர் அவர்களது திருஉருவச் சிலை திறப்பு விழா சிறப்பு மலருக்கு வாழ்த்தொன்று அனுப்பும் பேறு பெற்றமைக்கு உண்மையிலேயே யான் பெருமையும், பூரிப்பும் அடைகின்றேன். "பொது வாழ்வின் தூய்மை" எனும் உயரிய பண்பு அரிதாகித் தேடிடும் நிலையில் உள்ள இக்காலத்தில்கூட தொடர்ந்து நாற்பதாண்டுகள் கூட்டுறவுத் துறையில் அப்பழுக்கற்றத் தொண்டாற்றி அனைவரது பாராட்டையும் பெறுவது "தூய்மையாளர்" திரு. எஸ். கே. சென்னியப்ப கவுண்டர் அவர்களைப் போன்றவர் களாலேயே முடியும் என்றால் அது மிகையாகாது.

'பொதுத் துறையா?' 'தனியார் துறையா?' – எத்துறைச் சிறந்தது என இன்னமும் சிக்கல் உள்ள இத்தருணத்திலும் இரண்டிற்கும் இடைப்பட்ட மக்கள் துறையாகிய கூட்டுறவுத் துறையில் மிகத் தூய்மையான தமது தொண்டின் மூலம் அத்துறையின் மேன்மையினைக் கோவை மாவட்டத்தில் இமயச் சிகரமாக்கிய ஏந்தல் திரு. எஸ். கே. சென்னியப்ப கவுண்டர் அவர்களை 'கோவை மாவட்டக் கூட்டுறவுத் தந்தை' என அழைப்பது சாலவும் பொருந்தும்.

அன்னார் பல்வேறு நலமும் சிறக்க இன்னும் பல ஆண்டுகள் வாழ்ந்து சிறப்புற எல்லாம் வல்ல எமது திருமலையம்மனை வேண்டி, அவர்களை வாழ்த்துகின்றேன்.

T. M. நல்லசாமி

P. T. RAJAN

"PALAYAM HOUSE"
TALLAKULAM, MADURAI-2

கூட்டுறவுத் துறையில் பல்லாண்டுகளாக சிறந்த சேவை செய்து வரும் செம்மல் S. K. சென்னியப்ப கவுண்டரின் சிலை நிறுவி, அதன் திறப்பு விழா கொண்டாடுவதைப் பற்றி அறிந்து நான் மிக மகிழ்ச்சி அடைகிறேன்.

திரு. கவுண்டர் அவர்கள் தன்னலம் பாராட்டாத ஒரு பொது நலத் தொண்டர்; சிறந்த நிர்வாகத் திறமை கொண்ட நகராட்சித் தலைவராக இருந்தவர்; கோவை மாவட்ட கூட்டுறவு இயக்க முன்னேற்றத்திற்காக அரும்பாடு படுபவர்; தன்னலமற்ற தொண்டும், சீர்மையான நிர்வாகத் திறனுமே திரு. கவுண்டரின் வாழ்க்கையின் முக்கிய அம்சங்கள். இனி வரும் சந்ததியாருக்கு அவர் சேவையே சிறந்த வழிகாட்டியாய் அமைய வேண்டுமென நான் விரும்புகிறேன்.

P. T. Rajan

* * * * *

MANALI RAMAKRISHNA MUDALIAR, B. A.,
President, The Co-operative Central Bank Ltd.,

KANCHEEPURAM

17 — 1 — 1971

கூட்டுறவுத் துறைக்கு தன்னை தியாகம் செய்து கோவை மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கியின் முன்னேற்றத்திற்கு அரும்பாடு பட்டு சிறந்த முறையில் தொண்டாற்றிவரும் திரு. எஸ். கே. சென்னியப்ப கவுண்டருக்கு ஈரோட்டில் சிலை நிறுவுவதைக்கேட்டு மட்டிலா மகிழ்ச்சியடைகிறேன். அன்னாருக்கு சிலை எழுப்புவதற்கு காரணமான மலர் வெளியீட்டுக் குழுவினருக்கு எனது பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மணலி ராமகிருஷ்ண முதலியார்

ஜி. வாகீசம் பிள்ளை சென்னை - 10

தலைவர்

சென்னை கூட்டுறவு

மத்திய வீடு அடமான சங்கம்

16 — 11 — 1970

கோவை மாவட்டத்தில் கூட்டுறவு இயக்கத்திற்கு சிறந்த சேவை செய்துள்ள திரு. எஸ். கே. சென்னியப்ப கவுண்டர் அவர்களின் சிலை ஒன்றை ஈரோட்டில் நிறுவுவது குறித்து மிக்க மகிழ்ச்சியடைகிறேன். கூட்டுறவு ஸ்தாபனங்கள் பலவற்றிற்கு தன் சேவையை அர்ப்பணித்து அவருடைய நிர்வாகத் திறைமையால், தான் தலைமை தாங்கும் ஸ்தாபனங்கள் வெற்றிகரமாக நடத்தி வருவதை யாவரும் அறிந்ததே. அவருடைய சிலை திறப்பு விழா சிறப்பாகவும், வெற்றிகரமாகவும் நடைபெற என் மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

ஜி. வாகீசம் பிள்ளை

* * * * * *

டி. பி. லிங்கம் உதகமண்டலம்

தலைவர்

நீலகிரி கூட்டுறவு மைய வங்கி

14 — 11 — 1970

திரு. எஸ். கே. சென்னியப்ப கவுண்டர் அவர்களது சிலை ஈரோட்டில் நிறுவி அதையொட்டி சிலை திறப்பு விழாச் சிறப்பு மலர் வெளியிட இருக்கும் செய்தி அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

கூட்டுறவு இயக்கத்திற்கு திரு. சென்னியப்ப கவுண்டர் அவர்கள் ஆற்றும் பணி வரலாற்றில் தனி இடம் பெற்று கூட்டுறவுத் தந்தையாக அவர் விளங்குகிருர் என்ருல் அது மிகையாகாது. குறிப்பாக கோவை – நீலகிரி மத்திய வங்கியின் உப-தலைவராக இருந்த சமயம் நீலகிரி மாவட்டத்தில் கூட்டுறவின் வளர்ச்சிக்காக அவர் அரும்பாடுபட்டு நீலகிரி மாவட்ட மக்களின் மனதில் நீங்கா இடம் பெற்றுள்ளார். அன்னுர் பல்லாண்டு வாழ்ந்து மக்கட்க்கு சேவை செய்ய வேண்டும் என்பது எனது அவா.

சிலை திறப்பு விழாவும், சிறப்பு மலரும் சிறப்பான வகையில் அமைய என் நல்வாழ்த்துக்கள்.

டி. பி. லிங்கம்

M. S. PALANIAPPA MUDALIAR, B. A.
189, RAJA STREET, COIMBATORE.

16 — 11 — 1970

திரு. எஸ். கே. சென்னியப்ப கவுண்டர் அவர்களின் சிலை நிறுவும் குழுவுக்கு எனது பாராட்டு.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு"

திரு. சென்னியப்ப கவுண்டர் அவர்கள் கூட்டுறவாளர்களாகிய நம் எல்லோர்க்கும் பல வகையில் உதவியவர். நேர்மை உடையவர். உள்ளதை உள்ளபடி பேசுபவர். சிறந்த தைரியசாலி. சொல்லப்போனால் மரணத்தையும், எல்லாருக்குந் தெரிய வரவேற்பவர். நண்பர்கள் சிலை நிறுவுவது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதாகும்.

இன்னும் நம்முடனிருந்து வழிகாட்டியாக செயல்புரிய எல்லாம் வல்ல ஈசனைப் பிரார்த்திக்கிறேன்.

ம. ச. பழனியப்பன்

* * * *

K. T. VETRIVELU MUDALIAR, B. A., B. L.,
ADVOCATE.
7/11, HUZUR ROAD (SOUTH)
COIMBATORE-18

5 — 12 — 1970

திரு. எஸ். கே. சென்னியப்ப கவுண்டர் அவர்கள் வெள்ளைமனம் படைத்தவர், சூதுவாது அறியாதவர். பிறருக்குத் தீங்கு செய்வதை கனவிலும் அறியாதவர். தனக்கென வாழாது பிறர்க்கென வாழும் பெற்றியர். கூட்டுறவுத் துறை வளர்ச்சிக்கு ஆணிவேர் போன்றவர். அவர் நீடூழி வாழ இறைவனை உளமார வணங்குகிறேன்.

வெற்றிவேல்

N. S. S. மன்ருடியார்
(முன்னாள் கூட்டுறவு அமைச்சர்)
பழையகோட்டை பட்டக்காரர்

பழையகோட்டை
14 — 11 — 1970

திரு. S. K. சென்னியப்ப கவுண்டர் அவர்கள் கூட்டுறவுத் துறையில் பல சங்கங்களிலும் முன்னம் தொடர்பு கொண்டும் தற்போது கோவை மாவட்டக் கூட்டுறவு மத்திய பாங்கின் தலைவராக 15 ஆண்டு காலம் திறமையான பணியை பொது மக்களுக்கு செய்து வருவதும் யாவரும் அறிந்ததே. கூட்டுறவு இயக்கத்திற்கே தன்னை அர்ப்பணித்துக்கொண்டு, அதன் மூலம் தனது நற்பணியைத் தொடர்ந்து செய்து வரும் அன்பருக்கு சிலையமைப்பது மிகவும் பொருத்தமானது. மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

சிலை அமைப்புக் குழுவிற்கு எனது அன்பு கலந்த வாழ்த்தினைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

N. S. Sarkarai manradiar.

* * * * *

டாக்டர் V. அர்ஜுனன், R. M. P.

தெலுங்குபாளையம்
கோவை-10
30—11—1970

விவசாயிகள் நம் நாட்டுக்கு முதுகெலும்பு போன்றவர்கள், நாட்டு மக்களுக்கு உயிர்வாழ உணவு தருபவர்கள் என்று தெரிந்து அவர்கள் தேவை அறிந்து சேவை செய்ய, கோவை மாவட்டம் பெற்ற தவப்புதல்வர் திரு. சென்னியப்ப கவுண்டர். தன்னலம் கருதாத சேவையே முக்கியம் என்று அதில் ஈடுபட்டு, பாடுபட்டு வரும் பொது நலத் தலைவர். அவர்களின் இந்த பணி தொடர்ந்து நீடிக்க வேண்டுகிறேன்.

V. Arjunan.

S. MEENAKSHISUNDARAM, B. A., L. T.,
Principal & Managing Trustee.

KALAIMAGAL KALVI NILAYAM
ERODE

17 — 11 — 1970

திரு. எஸ். கே. சென்னியப்ப கவுண்டரவர்களை நான் நீண்ட நாட்களாக அறிவேன். அவர் மிகவும் நல்லவர். மிகவும் கண்டிப்பானவர். சொன்ன சொல்லைக் காப்பாற்றும் மனத்திட்பம் உடையவர். பழகுவதற்கு அருமையானவர்.

தனது செல்வாக்கினால் ஈரோடு நகரசபைக்கு தலைவரானார். நகரத்திற்கு பல நல்ல காரியங்களைச் செய்த பெருமை அவருக்கு உண்டு.

கூட்டுறவுத் துறையில் அவர் அரும்பெரும் சேவைகளை செய்து இருக்கின்றார்; செய்தும் வருகிறார். தனது நிர்வாகத்திலுள்ள ஸ்தாபனங்களை மிகவும் ஒழுங்காகவும், திறமையாகவும் நடத்தி வரும் காரணத்தால் பொதுமக்கள் நம்பிக்கையையும், மதிப்பையும் பெற்று பலமுறை இந்த கூட்டுறவு ஸ்தாபனங்களுக்குத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு வருகிறார்.

தேசபக்தியில் தலை சிறந்தவர். நாட்டு விடுதலை இயக்கத்தில் நல்ல தொண்டாற்றினார்.

இத்தகைய சிறந்த தொண்டருக்கு செய்யும் பாராட்டு மற்ற இளைஞர்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாக இருக்கும் என்பது என் துணிவு.

அவர் நீண்ட காலம் உடல் நலத்தோடு வாழ்ந்து இன்னும் பல துறைகளில் மக்களுக்கு சேவை செய்யவேண்டும் என்று கடவுளைப் பிரார்த்திக்கிறேன்.

S. Meenakshisundaram.

அன்பில் தர்மலிங்கம்
வேளாண்மைத் துறை அமைச்சர்

தமிழ் நாடு அரசு
தலைமைச் செயலகம்
சென்னை-9

கோவை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் முன்னுள் தலைவரும், கூட்டுறவுத் துறையில் நீண்ட நெடுங் கால அனுபவமுள்ளவரும், கோவை மாவட்ட கூட்டுறவு வங்கி வளர பாடுபட்டவருமான, பெரியவர் உயர்திரு. S. K. சென்னியப்ப கவுண்டர் அவர்களுக்கு ஈரோட்டில் "சிலை" வைத்துப்பாராட்டுவது கண்டு மெத்த மகிழ்ச்சி அடைகிறேன். சிலை அமைப்புக் குழுவினரைப் பாராட்டுகிறேன்.

21—11—1971 அன்று குடந்தையில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள ஏற்கனவே இசைவு தந்து, நிகழ்சிகளுக்கான ஏற்பாடுகளும் நடைபெற்று வருவதால் நேரில்வந்து வாழ்த்த இயலவில்லை.

மத்திய அமைச்சர் மாண்புமிகு. C. S. அவர்கள் கலந்து வாழ்த்துவது சிறப்புக்குரியதாகும்.

விழா சிறப்புற நடைபெற வாழ்த்துகிறேன்.

அன்பில் தர்மலிங்கம்

வாழ்த்துச் செய்திகள்

டாக்டர் பி. நடேசன், தலைவர், தமிழ் நாடு கூட்டுறவு யூனியன்.

திரு. எஸ். கே. சென்னியப்பக் கவுண்டர் அவர்களுடைய பொதுத் தொண்டைப் பாராட்டி அதற்கு அடையாளமாகச் சிலையொன்றை திறக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதை அறிய அளவிலா மகிழ்ச்சியடைகிறேன். திரு. கவுண்டர் அவர்கள் அத்தகைய பெருமைக்குரியவர் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

இந்த விழாவில் பங்குகொள்ள நான் பெரிதும் விரும்பியபோதிலும், ஏற்கனவே ஒப்புக்கொண்டுள்ள நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளவேண்டியிருப்பதால் நேரில் வரமுடியாத நிலையில் இருக்கிறேன்.

இம்மாதம் 22-ம் தேதியன்று, கூட்டுறவு பண்டகசாலைகளின் கருத்தரங்கு யூனியன் ஆதரவில் சென்னையில் நடைபெற இருக்கிறது. அதற்கான ஏற்பாடுகளை நேரில் கவனிக்கவேண்டும். இத்தகைய சூழ்நிலையில் கோவை விழாவில் நேரில் கலந்துகொள்ள முடியாமைக்கு வருந்துகிறேன்.

விழா வெகு சிறப்பாக நடைபெற நான் வாழ்த்துகிறேன்.

*　*　*　*　*

நா. மகாலிங்கம், "சக்தி நிலையம்", பொள்ளாச்சி.

கோவை மத்திய கூட்டுறவு வங்கி முன்னாள் தலைவர் திரு. எஸ். கே. சென்னியப்ப கவுண்டர் அவர்களின் சிலை திறப்பு விழா அழைப்பிதழ் கிடைக்கப் பெற்றேன். மிக்க நன்றி.

விழா சிறப்பாக நடைபெற உளமுவந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

*　*　*　*　*

ஜி. டி. நாயுடு, கோவை.

மத்திய வங்கியின் முன்னாள் தலைவர் திரு. S. K. சென்னியப்ப கவுண்டர் சிலை திறப்புவிழா நடைபெற உள்ளதையும் அதுசமயம் திரு. வி. வி. இராமசாமி அவர்கள் தலைமை தாங்கவும், மத்திய திட்ட அமைச்சர் மாண்புமிகு சி. சுப்பிரமணியம் அவர்கள் சிலையினை திறந்து வைக்கவும், மத்திய கல்வித் துறை துணை அமைச்சர் மாண்புமிகு K. S. ராமசாமி அவர்கள் வாழ்த்துரை வழங்குவார்கள் என்பதையும் அறிந்தேன். அவர் மத்திய கூட்டுறவு வங்கியில் பணியாற்றியபொழுது எவ்வளவோ நன்மைகளை செய்துள்ளார். ஆகவே அவர்களுடைய பேரும், புகழும், எங்கும் பரவி அவர் நீடூழி வாழவும், இவ்விழா இனிது நடைபெறவும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

டாக்டர் ஓ. இராம. கிருட்டிணசாமி, முதல்வர்,
ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயம், கோயமுத்தூர்-20.

கோவை மத்திய கூட்டுறவு வங்கி முன்னாள் தலைவர் திரு. எஸ். கே. சென்னியப்ப கவுண்டர் சிலை திறப்பு விழா அழைப்பிதழ் வரப்பெற்றேன். மிக்க மகிழ்ச்சி. விழா சிறப்பாக நடைபெற வாழ்த்துக்கள். திரு. கவுண்டர் அவர்கள் பன்னெடுங்காலம் வாழ்ந்து கூட்டுறவு இயக்கத்துக்குச் சேவை புரிய இறைவன் அருள்வாராக.

* * * * *

அ. கிருஷ்ணசாமி வாண்டையார், பூண்டி

கோவை மத்திய கூட்டுறவு வங்கி முன்னாள் தலைவர் திரு. எஸ். கே. சென்னியப்ப கவுண்டர் அவர்களின் சிலை திறப்பு விழா அழைப்பிதழ் கிடைத்தது. மிக்க நன்றி. விழாவில் கலந்துகொள்ளும் அவா மிகுதியிருப்பினும் உடல் நலக் குறைவினால் அவ்விதம் செய்யக்கூடவில்லை. தயவு செய்து மன்னிக்கவேண்டும். விழா இனிது நடைபெற பிரார்த்திக்கின்றேன்.

* * * * *

கூட்டுறவின் கொண்டலே கோவைமா வட்டத்தில்
நாட்டி வளர்த்திட்ட நாயகனே — நாட்டார்கள்
வாட்டமின்றி வேளாண்மை மாண்பாய் பெருகிடவே
கோட்டமின்றி வாரிக் கொடு.

— **குமர நடராச ஈவப்பன்,** சித்தோடு.

S. N. P. SHANMUGAM,
B. Com., A. C. A.,
CHARTERED ACCOUNTANTS.

70, COURT STREET,
ERODE - 1.
TAMIL NADU,

20th November 1971.

I thank you very much for your invitation card for the Opening Ceremony of Shri S. K. Chenniappa Gounder's Statue. On that day as I was out of station, I could not attend the function. I regret for my inability. I offer my Best Wishes for the same.

S. N. P. Shanmugam

* * * *

K. V. THANGAPERUMAL

72, CAUVERY ROAD,
ERODE - 3,

20th November 1971.

Thank you for your invitation. I heartily wish the function all success.

K. V. Thangaperumal

* * * *

K. K. SHANMUGAM,
MANAGING PARTNER.
S. M. B. T.

ERODE,

21st November 1971.

Wishing the Function Every Success.

K. K. Shanmugam

இதயம் பேசுகிறது!

திரு. K. P. சண்முகம் பிள்ளை,
தலைவர்,
திரு. S. K. சென்னியப்ப கவுண்டர்
சிலை அமைப்பு & சிறப்பு மலர் வெளியீட்டுக் குழு, ஈரோடு.

சான்றோர்களுக்கு — சாதனைகள் புரிந்தவர்களுக்கு — தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்த தகைமையாளர்களுக்கு சிலை எடுத்துச் சிறப்பிப்பதென்பது நம் தமிழகத்தில் பண்டு தொட்டுப் பின்பற்றப்பட்டு வரும் மரபாகும். காலத்தின் கண்ணுடிகளான காவியங்களும், இலக்கியங்களும் அதனைத் தெள்ளத் தெளிவாகப் படம்பிடித்துக் காட்டுகின்றன.

பல்வேறு கூட்டுறவு நிறுவனங்களிலும், கோவை மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கியின் தலைவராகவும் பல்லாண்டு காலம் பணியாற்றிய கூட்டுறவுப் பெரியார் — செம்மல் சென்னியப்பர் அவர்களின் சிலை நிறுவிச் சிறப்பிக்க வேண்டும் என்ற அவாவில் ஈரோடு கூட்டுறவு ஒன்றியத்திற்கணைக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்களைக் கலந்து பேசியதன் பயனாக திரு. S. K. சென்னியப்ப கவுண்டர் சிலை அமைப்புக் குழுவும், சிறப்பு மலர் வெளியீட்டுக் குழுவும் உதயமாயிற்று. சிலை நிறுவும் எண்ணத்தை திரு. S. K சென்னியப்ப கவுண்டர் அவர்களிடம் நாங்கள் கூறியபோது "எனக்கெதற்கு சிலை? வேண்டவே வேண்டாம்" என மறுத்துரைத்தார். எனினும் நாங்கள் வற்புறுத்தி அவரைச் சம்மதிக்க வைப்பதற்குள் பெரும்பாடாகிவிட்டது.

மத்திய வங்கியின் தலைவராக அவர் இருந்தபோது நாங்கள் எடுத்த முயற்சி தற்சமயம் முற்றுப்பெற இருக்கிறது. திரு. S. K. C. அவர்கள் கோவை கூட்டுறவு அச்சுக்கூடத்தின் தலைவராகவும், ஈரோடு கூட்டுறவு ஒன்றியத்தின் தலைவராகவும் இருந்து இன்னும் சிறப்புடன் பணியாற்றி வருவது நமக்குப் பேருவகையும், பெருமையும் தருகிறது. இந்த வயதிலும் அயராது அவர் பணியாற்றுவது நமக்கு வியப்பைத்தான் தருகிறது. அவருக்கு சிலை எடுப்பதன் மூலம் நமது நன்றியினை வெளிப்படுத்த நல்லதோர் வாய்ப்புக் கிட்டியது என்ற நிம்மதி பிறக்கிறது — நெஞ்சம் நிறைகிறது.

சிலை அமைப்புக்குப் பணம் தேவை என்ற கோரிக்கை வெளியிடப்பட்ட உடனே பல்வேறு கூட்டுறவுச் சங்கத்தாரும், வியாபாரப் பெருமக்களும், கூட்டுறவுப் பெரியோர்களும், வங்கி ஊழியர்களும் மனமுவந்து நன்கொடை அள்ளித் தந்தனர். அதுபோலவே சிறப்பு மலருக்கு கூட்டுறவு நிறுவனத்தார் பலரும், வியாபாரப் பெருமக்களும் விளம்பரங் கொடுத்து உதவினர். அத்தனை பேருக்கும் அன்புகலந்த நன்றியை உரித்தாக்குகிறோம்.

வாழ்த்துரைகள், கட்டுரைகள், கவிதைகள் வழங்கி மலருக்கு மணம் ஊட்டிய மாண்புமிகு அமைச்சர்கள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் தலைவர்கள், தமிழறிஞர்கள், கூட்டுறவாளர்கள், பிரமுகர்கள் ஆகிய அத்தனைபேருக்கும் நெஞ்சார்ந்த நன்றியினை விழாக் குழுவின் சார்பில் தெரிவித்துக்கொள்கிறோம்.

சிறந்த முறையில் மலரை அச்சிட்டு தந்த கோயமுத்தூர் கூட்டுறவு அச்சகத்தாருக்கும், விழா சம்பந்தப்பட்ட எல்லாப் பணிகளிலும் உடன் இருந்து ஒத்துழைத்த வங்கியின் ஈரோடு பகுதி ஊழியர்களுக்கும், விழாவிற்கு மேடை, பந்தல் மற்றும் எல்லாவித வசதிகளையும் செய்துதந்த அனைவருக்கும் நன்றியைக் காணிக்கை ஆக்குகிறோம்.

சிலை திறப்பு விழாவிற்கு வருகைதந்த மத்திய, மாநில அமைச்சர்களுக்கும், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் கூட்டுறவுப் பெரியோர் களுக்கும், பிரமுகர்களுக்கும், விழா சிறப்புடன் நடைபெற எல்லா வகையிலும் உடன் இருந்து உதவிய கோவை மாவட்ட கூட்டுறவு மத்திய வங்கியின் துணைத் தலைவர் திரு. V. V. இராமசாமி அவர்களுக்கும், விழாவில் பங்குகொண்ட அனைவருக்கும் விழாக் குழுவின் சார்பில் மனமார்ந்த நன்றியினை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

நன்றி : வணக்கம்.

"கூட்டுறவுச் செம்மல்"

திரு. S. K. சென்னியப்ப கவுண்டர் அவர்களின்

திருஉருவச் சிலை திறப்பு விழா

நிகழ்ச்சி நிரல்

★

நாள் : 21—11—1971 ஞாயிறு மாலை 3 மணி

இடம் : கோவை மாவட்ட கூட்டுறவு மத்திய வங்கியின்
ஈரோடு கிளை, 20/91, கோர்ட்டு வீதி, ஈரோடு

இறை வணக்கம்

வரவேற்புரை :

தலைவர் :

திரு. V. V. இராமசாமி அவர்கள்

துணைத் தலைவர், கோவை மாவட்ட கூட்டுறவு மத்திய வங்கி

சிலை திறப்பாளர் : மத்திய திட்ட அமைச்சர்

மாண்புமிகு சி. சுப்பிரமணியம் அவர்கள்

திரு. K. P. சண்முகம் பிள்ளை அவர்களுக்கு

பொன்னுடை போர்த்தி, வைர மோதிரம் அணிவித்தல் :

மத்திய கல்வித் துறை துணை அமைச்சர்

மாண்புமிகு K. S. இராமசாமி அவர்கள்

சிறப்பு மலர் வெளியிடுதல் :

திரு. மா. சுப்ரமணியம், B.A., B.L., M.L.A., அவர்கள்

வாழ்த்துரை :

திரு. E. V. K. சம்பத் அவர்கள்

நன்றி நவிலல்

நாட்டுப்பண்

கோவை மாவட்ட கூட்டுறவு மத்திய வங்கி தலைவர்

திரு. S. K. சென்னியப்ப கவுண்டர் அவர்கள் சிலை அமைப்புக் குழு

தலைவர், திரு. K. P. சண்முகம் பிள்ளை

வரவேற்புரை

★

கூட்டுறவுத் துறைக்காகப் பல்லாண்டு காலம் அரிய சேவை செய்த கூட்டுறவுச் செம்மல் திரு. எஸ். கே. சென்னியப்ப கவுண்டரின் சிலையை திறந்து வைப்பது மிக்கச் சிறப்பு வாய்ந்ததாகும். முப்பது ஆண்டுகளுக்கு மேலாக பல்வேறு கூட்டுறவு நிறுவனங்களின் தலைமை ஏற்று செயற்கரிய செயல் புரிந்த பெரியார் அவர். குறிப்பாகக் கோவை மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கியின் தலைவராகப் பல்லாண்டு காலம் அவர் பணி புரிந்ததை யாராலும் மறக்கமுடியாது. இந்நாட்டின் முதுகெலும்பான உழவுத் தொழில் சிறக்கவும், கைத்தறித் தொழில் செழிக்கவும் மத்திய வங்கியின் மூலம் தேவையான கடன் உதவி அளித்தும் நாட்டு முன்னேற்றத்துக்கு உறுதுணையாக அவர் இருந்ததைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

சிறப்புமிக்க தலைவர் அவர்களுக்கு சிலையெடுப்பது என்பது அவரை கௌர விக்கிறோம் என்பதை விட நற்பயன் பெற்றவர்கள் நன்றி தெரிவிக்கிறார்கள் என்பதே பொருத்தமாகும்.

சீரும் சிறப்புமிக்க இவ்விழாவில் கலந்துகொண்டு, "கூட்டுறவுச் செம்மல்" திரு. எஸ். கே. சென்னியப்ப கவுண்டர் சிலையைத் திறந்து வைக்க வருகை தந்திருக்கும் பசுமைப் புரட்சி வீரர், சோஷலிஸச் சிற்பி, புதியதோர் பொன்னுலகம் படைக்கப் புறப்பட்டிருக்கும் பொருளாதார நிபுணர், இந்தியப் பெருநாட்டின் திட்ட அமைச்சர் மாண்புமிகு சி. சுப்பிரமணியம் அவர்களே வருக வருக என இரு கரங்கூப்பு வரவேற்கிறோம்.

விழாவில் கலந்துகொண்டு விழாக் குழு தலைவர் திரு. கே. பி. சண்முகம் பிள்ளை அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தியும் வைர மோதிரம் அணிவித்தும் சிறப்புரை ஆற்ற வந்திருக்கும் மத்திய அரசு கல்வி மற்றும் சமூக நல மேம் பாட்டுத் துறை துணை அமைச்சர் மாண்புமிகு கே. எஸ். இராமசாமி அவர்களே வருக வருக என வரவேற்கிறோம்.

சீர்மிகு சிலை திறப்பு விழாவிற்கு தலைமைத் தாங்க வந்திருக்கும், கோவை மாவட்ட திராவிட முன்னேற்ற கழக அவைத் தலைவரும், மத்திய வங்கியின் துணைத் தலைவருமான மதிப்பிற்குரிய திரு. வி. வி. இராமசாமி அவர்களே வருக வருக என வரவேற்கிறோம்.

சிறப்பு மலர் வெளியிட இங்கு வருகை தந்திருக்கும் ஈரோடு தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் உயர்திரு. மா. சுப்ரமணியம் அவர்களே வருக வருக என வரவேற்கிறோம்.

வாழ்த்துரை வழங்க வந்திருக்கும் சொல்லின் செல்வர் திரு. ஈ. வி. கே. சம்பத் அவர்களே வருக வருக என வரவேற்கிறோம்.

இவ்விழாவிற்கு வருகை தந்திருக்கும் கூட்டுறவாளர்களே, பெரியோர்களே, பொதுமக்களே அனைவரையும் வருக வருக என சிலை அமைப்புக் குழுவின் சார்பில் அன்புடன் வரவேற்கிறேன்.

வணக்கம்.

'' கூட்டுறவுத் துறையில் திரு. எஸ். கே. சி.

வகுத்து தந்த வழியில் வெற்றி நடை போடுவோம் ''

திரு. V. V. இராமசாமி அவர்களின்

தலைமையுரை

★

ஈரோடு, நவ. 21: "கூட்டுறவுத் துறையில் திரு. S. K. C. அவர்கள் வகுத்துத் தந்த வழியில் வெற்றி நடை போடுவோம்'' என சிலை திறப்பு விழா தலைமையுரையில் கோவை மாவட்ட கூட்டுறவு மத்திய வங்கி துணைத் தலைவர் திரு. V. V. இராமசாமி அவர்கள் குறிப்பிட்டார். மேலும் அவர் தனது தலைமையுரையில் குறிப்பிட்டதாவது:

கோவை மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கியின் தலைவராகப் பலரும் பாராட்டும் வண்ணம் பல்லாண்டு காலம் திரு. S. K. C. அவர்கள் பணியாற்றியதைத் தொடர்ந்து அவர் வழியில் சென்று வெற்றி பெறுவோம். எதிர்கால நிர்வாகிகளுக்கு அவர் சரியான வழிகாட்டியாகத் திகழ்ந்துள்ளார். குற்றங்குறை காணின் கண்டித்து அதனைத் திருத்தும் போக்கே அலாதியானது.

சிறப்புப் பல பெற்ற சென்னியப்ப கவுண்டர் அவர்களுக்குச் சிலை வைப்பது மிகப் பொருத்தமானதாகும். சிலை அமைப்புக் குழுவினரைப் பாராட்ட நான் கடமைப்பட்டுள்ளேன். கோவை மாவட்டத்தில் கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சியில் S. K. C. அவர்களின் பங்கு மகத்தானது. அத்தகு பெரியாரின் சிலையை மாண்புமிகு மத்திய திட்ட அமைச்சர் அவர்கள் திறந்துவைக்க வந்துள்ளது வரவேற்கத்தக்கது. கூட்டுறவுத் துறையில் S. K. C. அவர்கள் வகுத்துத் தந்த வழியில் வெற்றி நடை போடக் கூட்டுறவாளர்களாகிய நாம் இந் நன்னாளில் சபதம் ஏற்போம்.

'' கூட்டுறவுத் துறைக்குத் தன்னை அர்ப்பணித்துக்கொண்டவர் ''

திரு. எஸ். கே. சி. அவர்களுக்கு

மத்திய திட்ட அமைச்சர்

திரு. சி. சுப்பிரமணியம் அவர்களின்

புகழ் மாலை

ஈரோடு, நவ. 21 : '' திரு. எஸ். கே. சி. அவர்கள் கூட்டுறவுத் துறைக்குத் தன்னை அர்ப்பணித்துக்கொண்டவர் '' என மத்திய திட்ட அமைச்சர் மாண்புமிகு சி. சுப்பிரமணியம் அவர்கள், புகழ் மாலை சூட்டினர். 21—11—1971-ம் தேதி ஈரோட்டில் திரு. எஸ். கே. சி. அவர்களுடைய சிலையைத் திறந்து வைத்தும், எஸ். கே. சி. அவர்களுக்குப் பொன்னுடைப் போர்த்தியும், வைர மோதிரம் அணிவித்தும் மேற்கண்டவாறு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

மேலும் தொடர்ந்து பேசும்போது அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதாவது:

நாட்டின் முன்னேற்றத்தில் கூட்டுறவுத் துறை மகத்தான இடம் வகிக்கிறது. இந்தியாவில் குறிப்பாகத் தமிழகத்தில் கூட்டுறவுத் துறை மிக நல்ல முறையில் வளர்ச்சியடைந்துள்ளது. கூட்டுறவுத் துறை வளர அதில் பங்கு கொள்வோரின் தொண்டே மிக முக்கியமானதாகும். அந்த வகையில் கோவை மாவட்டத்தில் திரு. டி. ஏ. இராமலிங்கம் செட்டியார், திரு. சி. எஸ். இரத்தினசபாபதி முதலியார் ஆகியவர்களை அடுத்து திரு. எஸ். கே. சென்னியப்ப கவுண்டர் அவர்கள் ஆற்றியுள்ள அரும்பணி நாம் அனைவரும் பெருமைப்படத்தக்க ஒன்றாகும். நேர்மையும், நெஞ்சுரமும், அயராத உழைப்பும், தன்னலமற்ற சேவையும் ஒருங்கே வாய்க்கப்பெற்றவர் திரு. எஸ். கே. சி. அவர்கள் என்றால் அது மிகை யாகாது. அத்தகு சிறப்புப்பெற்றவருக்கு அவர் பதவியில் இல்லாத காலத்தில் சிலை வைப்பதென்பது மிகவும் பாராட்டத்தகுந்தது. பதவியைப் பயன்படுத்தி அவர் அதைச் செய்து கொண்டார், இதைச் செய்துகொண்டார் என்று யாராலும் எப்பொழுதும் கூறமுடியாது. இது அனைவரும் பின்பற்றத்தக்க நல்ல மரபாகும். இந்த மரபு கெடாமல் பார்த்துக்கொள்ளவேண்டியது நம் அனைவரின் கடமை ஆகும்.

உயிருடன் உள்ளவர்களுக்குச் சிலை வைப்பதா என்று சிலர் கேட்கின்றனர், முன்பொருமுறை நடைபெற்ற சம்பவத்தை இங்கே சுட்டிக்காட்ட விரும்பு கிறேன். சென்னை மாநகராட்சியினர் தலைவர் காமராஜ் அவர்களுக்கு சிலை வைக்க ஏற்பாடு செய்தனர். சிலையைத் திறந்து வைக்க பாரதப் பிரதமர் நேருஜி அவர்களை அழைக்க முடிவு செய்து, பிரதமரை அழைத்துவரும் பொறுப்பை என்னிடம் தந்தனர். நான் பக்குவமாக சமயம் பார்த்து மேற்படி நிகழ்ச்சிக்கு நேருஜி அவர்களிடம் ஒப்புதல் பெற்றேன். உயிருடன் உள்ளபொழுதே பல தலைவர்களுக்கு இப்பொழுது சிலைகள் வைக்கின்றனர். இதில் தவறேதும் இருப்பதாக நான் கருதவில்லை.

திரு. எஸ். கே. சி. அவர்கள் பல்வேறு நிறுவனங்களில் பல்லாண்டு காலம் தலைமைப் பொறுப்பில் இருந்தார்கள் என்று இங்கே குறிப்பிட்டார்கள். அவரு டைய நிர்வாகத்திறனே இதற்கு முக்கிய காரணமாகும். சுருக்கமாகச் சொல்லப் போனால் அவர் தன்னைத்தானே கூட்டுறவுத் துறைக்கு அர்ப்பணித்துக்கொண்டார். சென்னியப்ப கவுண்டர் அவர்கள் வயதில் முதுமை அடைந்தாலும் சொல்லிலும் செயலிலும் இன்னும் இளைஞராகவே திகழ்கிறார். அவருடைய சேவைகளை இனிப் பின்வருவோர் வழிகாட்டியாககொண்டு நடக்க முயற்சிக்கவேண்டும். அவர் இன்னும் நீண்ட காலம் வாழ்ந்து கூட்டுறவுத் துறைக்குத் தேவையான நல்ல ஆலோசனைகளை வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

"கூட்டுறவு வளரப் பாடுபடும் இருபெரும் பெரியோர்கள்"

எஸ். கே. சி., திரு. K. P. சண்முகம் பிள்ளை ஆகியவர்களுக்கு

மத்திய துணை அமைச்சர்

திரு. K. S. இராமசாமி அவர்களின்

பாராட்டுரை

★

ஈரோடு, நவ. 21: 21—11—1971-ம் நாள் ஈரோட்டில் நடை பெற்ற திரு. S. K. C. சிலை திறப்பு விழாவில் சிலை அமைப்புக் குழு தலைவர் திரு. K. P. சண்முகம் பிள்ளை அவர்களுக்குப் பொன்னுடை போர்த்தியும் வைர மோதிரம் அணிவித்தும் அமைச்சர் அவர்கள் பேசியதன் சுருக்கம் வருமாறு:

பெருமைப்படத்தக்க இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்வதிலே மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். விழாக்குழு தலைவர் திரு. K. P. சண்முகம் பிள்ளை அவர்களுக்குப் பொன்னுடை போர்த்தி, வைர மோதிரம் அணி விப்பதிலே மிகுந்த பெருமை கொள்கிறேன். திரு. S. K. C. அவர்கள் கூட்டுறவுத் துறையில் காலடி எடுத்துவைத்த காலத்திலிருந்தே திரு. K. P. சண்முகம் பிள்ளை அவர்களும் அவருக்குத் தோளோடு தோள் நின்று பல்லாண்டு காலம் அரிய சேவை செய்துள்ளார்கள். ஈரோடு கூட்டுறவு யூனியனுக்கு திரு. S. K. C. தலைவராகவும், திரு. K. P. சண்முகம் பிள்ளை காரியதரிசியாகவும் சுமார் 30 ஆண்டு காலம் நற்பணி புரிந்துள்ளதை மக்கள் மறக்கமாட்டார்கள்.

கூட்டுறவு இயக்கம் நாடு தழுவிய இயக்கமாக இன்று வளர்ந்து வருகிறது. இன்னும் இத்துறையில் புரட்சிகரமான மாறுதல்களைச் செய்யவேண்டும். மேல்நாடுகளைப் போல நம் நாடும் எல்லாத் துறை களிலும் முன்னணியில் நிற்க நாம் ஒன்றுபட்டு உழைக்கவேண்டியது அவசியமாகும். திரு. S. K. C., திரு. K. P. சண்முகம் பிள்ளை ஆகிய வர்களை இதரக் கூட்டுறவாளர்கள் பின்பற்றி நடந்து நாட்டுப் பணியில் தங்கள் பங்கை நல்லமுறையில் செலுத்த முன் வரவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். கூட்டுறவு வளரப் பாடுபடும் இருபெரும் பெரியோர்களும் நீடூழி வாழ வாழ்த்துகிறேன்.

"சேவையைப் போற்றிச் சிறப்பிப்பது செந்தமிழர் பண்பு"

ஈரோடு தொகுதி சட்டமன்ற உறுப்பினர்

திரு. மா. சுப்பிரமணியம், B. A., B. L., அவர்களின்

உரை

ஈரோடு, நவம்பர் 21, சிலை திறப்பு விழாவில், சிலை திறப்பு விழா சிறப்பு மலரை வெளியிட்டு திரு. மா. சுப்ரமணியம், B. A., B. L., M. L. A., அவர்கள் ஆற்றிய உரையின் சுருக்கம் வருமாறு.

பெரியவர் திரு. S. K. C. அவர்களின் பெருமைகளைப் பற்றி மத்திய அமைச்சர்களும், நண்பர்களும் விரிவாக எடுத்துரைத்தார்கள். சிறப்பு மலரை புரட்டும் போது "வெள்ளை உள்ளம் படைத்தவர்" என்று ஓரிடத்தில் திரு. S. K. C. அவர்களைப் பற்றிக் குறிப்பிட்டிருப்பதைக் கண்டேன். கோபம் உள்ள இடத்தில் குணமிருக்கும் என்பதற்கு S. K. C. அவர்கள் சரியான எடுத்துக்காட்டு. பலரை அவர் மிகுதியாகத் திட்டுவதைக் கண்டிருக்கிறோம்; கேள்விப்பட்டிருக்கிறோம். அவரது கண்டிப்பிலே தந்தையின் கண்டிப்பு இருக்கும். உரிமை உள்ளவர்களையே அவர் மிகுதியாகத் திட்டுவார் என்பதும் நாம் அறியாததல்ல. ஆனல் யாரையும் கெடுக்கவேண்டுமென்று அவர் எப்போதும் எண்ணியதில்லை.

கூட்டுறவுத் துறையில் சாதனைகள் பலபுரிந்த அவரது சேவையைப் பாராட்டி அவருக்கு சிலை வைத்தும், சிறப்பு மலர் வெளியிட்டதும் சாலப் பொருத்தமானதாகும். சிலைவைப்பதால் அவருக்குப் பெருமை மட்டுமல்ல; செய் நன்றி மறவாத செந்தமிழர் பண்பை நாம் பெற்றிருக்கிறோம் என்பதை நிரூபிக்க நாம் தவறவில்லை என்பதைக் காட்டக்கூடிய பொன்னன வாய்ப்புக்கிட்டியிருக்கிறது என்பதை எண்ணி நாம் என்றும் மகிழலாம். மாசற்ற அவரது தொண்டு வாழ்க! வளர்க என வாழ்த்துகிறேன்.

"தகுதி மிக்க தனித் தலைவர்"

திரு. எஸ். கே. சி. அவர்களின் சேவைகளைப் பாராட்டி

சொல்லின் செல்வர்

திரு. ஈ. வி. கே. சம்பத் அவர்களின்

சிறப்புரை

***

எஸ். கே. சி. அவர்கள் எங்களது குடும்ப நண்பர். அவரோடு நெருங்கிப் பழகும் நல்வாய்ப்பைப் பெற்றவன் நான். எஸ். கே. சி. அவர்கள் ஈரோடு நகர மன்றத் தலைவராக இருந்தபோது நான் நகர மன்ற உறுப்பினராக இருந்திருக்கிறேன். மன்றக் கூட்டங்களை அவர் நடத்தும் விதம் கண்டு வியப்படையாதவர்கள் இல்லை. துணிவு மிக்கவர்—தூய்மையானவர்.

அரசியல், சமூகசேவை, கூட்டுறவுத் தொண்டு, பொதுப்பணி ஆகியவற்றில் அவர் காட்டிய ஆர்வமும் ஈடுபாடும் காலத்தால் மறையாதவை. எளிய பணியின் மூலம் நாட்டு வளர்ச்சிக்கு எண்ணற்ற தொண்டு புரிந்தவர் அவர். எண்ணியபடி எதையும் அவரால் முடிக்க முடிந்ததென்றால் அவரது நேர்மையான குணமும் தனக்கென வாழாமல் பிறர்க்கென வாழ்ந்த தியாக மனமுமே காரணமாகும்.

தள்ளாத வயதிலும் அவர் தொடர்ந்து பொதுப்பணியாற்றி வருவது இளைஞர் சமுதாயத்திற்கு நல்ல தூண்டுகோலாக அமையும் என்பதில் ஐயமில்லை. கோவை மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கியின் தலைவராக சுமார் 15 ஆண்டுகளுக்கும் மேலாக அவர் சேவை செய்துள்ளதை எண்ணும்போது நமக்குள் ஓர் எழுச்சி உண்டாகிறது. தகுதி மிக்க தனித் தலைவராக விளங்கிய எஸ். கே. சி. அவர்கள் நீண்ட காலம் வாழ வாழ்த்தி விடை பெறுகிறேன்.

கோவை மாவட்ட கூட்டுறவு மத்திய வங்கி தலைவர்

திரு. S. K. சென்னியப்ப கவுண்டர் அவர்கள் சிலை அமைப்புக் குழு

திரு. P. இரத்தினசாமி அவர்களின்

நன்றியுரை

பல்வேறு அலுவல்களுக்கிடையேயும் எங்களது அன்பான அழைப்பை ஏற்று இங்கு வருகை தந்து திரு. எஸ். கே. சென்னியப்ப கவுண்டர் சிலையினைத் திறந்து வைத்தும் பொன்னாடை போர்த்தி, மோதிரம் அணிவித்து சிறப்புரை நிகழ்த்திய மத்திய திட்ட அமைச்சர் மாண்புமிகு சி. சுப்பிரமணியம் அவர்களுக்கும், விழாக் குழு தலைவர் திரு. கே. பி. சண்முகம் பிள்ளை அவர்களுக்கு பொன்னாடை போர்த்தியும், வைர மோதிரம் அணிவித்தும் பாராட்டுரை வழங்கிய மத்திய துணை அமைச்சர் மாண்புமிகு கே. எஸ். இராமசாமி அவர்களுக்கும், விழாக் குழுவின் சார்பில் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

விழாவிற்குத் தலைமை தாங்கிய கோவை மாவட்ட கூட்டுறவு மத்திய வங்கி துணைத் தலைவர் திரு. வி. வி. இராமசாமி அவர்களுக்கும், சிறப்பு மலர் வெளியிட்டுச் சிறப்பித்த ஈரோடு தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியம், பி. ஏ., பி. எல். அவர்களுக்கும், பல்வேறு சிரமங்களுக்கு இடையேயும் இங்கு வருகை தந்து வாழ்த்துரை வழங்கிய சொல்லின் செல்வர் திருமிகு. ஈ. வி. கே. சம்பத் அவர்களுக்கும் விழாக் குழுவின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இவ்விழா சிறப்புற நடைபெற நன்கொடைகள் கொடுத்துதவிய பெருமக்களுக்கும் சிறப்பு மலர்களுக்கு விளம்பரங்கள் கொடுத்துதவிய கூட்டுறவு நிறுவனங்களுக்கும், வியாபார பெருமக்களுக்கும், விழா மேடை, பந்தல் மற்றும் எல்லாவித ஏற்பாடுகளையும் நல்ல முறையில் செய்து தந்த அனைவருக்கும் ஆரம்ப முதல் இதுவரை எல்லா வழிகளிலும் உடன் இருந்து பணியாற்றிய ஈரோடு பகுதி வங்கி ஊழியர்களுக்கும், வருகை தந்துள்ள அனைவருக்கும் விழா குழுவின் சார்பில் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

மாண்புமிகு மத்திய திட்ட அமைச்சர் C. சுப்பிரமணியம் அவர்கள்
தலைவர் திரு. S. K. C. அவர்களின் சிலையை திறந்து வைத்து, பொன்னுடை போர்த்தி மகிழ்கின்றார்



திரு. S. K. C. அவர்களின் திருஉருவச் சிலையை
21-11-1971 அன்று மாண்புமிகு C. சுப்பிரமணியம் அவர்கள் திறந்து வைத்தார்கள்



மத்திய திட்ட அமைச்சர் மாண்புமிகு C. சுப்பிரமணியம் அவர்கள்
திரு. S. K. C. அவர்களின் சிலையைத் திறந்து வைத்து, பொன்னுடை போர்த்தி,
வைர மோதிரம் அணிவித்துப் பாராட்டினர்



மாண்புமிகு அமைச்சர் திரு. C. சுப்பிரமணியம் அவர்கள் வாழ்த்துரை வழங்குகிருர்



விழாக் குழுத் தலைவர் திரு. K. P. சண்முகம் பிள்ளை அவர்களுக்கு
மத்திய அமைச்சர் மாண்புமிகு K. S. இராமசாமி அவர்கள் பொன்னுடை போர்த்தி பாராட்டினர்

		பக்கம்
19.	கூட்டுறவுப் பெரியார்! (கவிதை) — ஈரோடு திரு. ப. கதிரவன் ...	39
20.	நட்பிற்கோர் எடுத்துக்காட்டு! — திரு. பி. கே. சேதுராமசாமி ...	41
21.	இலட்சிய கூட்டுறவாளர் — திரு. T. N. பழனிசாமி, M. A. ...	43
22.	நான் கண்ட தலைவர் —திரு. அ. இராமகிருஷ்ணன் ...	45
23.	சிலையும் சிந்தனையும்! (கவிதை) — திரு. S. P. பெருமாள்சாமி ...	47
24.	நாட்டுயர்வு பேணும் கூட்டுறவாளர் — திரு. ப. ச. விசுவநாதன், M. C. ...	49
25.	நமது தலைவர் — திரு. P. N. நஞ்சப்பன் ...	51
26.	துணிவுமிக்க நேர்மையாளர் — திரு. ஈ. வெ. கி. சம்பத் ...	54
27.	சரியான முடிவு! வளையாத பண்பு! பொறுப்பான நிர்வாகம்! — திரு. K. S. அங்கமுத்து, B. A. ...	55
28.	சி. கு. சென்னியப்ப கவுண்டர் — டாக்டர் ல. கி. முத்துசாமி, எம். பி., பி. எஸ். ...	57
29.	ஏருடைத் தலைவர் (கவிதை) — "சக்திக்கனல்" ...	59
30.	அணைக்கும் கரங்கள் — திரு. எம். பழனிசாமி, பி. காம்., எச். டி. சி. ...	61

''கூட்டுறவுத் தந்தை'' திரு. S. K. சென்னியப்ப கவுண்டர் அவர்கள்



திரு. S. K. C. அவர்களின் துணைவியார்
திருமதி சின்னம்மாள் அவர்கள்

திரு. S. K. சென்னியப்ப கவுண்டர் அவர்களின்

தந்தையார்
திரு. சி. செ. குமாரசாமிக் கவுண்டர்

தாயார்
திருமதி குப்பாயம்மாள்



திரு. S. K. C. அவர்கள், சகோதரர்கள் திரு. S. K. ராமசாமிக் கவுண்டர்,
திரு. S. K. குமாரசாமிக் கவுண்டர், திரு. S. K. பரமசிவம், B. A., ஆகியவர்களுடன்



திரு. S. K. C. அவர்களின் மூத்த மகளும், அவரது குடும்பத்தினரும்



திரு. S. K. C. அவர்களின் மூத்த மகன் திரு. S. C. சுப்பிரமணியம், B. A., B. L., அவர்களும், அவரது குடும்பத்தினரும்



திரு. S. K. C. அவர்களின் இளைய மகன் திரு. S. C. சண்முகம் அவர்களும், அவரது குடும்பத்தினரும்



1952-ம் ஆண்டு ஈரோடு முனிசிபல் சேர்மனுக
இருந்தபோது திரு. S. K. C. அவர்கள்



முன்னுள் தமிழக ஆளுநர் ஸ்ரீ ஸ்ரீபிரகாசா அவர்களுடன்
திரு. S. K. C. அவர்கள் முனிசிபல் சேர்மனுக இருந்தபோது

1952-ம் ஆண்டு ஈரோடு முனிசிபல் சேர்மனுக இருந்தபோது
காந்தி சிலை திறப்பு விழாவில் ஸ்ரீ ஸ்ரீபிரகாசா அவர்களுடன்
திரு. S. K C. அவர்கள்

எங்கள் தமிழ்

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

இனிமைத் தமிழ்மொழி எமது — எமக்
கின்பந் தரும்படி வாய்த்த நல் அமுது!
கனியைப் பிழிந்திட்ட சாறு — எங்கள்
கதியில் உயர்ந்திட யாம் பெற்ற பேறு!
தனிமைச் சுவையுள்ள சொல்லை — எங்கள்
தமிழினும் வேறெங்கும் யாங்கண்ட தில்லை!
நனியுண்டு நனியுண்டு காதல் — தமிழ்
நாட்டினர் யாவர்க்குமே தமிழ் மீதில்!

தமிழ் எங்கள் உயிர் என்ப தாலே — வெல்லுந்
தரமுண்டு தமிழருக் கிப்புவி மேலே!
தமிழ் என்னில் எம்முயிர்ப் பொருளாம் — இன்பத்
தமிழ் குன்றுமேல் தமிழ் நா டெங்கும் இருளாம்!
தமிழுண்டு தமிழ் மக்க ளுண்டு — இன்பத்
தமிழுக்கு நாளும் செய்வோம் நல்ல தொண்டு!
தமிழ் என்று தோள் தட்டி ஆடு — நல்ல
தமிழ் வெல்க, வெல்க என்றே தினம் பாடு!

பவானி கூட்டுறவு
பிரதம நில வள வங்கி லிமிடெட், K. 555

பவானி

திரு. S. S. ஸென் ரெட்டியார், தலைவர்

இந்த வங்கியின் மூலம் பவானி தாலூக்காவில் பவானி, அந்தியூர் வட்டாரங்களிலுள்ள விவசாயிகளுக்கு புதிய கிணறு வெட்டுதல், பழைய கிணறுகளை ஆழப்படுத்துதல், எலக்டிரிக் மோட்டார் பம்புசெட் வைத்தல், டிராக்டர்கள் வாங்குதல் போன்ற காரியங்களுக்கு ரூ. 40,000/- வரை கடன்கள் வழங்கப்படுகிறது. ஏற்கனவே கடன் பெற்று பயனடைந்தவர்கள்போக ஏனைய விவசாயிகளும் இவ் வங்கியின் மூலம் கடன்பெற்று பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

N. அர்த்தனாரி
காரியதரிசி

கூட்டுறவே நாட்டுயர்வு!

குறைந்த விலை! நீடித்த உழைப்பு! கெட்டிச் சாயம்!

கணக்கம்பாளையம்
நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட்

No. A. A. 79

கணக்கம்பாளையம் P. O. (வயா) கள்ளிப்பட்டி

எங்கள் சங்க ஜவுளிகள் எல்லா கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களிலும், எம்போரியங்களிலும் கிடைக்கும்

எங்கள் சங்கத்திற்கு ஒருமுறை விஜயம் செய்யுங்கள்

K. P. குருநாத முதலியார்
தலைவர்

நான் கண்ட எஸ். கே. சி.

திரு. இரா. கனகசபை, எம். எல். ஏ.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகிய சிறந்த பண்புகள் வாய்க்கப் பெற்ற கூட்டுறவாளர்களுள் ஒருவராக எனது நண்பர் திரு. எஸ். கே. சி. அவர்களை நான் கருதி வருகிறேன். தாம் பொறுப்பேற்றுக்கொண்ட காரியங்களை கண்ணியத்துடனும், நன்முறையிலும் செய்வதில் கூட்டுறவுத் துறையில் சிறப்புடன் விளங்கும் தலைவர்களுள் அவர் முக்கியமானவர் என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

கூட்டுறவு இயக்கத்தில் நான் ஈடுபட்ட நாள் முதல் திரு. எஸ். கே. சென்னியப்ப கவுண்டரை அறிவேன். எந்த ஒரு விஷயத்தைப் பற்றியும் அவர் கூறும் முடிவு வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்பதாக இருக்கும். அதைப் பற்றி சங்கடப்படுவோரும் உண்டு; சந்தோஷம் கொள்வோரும் உண்டு. என்னைப் பொறுத்த வரையில், உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசாத வெள்ளை உள்ளம் படைத்தவராகவே அவரை நான் கருதுகிறேன். அவருடன் நெருங்கிய தொடர்பு கொண்ட ஏனையோரது கருத்தும் அதுவாகத்தான் இருக்கும் என்பதில் ஐயமில்லை.

நான் தலைமைவகிக்கும் தமிழ் நாடு மாநிலக் கூட்டுறவு வங்கியின், நிருவாகக் குழுவில் திரு. கவுண்டர் ஓர் முக்கிய அங்கத்தினர். கோயமுத்தூர் மாவட்டம் சம்பந்தப்பட்ட கூட்டுறவுப் பிரச்சினைகளை அம்மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கியின் தலைவரான திரு. எஸ். கே. சி. அவர்களைக் கலந்துதான் நாங்கள் முடிவு செய்வோம். அவ்வாறு நாங்கள் எடுக்கும் எல்லா முடிவுகளும் சிறந்தனவாகவும், யாவருக்கும் உகந்தனவாகவும் இருக்கும்.

கோவை மாவட்டத்தில் கூட்டுறவுத் துறையில் நல்ல அனுபவமும், முதிர்ந்த ஞானமும் வாய்க்கப் பெற்ற திருவாளர்கள் டி. ஏ. இராமலிங்கம் செட்டியார், சி. எஸ். இரத்தினசபாபதி முதலியார் போன்ற இந்திய கூட்டுறவு இயக்கத்தின் சிற்பிகளாய் விளங்கிய தலைவர்களால் உருவாக்கப்பட்டவர் திரு. கவுண்டர். கோவை மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கியில் அவர்கள் தலைவர்களாய் இருந்துவந்தபோது, திரு. கவுண்டர், அவர்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டு செயலாற்றியதன்பயனுய் அவர்களுக்குப்பிறகு அந்த வங்கியின் தலைவராய் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பெற்ருர். அவரது தலைமையில் இந்த வங்கி தமிழ் நாட்டில் சிறந்ததொரு வங்கியாய் இன்று விளங்கிவருகிறது என்பதைக் குறிப்பிட நான் பெருமையடைகிறேன். சுமார் ஒன்பது ஆண்டுகளுக்கு முன் கோவை மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கியின் பொன் விழா நடைபெற்றது. அந்த விழாவுக்குத் தலைமைவகிக்கும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. கோவை மாவட்டக் கூட்டுறவாளர்கள் தங்கள் தலைவர் திரு. எஸ். கே. சென்னியப்ப கவுண்டர் அவர்களிடத்தில் வைத்திருந்த சிறந்த மதிப்பை அப்போது நான் நேரில் கண்டேன்.

"காட்சிக்கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம்"

என்பது வள்ளுவர் வாக்கு. ஒரு அரசனுக்கு கூறப்பட்டுள்ள இலக்கணம் கூட்டுறவுத் தலைவர்களுக்கும் பொருந்தும். யாவரையும் அனுசரிக்கக்கூடிய வராயும், பேச்சில் கண்டிப்பாயிருந்தாலும் கடுமையாயில்லாதவராயும் இருந்து வரும் பண்புள்ளம்கொண்ட ஒருவர் தலைமை ஏற்று நிருவகிக்கும் எந்த நிருவனமும் சிறந்து விளங்கும். நான் கண்ட எஸ். கே. சி. இதற்கு சான்று ஆவார். அவர் பன்னெடுநாட்கள் கூட்டுறவுத் துறையில் தொடர்பு கொண்டு இந்த இயக்கத்துக்கு நற்பணியாற்ற எல்லாம் வல்ல இறைவன் அருள் பாலிப்பாராக.

வெள்ளிரவெளி கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிமிடெட், No. A. A. 73

வெள்ளிரவெளி P. O.,
குன்னத்தூர் (Via) கோவை மாவட்டம்

எங்கள் சங்க ஜவுளிகள் எல்லா

"கோ - ஆப்டெக்ஸ்"

விற்பனை நிலையங்களிலும் கிடைக்கும்

எங்கள் விற்பனை நிலையம் :

32, அக்ரஹார வீதி, ஈரோடு

தலைவர் : V. அய்யாசாமி

நலமே வாழ்க!

"சக்திக்கனல்"

உள்ளத்தில் கபடில் லாத
    ஒருவனைச் சினமாம் காட்டு
வெள்ளத்தில் மிதக்கும் போதும்
    மென்மைசால் உளங்கொண் டானைக்
கொள்ளைக்கும் குத்தீட் டிக்கும்
    கொடுமைக்கும் அஞ்சா எங்கள்
உள்ளத்தில் இனிக்கின் றானை
    உயர்த்துவேன் என்பாட் டாலே!

கூட்டுற வியக்கம் என்றால்
    கொழுத்தவர் கொழுக்கப் பின்பு
நாட்டிலே பதவிப் பித்தால்
    நடப்பவர் நடக்க மீண்டும்
சேட்டைகள் செய்தே செல்வம்
    திருடுவோர் திருடக் கண்ட
நாட்டிலே நீதான் உள்ளம்
    நல்லவன் எனப்பேர் பெற்றாய்!

தன்னுடை கைக்கா சைத்தான்
    தருமம்வா இந்தா வென்றிக்
'குன்னுடை யாக்க வுண்டன்'
    கொடுத்ததால் புகழ்பெற் றிட்டான்!
என்னுடை வருமானத் துக்
    கிதுநலம் எனவே எண்ணும்
புண்ணுடை மறியோர்க் கெல்லாம்
    புதுக்கதிர் ஆகிக் காய்ந்தான்!

முன்னணித் தலைவன் கூட்டு
    முயற்சியின் தலைவன் எங்கள்
சென்னியங் கிரிப்பேர் பெற்ற
    செல்வனே! பன்னா றாண்டு
பொன்னுடல் உரமே பெற்றுப்
    புகழொடு வாழ்வான் என்றே
என்னுளம் போற்றிப் பாட
    எழுதினேன்! நலமே வாழி!

திரு. S. K. சென்னியப்ப கவுண்டர்
அவர்களின்
சிலை திறப்பு விழா நன்னாளில் அன்னாருக்கு
எங்களது மனமுவந்த வாழ்த்துக்கள்

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் — மற்றெல்லாம்
தொழுதுண்டு பின் செல்பவர் — குறள்

பெருந்துறை R. S. கூட்டுறவு விவசாய வங்கி

தோற்றம்: 21—1—1957

A வகுப்பு மெம்பர்கள்: 1,790

அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம்	ரூ.	1,50,000
மெம்பர்கள் செலுத்திய பங்குத் தொகை	,,	1,15,049
டிபாசிட்டுகள் மொத்தம்	,,	25,477
மத்திய வங்கியில் கட்டிவைத்திருக்கும் பங்கு	,,	46,250
இதர கூட்டுறவு ஸ்தாபனங்களில் பங்கு	,,	2,426
சேம நிதி	,,	20,347
மெம்பர்கள் பேரில் நிலுவை நிற்கும் கடன்	,,	5,81,036
மத்திய வங்கியில் பெற்றுள்ள கடன்	,,	4,78,601

எல்லாவிதமான பாங்கு அலுவல்களும்
விவசாயிகளுக்குத் தேவையான
கலப்பு உரங்களும், இரசாயன உரங்களும்
வினியோகம் செய்து வருகிறோம்.
மற்றும், பவர் ஸ்பிரேயர், டஸ்டர் முதலியன
குறைந்த வாடகைக்கு கிடைக்கும்.

K. சின்னுசாமி,
செயலாளர்.

S. T. பழனிசாமி கவுண்டர்,
தலைவர்.

வாழ்க! வளர்க! கூட்டுறவு!

திரு. ஜி. டி. நாயுடு

கூட்டுறவு என்பது மிகவும் விரும்பத்தக்க அழகான ஓர் வார்த்தை. கூட்டு என்ருல் ஒன்றுடன் ஒன்று சேர் என்று பொருள்படும். இரண்டும் இரண்டும் நான்கு என்பதுபோல கூட்டுறவில் பலருடைய கொள்கைகளையும் ஒன்ருக இணைத்து கிராம முன்னேற்றத்திற்கு பயன்படும்படியாக செய்கிருர்கள். குடும்பம் ஒழுங்காக நடக்கவேண்டும் என்ருல் கணவன்—மனைவியிடையே கூட்டுறவு இருக்கவேண்டும். நிர்வாகம் ஒழுங்காக நடக்கவேண்டும் என்ருல் தொழிலாளர் களுக்கும், முதலாளிக்கும் இடையே கூட்டுறவு இருக்க வேண்டும். தேர்தலில் வெற்றி பெறவேண்டும் என்ருல் தொகுதி வாக்காளர்களுக்கும், பிரமுகருக்கு மிடையே நல்ல கூட்டுறவு இருக்கவேண்டும். மந்திரிகள் தொடர்ந்து பதவியில் இருக்கவேண்டும் என்ருல் சட்டசபை அங்கத்தினருடைய கூட்டுறவு நல்லபடியாக இருக்கவேண்டும். இப்படியாக வாழ்க்கையில் எதை எடுத்துக்கொண்டாலும் கூட்டுறவு தேவைப்படுகிறது.

கூட்டுறவு என்பது நல்லதிற்காக பலர் ஒன்று கூடி கூட்டாக முயற்சி செய்தல் என்று பொருள்படும். இல்லாமை, இயலாமை, தெரியாமை, சிந்தியாமை போன்றவைகளில் மூழ்கிக் கிடக்கும் எளிய மக்களின் பொருளாதார அபிவிருத்திக் காக தோன்றிய ஓர் புனிதமான இயக்கமாகும். தனித்த நிலையில் தம் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள முடியாத ஏழை மக்கள் ஒன்றுபட்ட முயற்சியாலும், கூட்டுப் பொறுப்பாலும், தங்களுடைய தேவைகளை அடைய உதவி செய்வதே கூட்டுறவு இயக்கமாகும். சம உரிமை அடிப்படையில் ஏழை மக்கள் ஒன்று தங்களுடைய பொதுப் பொருளாதாரத் தேவைகளை நிறைவேற்றி நல்ல நலனைப் பெற ஏற்பட்டதே கூட்டுறவு இயக்கமாகும்.

மனிதனுடைய துக்கத்திலும், ஏழ்மையிலும் இருந்து பிறந்ததே கூட்டுறவு ஆகும். துன்பத்தில் சுழன்று வறுமையில் வாடியவர்களே இந்த இயக்கத்தின் உயிர் நாடிகள். முதலாளித்துவத்தில் காணப்படும் போட்டி மனப்பான்மை, சமூகத்தில் உள்ள பொருளாதார ஏற்றத்தாழ்வுகளுமே கூட்டுறவு இயக்கம் தோன்றுவதற்கு அடிப்படைக் காரணங்களாய் அமைந்தன. தாமே விரும்பி ஒன்று சேர்ந்த மக்கள், தங்களுடைய சக்தி, செல்வம் இரண்டையுமோ அல்லது ஒன்றை மட்டுமோ பயன்படுத்தி பொதுப் பொருளாதார முன்னேற்றத்திற்கும், தமது முன்னேற்றத்திற்கும் காரணமாய் இருப்பதே கூட்டுறவு ஆகும்.

கூட்டுறவு என்பது தனிப்பட்ட சக்தியற்ற பலர் ஒன்று சேர்ந்து தாம் ஒன்று சேர்ந்ததினுல் ஏற்பட்ட பலத்தினுல் ஒருவருக்கு ஒருவர் உதவி செய்துகொண்டு, பணக்காரர்களும், பலசாலிகளும் அடையக்கூடிய பொருளாதார முன்னேற்றத்தை அடைவதேயாகும். பலர் ஒன்று சேர்வதால் தன்னம்பிக்கை வலுப்பெறுகிறது. பலருடைய கூட்டுறவால் ஒவ்வொருவருடைய பொருளாதாரமும் முன்னேற்றம் அடைகிறது. கூட்டுறவு இயக்கத்தில் பணத்தைவிட மனிதத் தன்மைக்கே முதலிடம் கொடுக்கப்படுகிறது. கூட்டுறவு இயக்கத்தால் மட்டுமே ஏழை மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தி சமூகத்தில் அமைதியான பொருளாதார புரட்சியை உண்டாக்க முடியும்.

இப்படிப்பட்ட கூட்டுறவு இயக்கத்தின் தந்தையாகவும், பெருநிலக் கிழாராகவும் விளங்கும் திரு. சென்னியப்ப கவுண்டர் அவர்கள் கோவை மாவட்டம் ஈரோட்டைச் சேர்ந்தவர். கூட்டுறவுத் துறையிலும், விவசாயத் துறையிலும் நெடுங்காலமாக பல அரிய சாதனைகள் செய்து அனைவரையும் வியப்பில் மூழ்கடித்தவர். கூட்டுறவை நாட்டுயர்வுக்கு எப்படி பயன்படுத்துவது என்று எடுத்துக்காட்டும் வழிகாட்டி. சாதனைகளின் மூலம் பலரது வேதனையைப் போக்கிய பெரியவர்.

அன்பும், பண்பும் ஒருங்கே அமைந்தவர். எல்லோரிடமும் இனிமையாகப் பேசி பழகக்கூடியவர். தலைவர் என்ற செருக்கு இல்லாமல் எந்த செயலையும் பொறுப்புடன் ஏற்று சிறப்பாகச் செய்யக்கூடியவர். பணத்தையும், பதவியையும் தேடியலையாத உயர்ந்த பண்பாளர். ''போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து'' என்ற எண்ணமுடையவர். தொழில்கள் பல தொடங்குவதற்கு வாய்ப்புகள் பல இருந்தும் அவைகளை உதறிவிட்டு கூட்டுறவு இயக்கத்தின் முழு வளர்ச்சியிலேயே முழு கவனமும் செலுத்தி, அறிவையும், ஆற்றலையும் கூட்டுறவின் வளர்ச்சிக்கென்றே செலவிட்டுவரும் பெருந்தகையாளர், பொது நலப் பணிகள் பல புரிவதுடன் பிறருக்கு உதவி செய்வதிலும் வல்லவர், கூட்டுறவு இயக்கத்தின் தலைவராக பல்லாண்டு காலமாக இருந்துகொண்டு சீரும், சிறப்புமாக பணியாற்றி வருகிறார்.

இவரைப் போன்றவர்களை கூட்டுறவு இயக்கத்தின் தூண்கள் என்றே சொல்லவேண்டும். இவர் இன்னும் பல்லாண்டு காலம் நீடூழி வாழ்ந்து கூட்டுறவு இயக்கத்துக்கும், பொதுமக்களுக்கும் சிறப்பான முறையில் பணியாற்றுவார் என்று நம்புவோமாக. வாழ்க! வளர்க! இவரது பணி! மேலும் ஓங்குக!

கோவையில் நடைபெற்ற 12-வது தமிழ் நாடு கூட்டுறவு மாநாட்டில் சென்னை மாநில கூட்டுறவு வங்கித் தலைவர் திரு. கனகசபை அவர்களுடன் தலைவர் திரு. S. K. C. அவர்கள்

விஞ்ஞான மேதை திரு. G. D. நாயுடுவுடன் கூட்டுறவுப் பெரியார் அவர்கள் அளவளாவுகிறார்

கோயமுத்தூர் கூட்டுறவு அச்சுக்கூட தொழிற்பகுதி கட்டிடத்திற்கு
தமிழக முன்னாள் கூட்டுறவு அமைச்சர் திரு. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் அவர்கள்
அடிக்கல் நாட்டிய பொழுது தலைவர் அவர்களுடன்

முன்னாள் மத்திய துணை மந்திரி திரு. எஸ். கே. டே அவர்கள் கூட்டுறவு அச்சுக்கூடத்தை
தலைவர் அவர்களுடன் பார்வையிடும் காட்சி

திரு. எஸ். கே. சி.

திரு. கே. எஸ். சுப்ரமணிய கவுண்டர்

தமிழகத்தில் நண்பர்கள் ஒருவரை ஒருவர் வாழ்த்திக்கொண்டால் 'எஸ். கே. சி.' கொடு என்று கூறுவதை அடிக்கடி கேட்டிருக்கிறேம். இனிப்பு, காரம், காபி இம்மூன்றையும் குறிப்பதற்குத்தான் இவ்வார்த்தைகள் பயன்பட்டு வந்தது என்று நினைத்திருந்தோம். இயல்பாகவே பழகுவதற்கு இனிப்பாகவும், குற்றம் கண்டவிடத்து கடிவதற்குக் காரமாகவும், விருந்தோம்பலில் முன் வழங்குவதில் காபியாகவும் தோற்றமளிக்கும் கோவை தந்த வள்ளல் திரு. எஸ். கே. சென்னியப்ப கவுண்டரை யாரும் மறக்க முடியாது.

நமது நாடு பண்டையப் பெருமைகளைப் போற்றி நாளும் வளர்ந்து வருவதைப் பார்க்கிறேம். தார்மீகப் பண்புகளைத் தழுவியே வாழ்ந்தாலும் சிற்சில வேற்றுமை காரணமாக ஆங்காங்கு தனித்து நிற்கிறேம். இந்நிலை மாற்றப்படுவற்கு கூட்டுறவியக்கம் துணைபுரிந்து வருகிறது என்று கூறினல் மிகையில்லை. மனிதரின் சீரிய உழைப்புக்கு சிறப்பினை நல்கி, ஒற்றுமை உணர்வுகளை நம்மிடையேத் தேக்கி வளர்ந்து வரும் பாரதத்திற்கு எடுத்துக்காட்டாக கூட்டுறவியக்கம் செம்மை நடைபயிலுகிறது. இந்த மாபெரும் இயக்கத்தின்மீது கொண்டுள்ள பற்று, சாசனத்தின் காரணமாகவும், நாட்டின் பெரிய தலைவர்களும், செயற்கரிய தொண்டர்கள் பலரும், அலுவலர் பலரும் ஒருமுகமான அணியில் நின்று முனைப் பாகப் பணிபுரியும் சீரிய காட்சியைக் கூட்டுறவியக்கத்தில்தான் காணமுடியும்.

மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்ற மேலான தத்துவத்தை தன்னகத்தே கொண்டிருக்கும் செயல் வீரர்தான் திரு. சென்னியப்ப கவுண்டர். கூட்டுறவு இயக்கத்தின் வாயிலாக வேளான்குடி மக்களுக்குத் தேவையானபோது கடன் வழங்கும் நிறுவனங்களில் கோவை மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கியும் சிறப்பாகப் பணியாற்றி வருவதைக் காண முடிகிறது. விவசாயத் துறை மட்டுமல்ல தொழில் துறைகளுக்கும் மத்திய வங்கிகள் உதவி வருகின்றன. நாட்டின் உற்பத்திக்குத் தன்னுலியன்ற பணிகளைச் செய்துவரும் மத்திய வங்கிகளில் கோவை மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கியும் ஒன்ருகும். சீர்மிகு பணிகளை செவ்வனே ஆற்றிவரும் அதன் தலைவர் திரு. எஸ். கே. சி. அவர்களை நாளெல்லாம் – நாடெல்லாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறது.

கோவை மாவட்டம் தென்னகத்தின் 'மான்செஸ்டர்' எனக் கூறுவர். பல்வேறு அரசியல் வித்தகர்கள், தொழில் மேதைகள், சீர்திருத்தச் செம்மல்கள், தத்துவ ஞானிகள் பலரை ஈன்றிருக்கிறது. கோவை மாவட்டம் என்றவுடன் நண்பர் திரு. எஸ். கே. சென்னியப்ப கவுண்டர் நினைவுதான் எழுகிறது. கோவை மாவட்டக் கூட்டுறவு இயக்கத்தின் நிலைக்களமாய் இருப்பவர்க்கு, ஈரோடு நகர் மன்றத்தில் தலைவராகப் பணியாற்றிப் பற்பல தொண்டுகளைச் செய்தவருக்கு அன்னுரைப் பாராட்டுமுகத்தான், அவருக்கு சிலை வடிப்பது மிகவும் பொருத்தமான செயலாகும்.

தமிழகத்தில் பொதுத் தொண்டில் ஈடுபட்டு அயராது உழைத்து வரும், உங்கள் அன்புக்குரியவரும், எனது கெழுதகை நண்பருமான திரு. எஸ். கே. சென்னியப்ப கவுண்டர் அவர்கள் பல்லாண்டு பல்லாண்டு வாழ எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன்.

கண்ணம்மாபுரம் நெசவாளர் கூட்டுறவு ★ ★ ★
★ ★ ★ உற்பத்தி & விற்பனை சங்கம் லிமிடெட்

No. A. A. 419

கொமாரபாளையம் P. O.

நத்தக்காடையூர் (via) ஈரோடு R. M. S.

எங்களிடம் 2/17 பெட்ஷிட்கள் படுக்கை விரிப்பு துண்டு முதலிய ரகங்கள் பல சைஸ்களில் கிடைக்கும். எங்களது தயாரிப்பு தரத்திற்கும் நவீன ரகத்திற்கும் கெட்டிச் சாயத்திற்கும் குறைந்த விலைக்கும் பெயர் பெற்றது

தேவைக்கு வருக அல்லது வரைக

K. துரைசாமிக் கவுண்டர்
தலைவர்

கூட்டுறவே நாட்டுயர்வு! ஸ்தாபிதம்: 1947

சிவகிரி தெற்குப்பாளையம் நேசவாளர் கூட்டுறவு
உற்பத்தி & விற்பனை சங்கம் லிமிடெட், நே. K. 1133

சிவகிரி P. O. ஈரோடு R. M. S.

உங்களின் தேவைக்கு
எங்கள் சங்கத்திற்கு
விஜயம் செய்யுங்கள்

**எங்கள் சங்க ஜவுளிகள்
எல்லா கோ-ஆப்டெக்ஸ்
எம்போரியங்களிலும் கிடைக்கும்**

"சிவடெக்ஸ்"
ஜவுளிகளையே வாங்குங்கள்

V. S. ரங்கசாமி
தலைவர்

திட நெஞ்சம் படைத்தவர்

திரு. நா. மகாலிங்கம், பி. எஸ்ஸி., எம். ஐ. ஈ.

ஈரோடு தாலூக்காவிலுள்ள ஒரு கிராமத்திலே பிறந்தவராதலால் அந்தக் காலத்திலே உயர்ந்த படிப்பு பெறுவதற்கு திரு. எஸ். கே. சி. அவர்களால் முடியாது போயிற்று. இருந்த போதிலும் அவருக்கிருந்த வசீகரத் தன்மையினுல் ஊருக்குத் தலைவராகச் சிறு வயதிலேயே விளங்கினுர்.

இத்துடன் பொது நலத்தில் ஈடுபடும் குணமும் இருந்தபடியால், விரைவில் கிராமத்திலிருந்து ஈரோடு நகர சபைத் தலைவராகப் பணி ஆற்றுதற்காக ஈர்க்கப் பட்டார். இந்தப் பணியால் பொதுமக்களின் அன்பையும், ஆதரவையும் பெற முடிந்தது.

இந்தப் பணியால் இவரிடம் இருந்த இன்னெரு குணம் வெளிப்பட்டு மலர்ந்தது. மற்றவர்களுடன் சுமுகமாக இணங்கவும், நெருங்கிப் பழகவும் ஆன குணம் வெளிப்பட்டு வளர ஆரம்பித்தது. ஆக சேவா உணர்ச்சி, ஒத்துப் போகும் தன்மை, தன்வயப்படுத்துதல் ஆகிய மூன்று குணங்களும் ஒன்று சேர்ந்து இயங்கக் கூடிய நிலையில் எஸ். கே. சி. அவர்கள் சீக்கிரம் இம்முக்குணங்களுக்கும் தகுந்த நிலைக்களமான கூட்டுறவு இயக்கத்தில் கொண்டு சேர்க்கப்பட்டார்.

கூட்டுறவுத் துறையில் திரு. டி. ஏ. இராமலிங்கம் செட்டியார் அவர்களுடைய காலடியைப் பின்பற்றிக் குறிப்பிடத்தக்க வெற்றியுடன் பணியைச் செய்து முடிப் பதற்கு போதுமான "திட நெஞ்சம்" தேவைப்பட்டது. அத்தகைய "திட நெஞ்சம் படைத்தவர்" திரு. எஸ். கே. சென்னியப்ப கவுண்டர் அவர்கள்.

கோவை மத்திய பாங்கினுடைய திறமையான தலைவராக பணி செய்த சிறப்பு திரு. சென்னியப்ப கவுண்டருக்கு உண்டு. மாகாணத்திலேயே சிறந்த பாங்கு என்ற பெயரை கோவைக்கு ஏற்படுத்தினுர்.

இவர்களது கூட்டுறவுச் சேவையைப் பாராட்டும் வகையில் அவரது சிலையை நாட்டவும், அவர்களைப் பற்றிய சிறப்பு மலர் வெளியிடவும் முன் வந்துள்ள குழுவை நான் மனமார பாராட்டுகிறேன்.

திரு. எஸ். கே. சி. அவர்களுக்கு நீண்ட வாழ்வு ஆண்டவன் அளிக்க பிரார்த்திக்கின்றேன்.

———

செம்மல் திரு. S. K. சென்னியப்ப கவுண்டர் அவர்களது உருவச்சிலை
திறப்பு விழாவில் எங்களது இதயபூர்வமான மகிழ்ச்சியை
தெரிவித்துக்கொள்கின்றோம்.

★ புகழ் பெற்ற
★ ★ அழகிய
★ ★ ★ அலங்காரமான
★ ★ ★ ★ தயாரிப்புகள்

எங்கள் சங்கத்தில்
2/17 பெட்சீட்கள்,
வேஷ்டிகள், துண்டுகள்,
தலையணை உறைகள் மற்றும்
எல்லாவிதமான ரகங்கள் கெட்டிச்
சாயத்திலும், அடர்த்தியான நெசவிலும்
சிறந்த ஜவுளிகள் தயார் செய்து
குறைந்த விலையில் விற்பனை செய்து வருகிறோம்.

VELLOTEX

வெள்ளோடு நேசவாளர் கூட்டுறவு
உற்பத்தி & விற்பனை சங்கம் லிமிடெட்
ரெ. K. 1177
V. வெள்ளோடு P. O.
(வயா) ஈரோடு, (கோயமுத்தூர் ஜில்லா)

K. கெட்டிமுத்து
தலைவர்

கைத்தறி துணிகளை ஆதரியுங்கள்

தலைவர்களின் தலைவர்

திரு. ஏ. கே. திருவேங்கடப்ப நாயக்கர்
தலைவர்
ராமநாதபுரம் மாவட்ட கூட்டுறவு மத்திய வங்கி லிமிடெட், மதுரை

கோவை மாவட்ட கூட்டுறவு மத்திய வங்கியின் தலைவராக நீடித்த காலமாக பதவி வகித்து வரும் உயர்திரு. எஸ். கே. சென்னியப்ப கவுண்டர் அவர்களின் திருஉருவச்சிலை அமைத்து திறப்பு விழா நடத்த ஏற்பாடு செய்யும் சீரிய முயற்சிகளை தெரிந்து மிக மிக மகிழ்ச்சியே! கிராமத்தவர் ஒருவர் ஈரோடு நகராட்சி தலைவராக தேர்வு பெற்று சிறப்பாக சேவை செய்திருக்கிறார் என்றால் அதைக் காட்டிலும் அவரைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டியதொன்றுமில்லை. நானும் ஒரு மத்திய வங்கியின் தலைவன் என்ற முறையிலும், மாநில கூட்டுறவு வங்கியில் அவரைப் போன்று இயக்குநர் என்ற முறையிலும் அவருடன் அதிக அளவு நெருங்கி பழகியவன் என்ற முறையிலும் அவரைப் பற்றி சிறிதளவு தெரிந்து கொண்டவனாவேன். திரு. கவுண்டர் அவர்கள் திறந்த உள்ளம் படைத்தவர், எதையும் ஒளிவு மறைவு இன்றி பேசக் கூடியவர்; தான் நினைத்த காரியத்தை பிடிவாதமாக சாதிக்கக் கூடியவர்; ஏழை எளிய மக்களுக்கு உதவ வேண்டுமென்ற கருத்துடையவர்; தான் பதவி வகிக்கும் நிருவனங்கள் செம்மையாகவும், செழிப் பாகவும் இயங்க வேண்டுமென்ற கருத்துடனும் அதே நேரத்தில் அவை மக்களுக்கு உதவி கரமாக இருக்க வேண்டுமென்று கருதக்கூடிய பண்பு உடையவர். தான் நடத்தி வரும், கோவை மாவட்ட கூட்டுறவு மத்திய வங்கி, கோவை கூட்டுறவு அச்சகம், இவைகளை கண்ணுற்றோர்க்கு தெள்ளென சான்று அளிக்கும். கவுண்டர் அவர்கள் ஒரு காங்கிரஸ் அனுதாபியாக இருப்பினும், ஈரோட்டுத் தந்தை பெரியாரின் அன்புக்கு பாத்திரமானவர். பெரியாரும் கவுண்டர் பேரில் அதிக பற்றும், பாசமும் உடையவர் என்பதை சில வருடங்களுக்கு முன்னர் ஈரோடு கூட்டுறவு யூனியன் பொன் விழாவின் போது கவுண்டர் அவர்களுக்கு பொன்னாடை போர்த்தி வாழ்த்தியதையும், கவுண்டர் அவர்களின் சின்னியம்பாளையம் கிராமம்; வையாபுரி தோட்டத்தில் கவுண்டர் அவர்களின் சிறப்பு விருந்தில் கலந்து கொண்டதையும் பார்த்து என் போன்றோர் தெரிந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டது.

எங்கள் மாநில கூட்டுறவு வங்கியின் நிர்வாக இயக்குநர்களிலே என்னுடன் சேர்ந்த சிலரும், திரு. கவுண்டர் அவர்களை தலைவராக பாவித்து நடத்தி வந்திருக்கிறோம் என்பதையும் இந்தச் சமயம் நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஆகவே திரு. கவுண்டர் அவர்களின் உருவச் சிலையை ஈரோடு நகரில் நிறுவுவது மிகவும் பொருத்தமானதாகும். இந்த நன் முயற்சியில் ஈடுபட்டுள்ளோர் அனைவருக்கும் என்னுடைய சொந்த முறையில் நன்றி தெரிவித்துக்கொள்ளு கிறேன்.

சிலை நல்ல வடிவத்தில் அமைந்து, நிறுவும் விழாவும் சிறப்பாக அமைய வேண்டுமென்றும் அதையொட்டி வெளியிடும் மலரும் சிறப்பாக அமைந்து வெளியிட எனது இதயம் கனிந்த வாழ்த்துக்களை கூறிக்கொள்ளுகிறேன். தலைவர் திரு. சென்னியப்ப கவுண்டர் அவர்களும் மக்களுக்கு பிரதியாக நீடித்த காலம் வாழ்ந்து வழிகாட்ட இறைவனை இறைஞ்சுகின்றேன்.

தொலைபேசி எண். 45

மேட்டுப்பாளையம்
கூட்டுறவு அர்பன் பாங்கு லிமிடெட், நெ. 8052

மேட்டுப்பாளையம்

தலைவர்:
திரு. H. N. லிங்கையா கவுடர்

(30—6—1970-ல் உள்ளபடி)

அதிகாரம் பெற்ற முலதனம்	ரூ.	2,00,000
செலுத்தப்பட்ட முலதனம்	,,	1,43,000
காப்பு நிதி	,,	78,000
இதர நிதிகள்	,,	2,48,000
அலுவல் நிதி	,,	12,56,000

தவணை வைப்புகள் (பிக்செட் டிபாசிட்)
வட்டி 5% முதல் 7½% வரை கொடுக்கப்படும்

விபரங்களுக்கு விண்ணப்பிக்கவும்

R. பழனியப்பன்
காரியதரிசி

திருப்பூர்
கூட்டுறவு விற்பனைச் சங்கம் லிமிடெட்
"பொன் விழா ஆண்டு"
1921—1971

புதுமை விவசாயத்திற்கு
"பொழிலகம்" அங்காடி!

நிறைந்த மகசூலுக்கு
"காளை மார்க்" கலப்புரம்!

உழவர்க்கு உதவ
பருத்தி, பஞ்சு அரவை விற்பனை!

50 ஆண்டு காலம்
விவசாயிகளின் துணைவன்!

திருப்பூர் கூட்டுறவு விற்பனைச் சங்கம் லிமிடெட்

வாழிய வாழிய!

திரு. பெ. தூரன்

சீர் பெருகும் கொங்குத் திருநாட்டில் வேளாண்மையே தமது தொழிலாகக் கொண்டு புகழ் பெற வாழும் மக்கள் கணக்கில் அடங்காதவர்களாகும். "என்றும் உழவே இனிது" என்னும் முதுமொழிக்கேற்ப அவர்கள் சலியாது உழைத்து வளம் இல்லாத நிலங்களையும் வளமுள்ளதாக்கி மக்களின் பசிப்பிணியைப் போக்கும் கடமையிலே முன்னிற்கின்றார்கள். கொங்கு வேளாளரின் விவசாயம் எங்கும் பாராட்டுப் பெற்று விளங்குகிறது.

"மேழி பிடிக்கும் கை வேல் வேந்தர் நோக்கும் கை" என்ற தனிச்சிறப்புக்கு இவர்கள் பெரிதும் தகுதி வாய்ந்தவர்களாகத் திகழ்கின்றனர். கொங்கு நாட்டு வேளாளரின் உழைப்பை மிஞ்சியவர்கள் யாரும் இல்லை என்று சொன்னால் அது மிகையாகாது.

அப்படிப்பட்ட பெரும் கீர்த்தி வாய்ந்த மக்களிடையே தோன்றியவர் திருவாளர் எஸ். கே. சென்னியப்ப கவுண்டர் ஆவார்கள். விருந்தினரை உபசரிப்பதிலே வேளாளர்களைப் போல யாரும் இல்லையென துணிவுடன் கூறலாம். சென்னிமலையில் அடியவர்களுக்கு அருள் வழங்கி நிற்கும் சென்னிமலை அப்பன் பெயரைத் தாங்கிய இவரையும், இவர் குடும்பத்தினர் அனைவரையும் நான் நன்கு அறிவேன். உறவினன் என்ற தொடர்பால் மட்டுமின்றி உள்ளத்திலுள்ள அன்பினாலேயே அதிகமாக இவர்களை உணர்ந்து மகிழ்ந்தவன் நான். இவருடைய அடுத்த தம்பியான திரு. எஸ். கே. ராமசாமிக் கவுண்டர் அவர்கள் என்னிடம் மிகுந்த அன்பு கொண்டவர்கள். சென்னை வரும்போதெல்லாம் என்னைப் பார்த்துச் சில வார்த்தைகளாவது பேசிச் செல்லுவதில் அவர் தவறமாட்டார்கள். கடைசித் தம்பியாகிய திரு. எஸ். கே பரமசிவம் எனது அன்பிற்குரிய பழைய மாணவர். இவருடைய பரந்த மனப்பான்மையையும், காந்தீயப் பற்றுதலையும், எளியவர்களுக்குச் சேவை செய்வதில் சலிப்படையாத உள்ளப்பாங்கையும், நாட்டுத் தொண்டையும் எண்ணி எண்ணி நான் பெருமை கொள்வதுண்டு. மருத்துவமனையிலே தாமாகவே சென்று ஹரிஜனங்களுக்கெல்லாம் சிகிச்சை செய்வதில் ஒரு பணியாள் போன்று இவர் சேவை செய்வதைப் பலர் என்னிடம் புகழ்ந்து கூறும்போது என் கண்களிலே தாமாகவே பெருகும் ஆனந்தக் கண்ணீரை நான் முயன்றும் தடுக்க முடிவதில்லை.

திரு. சென்னியப்ப கவுண்டர் அவர்களுடைய அன்பையும், மதிப்பையும் நான் பெற்றவன். இவர்கள் பல ஆண்டுகளாகக் கூட்டுறவுத் துறையில் ஈடுபாடு கொண்டு நல்ல சேவை செய்து வருகின்றார்கள். ஈரோடு கூட்டுறவு யூனியனுக்குத் தலைவராக சென்ற 33 ஆண்டுகளுக்கு மேலும் இருந்து வருகிறார்; கோவை மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கியின் தலைவராகச் சென்ற 15 ஆண்டுகளாகப் பணியாற்றுகின்றார். இவற்றை எண்ணும்போது இவருடைய சேவையின் சிறப்பும், மற்றவர்களை அணைத்துக் கொண்டு செயல்புரியும் ஆற்றலும் நன்கு விளங்காமற் போகாது. ஈரோடு நகராட்சியின் தலைவராகச் சில ஆண்டுகள் இருந்திருக்கிறார். இவற்றின் விளைவாகவே இன்று சிலை எடுக்கும் சிறப்பும் பெற்றிருக்கிறார்.

பொதுவாகக் கூறினால் கொங்கு நாட்டுக் கிராமங்களிலே வாழும் வேளாளர்கள் இந்தக் கூட்டுறவு மனப்பான்மையை இயல்பாகவே கொண்டவர்கள். ஒருவர் வீட்டிலே திருமணம் நடக்குமானால் பலரும் முன்வந்து அந்த நல்நிகழ்ச்சிக்கு உதவி புரியும் வழக்கம் கொங்கு வேளாளர்களிடையே தொன்று தொட்டு இருந்து வருகிறது. உறவினர்கள் பலர் காய்கறிகள் கொண்டுவருவார்கள். பாற்குடம், தயிர்குடம் பல இடங்களிலிருந்து வரும்.

திருமணப் பந்தலை அமைப்பதற்கு உள்ளூரிலுள்ள ஆண்கள் சேர்ந்து செயல் படுவார்கள். பெண்கள் மிளகாய்ப்பொடி, மஞ்சற்பொடி இடிப்பதற்காக வந்து விடுவார்கள். கோலாகலமாக இவ்வாறு கூடி அந்தத் திருமண வைபவத்தில் ஈடுபட்டு அதை நல்ல முறையில் நிறைவேற்றி வைப்பார்கள். இந்தக் கூட்டுறவு மனப்பான்மையை வழிவழியாகப் பெற்றதாலேயே திரு. எஸ். கே. சென்னியப்ப கவுண்டர் அவர்கள் கூட்டுறவுத் துறையிலே நல்ல வெற்றியை அடைந்திருக்கிறார்கள் என்று கூறி அனைவரும் பெருமை கொள்ளலாம்.

"வெட்டெனப் பேசு" என்று பாரதியார் புதிய ஆத்திசூடி பாடுகின்றார். அந்த வாக்கியத்திற்கு இலக்கியமாக இருப்பவர் இவர். எதையும் ஒளிவு மறைவு இன்றி வெளிப்படையாகப் பேசும் குணம் படைத்தவர். ஆனால் நல்ல இதயத்தில் இருந்து அது வெளிவருவதால் குறைப்பட்டுக் கொள்வோரும் பின்னால் அந்த வெளிப் படைப் பேச்சின் உண்மையை அறிந்து பாராட்டுகின்றனர். பரிவும், தயாளமும் படைத்த இவருக்குச் செய்யும் சிறப்பை அனைவரும் வரவேற்பார்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை. இந்தப் பாராட்டுதலால் மேலும்மேலும் அவருடைய சேவை சிறந்தோங்கவேண்டும் என்று வாழ்த்தும் வயது எனக்கு இல்லை. நான் அவருக்கு இளையவன். ஆகவே அவரை வாழ்த்தும்படி இறைவனை வேண்டிக்கொள்கிறேன்.

தந்தை பெரியார் அவர்கள் கூட்டுறவுத் தந்தை அவர்களுக்கு பொன்னுடை போர்த்துகிருர்

ஈரோடு கூட்டுறவு ஒன்றியப் பொன் விழாவின்போது கூட்டுறவுப் பெரியார்
திரு. S. K. C. அவர்கள் திருவுருவப் படத்தை தந்தைப் பெரியார் அவர்கள்
திறந்து வைத்து சொற்பொழிவாற்றும் காட்சி

ஈரோடு கூட்டுறவு ஒன்றிய இயக்குநர்களுடன் திரு. S. K. C. அவர்கள்





24—4—1966-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற
ஈரோடு லோக்கல் கூட்டுறவு யூனியன் பொன் விழாவின்போது

யூனியன் தலைவர்

திரு. S. K. சென்னியப்ப கவுண்டர் அவர்களுக்கு

ஈரோடு கூட்டுறவு யூனியன் மேற்பார்வையாளர்கள்
அளித்த

அன்பு மலர்

திருவார்ந்த உலகத்தின் தெளிந்த வாழ்க்கைத்
திறம்காண நல்லவர்கள் பிறந்தி ருந்தார்
உருவார்ந்த நினைவுகளை உயர்த்தி அன்பாம்
உணர்வூட்டி எதிர்காலம் வகுத்தி ருந்தார்
மருவில்லாப் பொன்னுகும் மனிதர் கூட்டம்
மதிக்கின்ற இக்குடியில் உதித்த அண்ணல்
அருமந்த சின்னியம்பா ளையமே தந்த
அறவடிவின் பெருஞ்செல்வர் சென்னி யப்பர்!

வேளாளர் குலமேன்மை சிறக்க எண்ணும்
வெள்ளைமனம் இவருக்குச் சொந்தம் பெற்ற
தாளாண்மை ஓங்கிவரத் தவரா ஆர்வம்
தகைசான்ற பேரறிவு தருமம் சொந்தம்
வாளார்ந்த செஞ்சொற்கள் வடித்த நெஞ்சில்
வாய்மையுடன் விருந்தோம்பும் பண்பு சொந்தம்
மீளாத கடன்சுமையில் உழவர் கூட்டம்
மீண்டுவர வழிகாணும் சிந்தை சொந்தம்!

வழிவழியாய் செய்ததொழில் உழவென் ருலும்
வளர்த்திட்டார் பொதுச்சேவை இளமை தொட்டே
கழியாத துயர்மேகம் அகற்றி ஏரோர்
கையுயர உழைப்பதிவர் கடமாய்க் கொண்டார்
செழிக்கின்ற சென்னப்ப நாய்க்கன் பேரின்
சீர்பாளை யத்துள்ள சங்கம் சேர்ந்து
விழிப்புற்ற எண்ணங்கள் செயலாய் மாற
விழைந்திட்ட இமயமலை உள்ளம் பெற்ருர்!

ஈரோட்டில் நீதிதரும் பஞ்சா யத்தில்
இவர்தலைமைப் பதவியினை வகித்தி ருந்தார்
ஊரோடே ஒப்பவரும் வாழ்வைக் காண
உயர்நகரச் சபைத்தலைவ ராயி ருந்தார்
நீரோடும் காவிரியாய் நிறைந்த சீர்மை
நிலைநாட்டும் நற்பணியை மேலும் செய்ய
சீரோடும் கூட்டுறவாம் இணைப்பில் இந்தச்
சிங்கமின்று தலைவராய் உள்ளார் கண்டோம்!

கூட்டுறவு மத்தியநல் வங்கி தன்னில்
கோவையிலே துணைத்தலைவர் பதவி பெற்றார்
நாட்டுயர்வின் வழிநாடும் தலைவ ராக
நடுநிற்கும் பதவியினை இன்று பெற்றார்
பாட்டறியும் புலவனென வழிந டத்தும்
பணியதிலே பெருவருவாய் வங்கி காணும்
வாட்டமிலா கோவையிலே அச்சுக் கூடம்
வளர்க்கின்ற கூட்டுறவின் தலைவர் ஆனார்!

சென்னைமா நிலத்தின்கூட் டுறவு வங்கிச்
செயற்குழுவின் உறுப்பினராய்ச் செம்மல் உள்ளார்
பின்னுள்ள நண்பர்கள் பெருமை கொள்ளப்
பெற்றுவரும் பதவிகளில் சிறப்ப தோடு
மின்னிவரும் ஆர்ப்பாட்டம் ஒழித்து நன்கு
மேன்மையுறும் எளியமுறை வாழ்க்கை கொண்ட
அன்புடையார் திருமுகத்தில் அருளின் தோற்றம்
அவர்இதயம் நம்பிக்கை அளிக்கும் செல்வம்!

கற்றதினு லாயபயன் இறைமேற் பக்தி
கனிவார்ந்த இவருக்கே அதிகம் உண்டு
உற்றவர்கள் குறிப்புணர்ந்தே உதவி செய்யும்
உயர்வான நோக்கங்கள் நிறைய உண்டு
மற்றவர்கள் வாழ்வுயரத் தன்னு லான
மட்டற்ற தொண்டுகளைச் செய்தல் மூலம்
இற்றைநாள் ஈரோட்டின் இதயம் வாழ்த்தும்
இனிமைசால் பெரியவரே சென்னி யப்பர்!

அஞ்சாமை, ஈகைநல் லறிவோ டூக்கம்
அறம்பேணும் திறம்கொண்ட குணத்தின் குன்று
எஞ்சிவரும் சேவைகளில் இளைத்தா ரில்லை
எந்நாளும் பொதுநோக்கம் கொண்டே நல்ல
செஞ்சாந்தின் நறுமலராய் மணந்து நாளும்
சிறப்பான பெருவாழ்க்கை அடைந்து வாழ
நெஞ்சார இறையடியை வணங்கு கின்றோம்
நெடுங்காலம் வாழ்ந்திடவே வேண்டு கின்றோம்!

தகைமிகு தலைவர்

புலவர் குழந்தை

" தோன்றிற் புகழொடு தோன்றுக " என்பது வள்ளுவர் வாய்மொழி. அஃதாவது, உலகில் ஒருவன் பிறக்கின் புகழுக்கேதுவாகிய குணத்தோடு பிறக்க வேண்டும் என்பதாம். ஒருவன் புகழுக்கேதுவாகிய குணத்தோடு எப்படிப் பிறக்க முடியும்? பிறக்கும்போது இன்ன இன்ன குணங்களோடு நாம் பிறக்கப் போகிறோம் என்பது நமக்குத் தெரியுமா என்ன? அவ்வாறு தெரிந்தாலன்றோ அத்தகைய குணத்துடன் பிறக்க முடியும். பிறக்கும்போதே அத்தகைய குணத்தோடு பிறக்கவேண்டும் என்பதன்று இதன் பொருள். உலகின் கண் ஒருவன் பிறக்கின் அவன் புகழுக்கேதுவாகிய குணமுடையவனாக இருக்க வேண்டும் என்பது இதன் கருத்தாகும். அஃதாவது, இவ்வுலகில் பிறந்த ஒருவன் நற்செயல்கள் செய்து பிறரால் புகழத்தக்கவனாக வாழ வேண்டும். அத்தகைய குணம் உடையவனாக இருக்க வேண்டும் என்பது இதன் உள்ளுரை பொருளாகும்.

இவ்வுலகிற் பிறந்து அவ்வாறு புகழுக்கேதுவாகிய குணத்தோடு வாழ்பவனே, " வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் " எனப்படுவான், " வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் " என்று உலகத்தாரால் புகழப்படுவான். புலவர் பாடும் புகழுடைவோனாய்த் திகழ்வான். அங்ஙனம் புகழுக்கேதுவாகிய குணத்தோடு பொருந்த வாழாதவர், இவ்வுலகில் பிறப்பதினும் பிறவாமையே நல்லது என்கிறார் வள்ளுவர். " தோன்றிற் புகழொடு தோன்றுக, அஃதிலார் தோன்றலின் தோன்றாமை நன்று " என்பது அக்குறள். " ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால் பொன்றாது நிற்ப தொன்றில்லை " யாகலான், புகழ்பட வாழாதவர் இவ்வுலகிற் பிறந்தும் பிறப்பின் பயனாகிய புகழைத் தேடிக்கொள்ளாமையால், அத்தகையோர் பிறப்பினால் பயனில்லை என்பதையே வள்ளுவர் " அஃதிலார் தோன்றலின் தோன்றாமை நன்று " என்றார்.

செல்வம், இளமை, யாக்கை என்பன உலக வாழ்க்கையின் ஏதுப்பொருள் களாகும். இவற்றுள் செல்வம் நிலையுடையதன்று. அச்செல்வத்தினால் இன்பம் நுகரும் இளமை நிலையுடையதன்று. அவ்வின்பம் நுகர்தற்குக் கருவியான யாக்கையும் நிலையுடையதன்று. என்றும் அழிவில்லாது நின்று நிலைபெறுவது புகழொன்றேயாகும். ஒருவனுக்குப் பொன்றாது–அழியாது–நிற்பது புகழ் ஒன்றேயாகும். எனவே, உலகில் பிறந்த ஒருவன் செல்வநிலையாமை, இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை ஆகிய நிலையாமையை உணர்ந்துதான் பொன்றினும் பொன்றாது நின்று நிலவும் புகழைத் தேடிக்கொள்ள வேண்டும். புகழின்றி இவ்வுலகில் வாழ்வதைவிட அவன் பிறவாமையே நல்லதாகும் என, மக்கட் பிறப்பின் பயனை வள்ளுவர் இவ்விரு குறள்களாலும் விளக்கமாகக் கூறியுள்ளார்.

புகழுக்கேதுவாகிய குணச்செயல்கள் யாவை? அத்தகைய அரும்பெருஞ் செயல்களைச் செய்து புகழ்பட வாழ்ந்தவர், வாழ்கின்றவர் யார் யார்? தனக்குச் சொந்தமான பறம்பு நாட்டு முந்நூறு ஊர்களையும் புலவர்க்குக் கொடுத்து தன் தாய் மொழியாகிய தமிழை வளர்த்துப் பொன்றாப் புகழை எய்தினான் சங்க கால

வள்ளல்களில் ஒருவனுன பறம்பிற் பாரி. அரிதிற் கொண்ட அமிழ்தன்ன அரு நெல்லிக்கனியை ஔவைக்குக் கொடுத்து அழியாப் புகழ் கொண்டான் தகடூர் நாட்டு அதியமான் நெடுமான் அஞ்சி. பெருந்தலைச்சாத்தனுர் என்னும் புலவர் பெருமகனுக்குத் தன் தலையைக் கொடுத்து விலையிலாப் புகழைப் பெற்றுன் முதுரை நாட்டுக் குமணன். இவ்வள்ளல்கள் பெற்ற இப் புகழ், கொடையாற் பெற்ற புகழாகும்.

தமிழரைப் பழித்த வடவராகிய கனகவிசயரை வென்று, அன்னுர் முடித் தலையில் இமயக் கல்லேற்றி வந்து மங்காப் புகழ் பெற்றுன் சேரன் செங்குட்டுவன். இது வீரத்தால் பெற்ற புகழாகும். முடியுடைய மூவேந்தரும் இமயத்திற் புலி விற்கெண்டை பொறித்ததும், இராசேந்திரச்சோழன் கங்கையும் கடாரமும் கொண்டதும் வென்றியாற் பெற்ற புகழாகும்.

ஆராயாது கோவலனைக் கொன்றது குற்றமெனக் கண்டதும் அரசுக் கட்டிலில் இருந்தவாறே உயிர்விட்டு, வளைந்த செங்கோலை நிமிர்த்துப் பொன்ருப் புகழ் கொண்டான் பாண்டியன் நெடுஞ்செழியன். அயலார் வீட்டுக் கதவைத் தட்டியது குற்றமெனக் கண்டதும் கதவு தட்டிய அக்கையைக் குறைத்துப் புலராப் புகழ் கொண்டான் பொற்கைப் பாண்டியன்.

இது செங்கோன்மையாற் பெற்ற புகழாகும். தன் கணவன் அரசுக் கட்டிலில் துஞ்சியதும் உடனுயிர் நீத்துக் குன்ருப் புகழ் பெற்ருள் கோப்பெருந்தேவி. கணவனை இழந்ததும் உண்ணுதிருந்து உடனுயிர் நீத்து உலவாப் புகழ்கொண்டாள் வீரமா பத்தினி கண்ணகி. இது அன்பால் பெற்ற புகழாகும்.

பகைவனின் சிறைக்காவலன் தண்ணீர் கேட்கத் தாழ்த்துக் கொடுவந்ததால் அந்நீரைப் பருகாது உயிர்விட்டு உலவாப் புகழ் பெற்றுன் கணைக்காலிரும்பொறை என்னும் சேரமன்னன். தன் மக்கள் தன்னுடன் பொர எழுந்தது கண்டு மனம் பொறுது உண்ணுதிருந்து உயிர்விட்டு அழியாப் புகழ் பெற்றுன் கோப்பெருஞ் சோழன். இது மானத்தாற் பெற்ற புகழாகும். காவிரிக்குக் கரைகட்டிச் சோழவள நாட்டைச் சோறுடை நாடாக்கித் தொலையாப் புகழ் பெற்றுன் கரிகால் வளவன். இது உதவியால் பெற்ற புகழ்.

தமிழர் வாழ்க்கைச் சட்ட நூலாகிய உலகப் பொது நூலாகிய ஒப்புயர்வற்ற திருக்குறளைச் செய்து வான்புகழ் கொண்டார் வள்ளுவர். இது புலமையால் பெற்ற புகழ். அறிவுரை கூறி மக்களின் மடமையைப் போக்கியதால் நஞ்சூட்டிக் கொல்லப்பட்டு நந்தாப் புகழ் கொண்டார் சாக்ரட்டீஸ். இது அறிவால் பெற்ற புகழ். நிறவேற்றுமைக் கொடுமையைப் போக்க முனைந்து முயன்று குண்டுக்கிரை யாகிக் குன்ருப் புகழ் பெற்ருர் ஆப்ரகாம் லிங்கனும், உலகப் பெரியோன் கென்னடியும். இது அருளால் பெற்ற புகழ்.

அடிமை வாழ்வை அகற்ற வெள்ளை ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடித் தம் இன்னுயிரைத் தூக்குக் கயிற்றுக்கிரையாக்கித் தொலையாப் புகழ் கொண்டார் சர்தார் பகவத் சிங் முதலிய பாரத வீரர்கள். வெள்ளையரைக் கோவைக் கோட்டத் துக்குள் விடாமல் ஐந்தாண்டுகள் அதனையாண்டு, வஞ்சனையால் பிடிபட்டுத் தூக்குக் கயிற்றை முத்தமிட்டுப் பொன்ருப் புகழ் கொண்டான் தீரன் சின்னமலை. இது நாட்டுப் பற்றுலும் விடுதலை வேட்கையாலும் பெற்ற புகழ்.

தாய் நாட்டு விடுதலைக்காக அயராது உழைத்து அல்லல் பல உற்று அரும் புகழ் பெற்றார் அண்ணல் காந்தியடிகள். மூடப்பழக்கத்தில் மூழ்கிக் கிடந்த தமிழ் மக்களுக்குப் பகுத்தறிவூட்டி விழித்தெழச் செய்து அழியாப் புகழ் பெற்றனர் தந்தை பெரியாரும், அறிஞர் அண்ணாவும். இது பொதுத் தொண்டால் பெற்ற புகழ்.

இவ்வாறு கொடை, வீரம், வெற்றி, செங்கோன்மை, அன்பு, மானம், உதவி, புலமை, அறிவு, அருள், நாட்டுப் பற்று, விடுதலை வேட்கை, பொதுத் தொண்டு முதலிய நற்செயல்கள் புகழுக்குக் காரணமாகும். இத்தகைய நற் செயல்கள் செய்வோரை மக்கள் போற்றிப் புகழ்வர். போற்றிப் புகழ்வதோடமை யாது தங்கள் தலைவராகக் கொள்வர். கொண்டு, அவர்தம் சொற்படி நடப்பர். அத்தகைய தலைவர், ''புகழொடு தோன்றிய தகைமிகு தலைவர்'' எனப்படுவர். இவருள், சமயத்தலைவர், அரசியல் தலைவர், சமூகத் தலைவர், நாட்டுத் தலைவர், ஊர்த் தலைவர் முதலிய எல்லாத் தலைவர்களும் அடங்குவர்.

ஒரு தலைவர்க்குள்ளத் தகுதி, தம் தலைமையின்கீழ் உள்ளவர்களைத் தகவுற நடத்தலும், அன்னார்க்கு ஆவன செய்தலும், இத்தகு தகுதியுடைய தலைவரைத் தலைவராகப் பெற்றோமே என அன்னார் பெருமையாகக் கூறிக்கொள்ளும்படி நடந்துகொள்ளுதலுமேயாம். ஒரு படைத்தலைவனுக்கு உள்ள ஆற்றலும், அன்பும், தகுதியுமுடையவர்களே தகுதியுடைய மக்கள் தலைவராவர். மேலே எடுத்துக் காட்டிய தலைவர்களெல்லாம் இத்தகுதியுடைய தலைவர்களேயாவர் என்பதை ஓர்ந்தறிக.

இத்தகைய தகுதியுடைய மக்கள் தலைவர்களுள், நம் எஸ். கே. சென்னியப்ப கவுண்டர் அவர்கள் ஒருவராவார். திருவாளர் எஸ். கே. சென்னியப்ப கவுண்டர் அவர்கள் தம் வாழ்வையே பொதுநல வாழ்வாக ஆக்கிக் கொண்டவர், தம் வாழ்க்கையைப் பொதுநல வாழ்க்கையாகவே தொடங்கியவர் எனலாம். ''தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர்'' என்பது இவர்க்கு அப்படியே பொருந்தும். பொதுநலத்தொண்டில் அவ்வளவு ஆர்வமும் அக்கறையும் உடையவர், பொது வாழ்வைத் தம் குடும்ப வாழ்க்கையாகவே கொண்டவர். ஏழை எளியவர்கட்கு உதவுவதில் அளவு கடந்த அக்கரையுடையவர், ஒன்றை நாடித் தம்மிடம் வந்தவரை அன்போடு வரவேற்று, அவர் விரும்புவதைத் தம்மால் இயன்றவாறு உதவி மகிழ்விக்கும் பெருங்குணச் செம்மல் ஆவர். யார் எதை வேண்டிச் செல்லினும், என்னால் இது முடியாது என்று சொல்வது அன்னார் தம் வழக்கமன்று. பிறர் காரியத்தைத் தம் காரியமாகவே மேற்கொண்டு செய்யும் அருங்குணம் வாய்க்கப் பெற்றவர் நம் சென்னியப்ப கவுண்டர் அவர்கள். எப்போதும் யாராவது ஒருவர்க்கு உதவுவதையே பொழுதுபோக்காகக் கொண்டவர் இவர் எனில் மிகை யாகாது. இவரை எப்போதும் தனிமையில் கான்பதே மிக அரிதாகும். எப்போதும் தம்பால் உதவி நாடிவந்த பலருடனேயே இவரைக் காணலாகும்.

ஏழை எளியவர்க்கு உதவுவதற்காக ஏற்பட்டதே கூட்டுறவுத் துறை. இவர் அத்துறையைத் தம் வாழ்க்கைத் துறையாகக் கொண்டார். இவரது பொது வாழ்வுத் தொடக்கமே கூட்டுறவுத் துறையிலேதான் தொடங்கிற்று. ஈரோடு கூட்டுறவு ஒன்றியத் தலைவராக முப்பத்து மூன்று ஆண்டுகட்கு மேலாக இருந்து ஏழை எளிய உழவர் பெருமக்கட்கு இயன்ற உதவி செய்து வருகிறார். எளியவர் கட்குதவுவதில் சட்டத்தைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டிராமல் தலைவர்க்குரிய தகுதிக்கேற்ப உதவி அன்னாரின் அன்பைப் பெற்றதனாலேயே 33 ஆண்டுகளாக அதன் நிலையான தலைவராக இருந்து வரலானார்.

இவர் தனது ஒன்றியத்தை மிக்க திறமையாகவும், தகுதியாகவும் நடத்தி கோவை மாவட்டத்திலுள்ள மற்ற ஒன்றியங்களுக்கெல்லாம் எடுத்துக்காட்டாக நடத்தி, கோவை மாவட்டக் கூட்டுறவுத் தலைவர்களின் அன்பையும், ஆதரவையும் பெற்றதால், நம் கவுண்டர் அவர்கள், கோவை மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றனர். அம்மத்திய வங்கியின் இயக்குநர்கள் உவக்கும் வகையில், மிக்க திறமையோடு அவ்வங்கியை நடத்துந் திறமையால், தலைவர்க்கேற்ற தகுதியால் 15 ஆண்டுகளாகத் தொடர்ந்து தலைவராக இருந்து வருவாராயினர்.

நம் கவுண்டர் அவர்கள் பேசுவதை முதல் முதல் கேட்கும் ஒருவர் "என்ன இவர் இவ்வளவு சிடுசிடுப்பு, கண்டபடி பேசுகிறுரே," என்று வெறுப்புக்கொள்ள நேரும். ஆனல், அவர் நாடிச் சென்றதை யாதொரு தடையும் இன்றி நிறைவேற்றி தந்த பின் அவர், "இதற்கு இவ்வளவு நல்ல தலைவர் வாய்க்கப் பெற்றனரே" என்று பாராட்டிச் செல்வர். இத்தகைய அரும்பெருங்குணமே—"வெங்காரம் வெய்தெனினும் நோய் தீர்க்கும்" என்னும் சொல்லிற் சிடுசிடுப்பும், செயலில் விறுவிறுப்புமான தன்மையே இவர் அவ்வங்கியில் நிலையான தலைவராக இருந்து வருவதற்குக் காரணமாகும்.

தம் தலைமைக்குட்பட்டவர்களை அரவணைத்துச் செல்வதோடு, அவர்களை அடக்கியாளுந் திறனும் ஒரு தலைவர்க்கு இன்றியமையாததாகும். இது, நம் சென்னியப்ப கவுண்டர் அவர்களிடம் இயல்பாக அமைந்துள்ள ஒன்ருகும். எத்தகைய எதிர்ப்பையும் கண்டு அயராத அஞ்சா நெஞ்சமுடைய இவர், தம் தலைமையின்கீழ் உள்ளவர் எதிர்ப்பை ஒரு சிறிதும் பொருட்படுத்தாது தமக்கு நன்றெனத் தோன்றியதைத் தம் விருப்பப்படியே செய்வர். அதனல், இவர் தலைமைக் கீழ்ப்பட்ட எந்த நிறுவனமும் எந்த இடையூறுமின்றி இயல்பாக நடை பெற்று வரும்.

இதற்கு எடுத்துக்காட்டாக, இவர் ஈரோடு நகர் மன்றத் தலைவராக இருந்த போது, நகர் மன்றக் கூட்டத்தில் நிறைவேற்றப்படும் திட்டங்களை—தீர்மானங்களை படிக்கச் செய்து நிறைவேற்றிக் கொண்டுசெல்வார். வேண்டுமென்றே ஒரு உறுப்பினர் குறுக்கே ஏதாவது பேச எழுந்தால் 'சரி உட்காரும்' எனக் கூறிவிட்டு மேலே தொடர்ந்து எல்லாத் தீர்மானங்களையும் எதிர்ப்பின்றி நிறைவேற்றி விடுவார். இத்தகைய திறமையால் இவர் தலைவராக இருந்த காலத்தில், ஈரோடு நகர் மன்றக் கூட்டங்கள் மிக்க அமைதியாகவும், ஒழுங்காகவும் நடந்து வந்தன. தமக்கு சரியெனப் பட்டதைச் செய்து நகர மக்களை மகிழ்வித்து வந்தனர்.

"உடுக்கை யிழந்தவன் கைபோல ஆங்கே—இடுக்கண் களைவதாம் நட்பு" என்னும் வள்ளுவர் குறளுக்கு எடுத்துக்காட்டாக உள்ளவர் நம் கவுண்டர் அவர்கள், நண்பர்களுக்கு உதவுவதில் தன்னிகரில்லாத் தலைவராவார். நண்பர்க் குள்ள குறையைத் தங்குறையாகவே கொண்டு உதவுவதில் அவர்க்கு அவரே நிகராவார். அதனல் நாட்டில் இவர்க்கு நண்பர்கள் மிகலாயினர் என்பது மிகையாகாது.

இத்தகைய தகுதியும், சிறப்புமுடைய நம் சென்னியப்ப கவுண்டரவர்கள், நாட்டு மக்கட்குப் பயன்படும் வகையில் நலமிகு தலைவராக நீடு வாழ்கவென வாழ்த்துகின்றனன். அன்னரின் இம்மலரின் மணம் போல் அன்னரின் மனம் மணம் கமழ்வதாக!

கருத்துரை

திரு. பி. குப்புசாமி, ஐ. பி. எஸ்.
காவல் துறை ஆணையாளர்
சென்னை - 8

திரு. எஸ். கே. சென்னியப்ப கவுண்டர் அவர்களைத் தெரியாதவர்கள் அப்பக்கத்தில் யாரும் இருக்க முடியாது. அவரது அம்சம் எத்தகையது என்றால், யாருக்கும் அஞ்சாமல், தம் மனதில் பட்டதை மாற்றி மற்றவர் மனம் மகிழ வேண்டும் என்றும், பொய் சிறிதும் இல்லாமல், உள்ளதை உள்ளபடி, வெட்டு ஒன்று, துண்டு இரண்டு என்று சொல்லுவார்களே அப்படிச் சொல்லும் திறன் வாய்ந்தவர். பொது நலனுக்காகத் தாம் ஒத்துக்கொண்டுள்ள பணிகள் அனைத்தையும் திறம்படச் செய்பவர். பொது நலனில் மிக்க அக்கரை உள்ளவர். அதனாலேயே கூட்டுறவு இயக்கத்தில் பங்கு எடுத்துக்கொண்டு, தீவிரமாகப் பாடுபட்டு நற்பெயர் எடுத்துள்ளார். கூட்டுறவு பற்றி கோவை மாவட்டத்தில் பேசவேண்டும், எழுதவேண்டும் என்றால் திரு. சென்னியப்ப கவுண்டர் அவர்களை மறந்துவிட்டு எழுத இயலாது. கூட்டுறவை ஆரம்பத்தில் கண்டவர், அதனை வளர்த்தவர், அதன் தற்போதைய வளர்ச்சியை கண்டு களிப்பவர்.

எனக்கு சிறுவயது முதற்கொண்டே அவரை நன்கு தெரியும். என் மாமனாருக்கும் அவருக்கும் மனபேதங்கள் இருந்ததுண்டு. ஆனால் திருவாளர் சென்னியப்ப கவுண்டர் என்னிடம் எப்போதும் அன்புள்ளவராகவே இருந்தார். அதாவது மன வித்தியாசங்களை, நட்பிற்கும், அன்பிற்கும் குறுக்கே விடாத நல்லெண்ணம் படைத்தவர்.

கூட்டுறவு முறை இந்தியாவில் பல மாகாணங்களில் நன்கு நடை பெறுவது இல்லை என்பது நமக்குத் தெரியும். ஆனால் நம் மாகாணத்தில் கோவையில் அம்முறை முன்னேறியுள்ளது. அதற்குக் காரணம் திரு. சென்னியப்ப கவுண்டரைப் போன்றவர்கள் தூண்போல் நின்று இயக்கத்தை முன்னணிக்குக் கொண்டு வந்ததேயாகும்.

திரு. சென்னியப்ப கவுண்டருக்கு சிலை எடுக்க முனைந்தது மிக நல்ல செயல். அதைத் துவக்கியவர்களை நான் வாழ்த்துகிறேன். திரு. சென்னியப்ப கவுண்டர் பெயரும் புகழும் மேன்மேலும் வளர்க! வாழ்க!

THINGALUR TEX

HANDLOOM FABRICS

Producers of

2/20s
BEDSHEETS
BATH TOWELS
SHIRTINGS
AND
FURNISHING
FABRICS ETC.

2/40s, 2/60s
SPECIAL DIAMOND
DHOTHIES
20s, 26s, 40s
DHOTHIES, PIECES
AND
KERCHIEVES ETC.

THINGALUR WEAVERS' CO-OPERATIVE PRODUCTION & SALE SOCIETY LTD.

No. K. 849

THINGALUR P. O.

(Via) Perundurai Coimbatore Dt. (S. India)

Sales Depot Phone: 248

144, EASWARAN KOIL STREET

ERODE



திருஉருவச் சிலைத் திறப்பு விழாக் கமிட்டித் தலைவர்
திரு. K. P. சண்முகம் பிள்ளை அவர்கள்

கூட்டுறவு மத்திய வங்கியின் வைர விழாவிற்கு வருகை தந்த
மாண்புமிகு K. S. இராமசாமி அவர்களுக்கு தலைவர் மாலை அணிவித்து வரவேற்கிறார்

மத்திய வங்கியின் வைர விழா நிகழ்ச்சிக்கு வருகை புரிந்த
மாண்புமிகு அமைச்சர்கள் S. J. சாதிக் பாட்சா, K. S. இராமசாமி, அன்பில் தருமலிங்கம்
ஆகியவர்களுடன் தலைவர் திரு. S. K. C. அவர்கள்

ஈரோடு கூட்டுறவு ஒன்றிய பேரவையினருடன் திரு. S. K. C. அவர்கள்



ஈரோடு கூட்டுறவு ஒன்றிய அலுவலர்களுடன் தலைவர் திரு. S. K. C. அவர்கள்

திரு. S. K. C. அவர்களின் சிலை அமைப்பிற்கு விழாத் தலைவரிடம் ஊழியர்கள் சார்பில் ஈரோட்டில் நிதி அளிக்கும் காட்சி

நம் தலைவர்

திரு. R. வெங்கட்டராமன். முரளி.
முன்னாள் கோவை கூட்டுறவு அச்சக நிர்வாக உறுப்பினர்

திரு. எஸ். கே. சென்னியப்ப கவுண்டர் அவர்கள் இளமையில் ஈரோடு பள்ளியில் படித்துக் கொண்டிருந்தபோது என் மைத்துனருடன் சினேகம் கொண்டார். இளமையில் மிகுந்த வேட்டைப் பிரியர். நல்லார் பலருடன் கூடி வாழ்ந்து மகிழ்வெய்தி பொழுதைக் களிப்பார். போக்குவரத்து வசதியில்லாத காலத்தே தலைவரவர்கள் இங்கு அடிக்கடி வேட்டைக்கு வந்துள்ளார். அதன் பயனாக நானும் அவருடன் சினேகம் கொண்டேன். அதன் பின் சுமார் 50 ஆண்டு காலமாக என் குடும்ப நண்பராக இருந்து வருகிறார். ''விளையும் பயிர் முளையிலே தெரியும்'' என்ற வேளாண்மை முதுரைக் கொப்ப தலைவர் அவர்களைப் பற்றி சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பே கணித்த ஒரு கணக்கு கடந்த பல ஆண்டுகளாக நான் அவரிடம் பழகிய பழக்கத்தில் இருந்து உண்மை புலனாயிற்று.

இளமைக் காலத்தே குற்றங்காணின் கடுங்கோபங்கொண்டு பேசுவார். ஆனால் அதே சமயத்தில் உள்ளன்போடு அறிவுரை கூறும் சிறந்த மனிதாபிமானி. கோபமுள்ள விடத்தேதான் குணமிருக்கும்.

உண்மை, நேர்மை, திண்மை, திறமை ஆகிய உயர் குணங்கள் பல பெற்றவர். சுயநலமற்ற நேர்மையோடு செயலாற்றுபவரைக் கண்டாலே தலைவருக்கு அலாதிப் பிரியம். அக்குணங்களை உடையோர்க்குத் தன்னாலான உதவிகளைச் செய்யத் தயங்கமாட்டார். எளியவர்களின் பேரில் மிகவும் இரக்கமுள்ளவர். எளியவர்க்குத் தன்னாலான உதவிகளைச் செய்வதில் அதிக ஆர்வங் கொண்டவர். தனக்கு நேர்மையெனத் தோன்றும் எக்காரியத்தையும் பல எதிர்ப்புச் சக்திக்கிடையிலும் செய்தே தீரும் அஞ்சா நெஞ்சுரம் கொண்டவர். தலைவர் அவர்கள் மிக்க ஞாபக சக்தியும், சொல் வலிமையும் உடையவர். அவர் செயலாற்றும் ஒவ்வொரு காரியமும் பிறருக்குப் பயனளிக்கக் கூடியதாகவே இருக்கும்.

கோவை மாவட்ட கூட்டுறவு மத்திய வங்கியின் தலைவராகச் செயலாற்றி வருவது கோவை மாவட்ட கூட்டுறவு விவசாயிகள் செய்த பெரும் பாக்கியமேயாகும். ஏனெனில் கூட்டுறவு விவசாயிகளின் கோரிக்கைகளையும், தேவைகளையும் அவ்வப்போது கூட்டுறவு மத்திய வங்கியின் மூலம் வழங்கி வருவதேயாகும். சுயநலமற்ற நேர்மையுள்ள கூட்டுறவாளர்களிடமும், பணியாளர்களிடமும் மிக்க அன்பு கொண்டவர். தங்கள் குற்றங்களை மனதார ஒப்புக்கொண்டு உதவி கோருபவர்களுக்குத் தன்னாலான உதவி செய்யக்கூடிய இளகிய மனது படைத்தவர்; பொய் பேசுபவர், புறம் பேசுவர், நேர்மையற்றவர் எனத் தலைவரவர்களுக்குத் தெரிந்தால் அவர்களுக்கு எவ்வித உதவியும் செய்யமாட்டார்.

ஈரோடு கூட்டுறவு யூனியன், கோவை மாவட்ட கூட்டுறவு மத்திய வங்கி, கோவை கூட்டுறவு அச்சகம் இவைகளின் தலைவராகவும், சென்னை மாநில கூட்டுறவு வங்கியிலும் இன்னும் பல கூட்டுறவு ஸ்தாபனங்களிலும் நிர்வாகசபை

உறுப்பினராகவும் பல ஆண்டுகள் பங்கு கொண்டு மிகவும் திறமையாகவும், பலரால் போற்றக்கூடிய முறையிலும் பணியாற்றி வருகின்ருர். 70 ஆண்டுகள் நிரம்பியுள்ள இக்காலத்தும் கூட்டுறவுத் துறையில் சோர்வின்றி அயராது பணி புரிவது மிக மிகப் பாராட்டுதலுக்குரியது.

விருந்தோம்பலில் அண்ணுரைப் போன்றவர்களைக் காண்பதரிது. தலைவர் அவர்கள் குடும்பத்தினரும் அப்படியான உயர்குணம் படைத்தவர்கள். குழந்தை களின் பேரில் மிக மிகப் பிரியமுள்ளவர்கள் நம் தலைவர்.

"கூட்டுறவே நாட்டுயர்வு" என்ற உயர் நோக்கில் உறுதி கொண்டு பல்லாண்டு காலம் இறையருளில் நீடுழி வாழ்ந்து தனக்கும், இந்நாட்டிற்கும், இம்மாவட்டத்திற்கும் நீடு புகழ் பெற்றுத்தந்து சீரும், சிறப்புமாக பல்லாண்டு வாழ இறைவனை வேண்டுகிறேன்.

விசயமங்கலம் தொழிலியல்
கைத்தறி நெசவாளர் கூட்டுறவு
உற்பத்தி & விற்பனை சங்கம், லிமிடெட், A. A. 245

விசயமங்கலம் (அஞ்சல்)
ஈரோடு (வட்டம்) கோயமுத்தூர் மாவட்டம்

தமிழ் நாடு மாநில கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின்
எல்லா விற்பனை நிலையங்களிலும்
எங்கள் சங்க ஜவுளிகள்
கிடைக்கும்

எப்பொழுதும்

"வின்டெக்ஸ்" பெட்ஷீட்

ரகங்களையே வாங்குங்கள்

T. P. பஞ்சாபகேசன் — செயலாளர்

V. C. சின்னசாமி — தலைவர்

திருக்குறள் தரும் எம் தலைவர்

திரு. ஏ. எம். பழனிசாமி, பி ஏ.
பொருளாளர்
கோவை மத்திய கூட்டுறவு வங்கி
திருப்பூர் கிளை, திருப்பூர்

திறனல்லா தற்பிறர் செய்யினும்நோ நொந்தறனல்ல செய்யாமை நன்று

ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கலாற்றின் எருமையும் ஏமாப்புடைத்து

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு குறையென்று வைக்கப்படும்

குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி கணமேயும் காத்தலரிது

நல்லா றெனினுங் கொளல்தீது மேலுலக இல்லெனினும் ஈதல் நன்று

செயற்கரி ய செய்வர் பெரியர் சிறியர் செயற்கரிய செய்கலா தார்

பரிந்தோம்பிப் பற்றற்றே மென்பர் விருந்தோம்பி வேள்வி தலைப்படா தார்

உரைப்பா ருரைப்பவையெல்லாம் இரப்பார் கொன்றீவார் மேல்நிற்கும் புகழ்

தம்மின் தம்மக் கள் அறிவுடைமை மா நிலத்து மண்ணுயிர்க்கெல்லாம் இனிது

தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும் நீங்கா நிலனுள்பவருக்கு

இருமை வகைதெரிந்து ஈண்டு அறம் பூண்டார் பெருமை பிறங்கிற்றுலகு

மக்கள் மெய்தீண்டல் உடற்கின்ப மற்றவர் சொற்கேட்டல் இன்பம் செவிக்கு

வசையொழிய வாழ்வாரே வாழ்வார் இசையொழிய வாழ்வாரே வாழாதார்

Erotex Fabrics

எங்களது தயாரிப்புகள் :

படுக்கை விரிப்புகள்
மேஜை விரிப்புகள்
டவல்ஸ்
ஷர்ட்டிங்
வேஷ்டிகள்
மற்றும்
நவீன அலங்கார ஆடை வகைகள்

ஈரோடு நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனை சங்கம் லிமிடெட்

தபால் பெட்டி எண் : 135
ஈரோடு (S India)
போன் : 170 தந்தி : ஈரோடெக்ஸ்

C. பால்சாமி
தலைவர்

●

கிளை : 4, வடக்கு மாட வீதி, மைலாப்பூர், சென்னை - 4
போன் : 76250

அன்புத் தலைவர் வாழ்க!

திரு. வே. வ. இராமசாமி, விருதுநகர்

அருமை நண்பர் திருவாளர் எஸ். கே. சென்னியப்ப கவுண்டர் எப்போதும் புன்முறுவலும், எளிய தோற்றமும் உடையவர். குளிருக்காகக் கோமாளித் தொப்பி அணிந்து கொஞ்சிப் பேசும் குழந்தைபோல் உதகையிற் கண்ட காட்சியை என்றும் மறவேன்.

கள்ளங் கபடில்லா உள்ளம், குற்றங் குறைகளைக் கண்டிக்கும் உள்ளம், ஏமாற்றுவோருக்கு இடங்கொடா உள்ளம், இரக்கங் கொண்ட இனிய உள்ளம் அவர் உள்ளம்.

சொல்லில் உறுதி பூண்டவர்; இது செய்வேன் என்று ஒப்புக் கொண்ட பின் அதனை எந்த இடையூற்றுக்கும் தளராமல் செய்து முடிப்பவர். அத்திறமே நகர்மன்றத் தலைமை, கூட்டுறவு ஒன்றியத் தலைமை, மத்திய வங்கித் தலைமை ஆகிய தலைமை பூண்டு விளங்கச் செய்தது.

வன்மையும், வாய்மையும் உள்ள அன்பர், நட்புக்கும், பண்புக்கும் உரியவராக விளங்கினர். என்னோடு பழகிய சின்னாட்களிலேயே என்னிடம் மிகுந்த ஈடுபாடு உடையவராக இருந்தார். அன்புதான் அதற்குக் காரணம். என் நலத்துக்கு ஏதேனும் இடையூறு வரும் நிலை இருந்தால் அதனை முன்பே தெரிந்து, முன்கூட்டியே தடுக்கக்கூடிய பண்புடையவராக இலங்கினர்.

வேளாண் வாழ்க்கை — அத்தொழிலில் பணி செய்வோரோடு ஒன்றிய தோற்றம், கண்காணிப்பு, செயல் ஆகிய கடமையும் உடையவர்.

பொன் பொருளைச் சேர்க்க வேண்டுமென்ற நாட்டமில்லாமல் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, வாக்குத் தவறுமை, கண்டிப்பு முதலிய பண்பு நலன்களுடன் பொதுநலத் துறையில் மக்கள் நலனுக்காக நெடுங்காலம் பணிபுரிந்த அன்புத் தலைவர்; பல துறைகளிற் பணியாற்றிய காலங்களிலெல்லாம் அத்துறைகளை மேலோங்கி வளரச் செய்தவர்; பணியாளர்களிடம் நம்பிக்கையும், ஒழுங்கு நேர்மையும் கொண்டு நடந்த நல்லியல்பினர்;

> **"கைமாறு வேண்டாக் கடப்பாடு மாரிமாட்டு**
> **என்னாற்றும் கொல்லோ உலகு"**

என்ற திருக்குறளுக்கு ஏற்பத் தன்னலங் கருதாமல் மின்னி, இடித்து, மழை பொழியும் மேகம் போன்ற மேன்மை வாய்ந்த அண்ணல் சென்னியப்பர் திருஉருவச்சிலை காண்போருக்கும், கேட்போருக்கும் களிபேருவகையூட்டித் தொண்டின் மேம்பாட்டை உலகுக்குக் காட்டி உயர்வடையச் செய்யும் என்ற உவகையுடன் வாழிய சென்னியப்பர், வளர்க நற்றொண்டு, மலர்க தமிழகம் — என அன்புடன் வாழ்த்துகின்றேன்.

தாண்டாம்பாளையம் நெசவாளர்

கூட்டுறவு உற்பத்தி & விற்பனை சங்கம்

லிமிடெட், No. K. 1126,

தாண்டாம்பாளையம் P. O., (வழி) ஈரோடு **R. M. S.**

எங்களிடம் தயாராகும் . . . . .

40 செ. & 60 செ. 7 மீட்டர் சேலை, 50" × 90" கருப்பு பிளாங்கட் பெட்சீட்டுகளும், 40" × 70" நாகின், 48" × 80" நாகின் பெட்சீட் ரகங்களும் உத்தரவாதமுள்ள சாயங்களில் கிடைக்கும்.

* **அடர்த்தியான நெசவு!** * **நாகரீகமான டிசைன்கள்!**

* **நம்பிக்கைக்கு உகந்தது!**

எல்லா **"கோ-ஆப்டெக்ஸ்"** எம்போரியங்களிலும் குறைந்த விலையில் கிடைக்கும்.

உங்கள் ஆதரவுக்கு எங்கள் நன்றி,

நிர்வாகக் குழுவினர்.

"முருகாடெக்ஸ்"

புகழ்பெற்ற கைத்தறி ஜவுளிகள்
எங்களிடம் 2/17S நூலினால் தயாரிக்கப்பட்ட
பெட்சீட் ரகங்களும், டைமன் வேஷ்டி ரகங்களும்,
துண்டு ரகங்களும் மொத்தமாகவும்
சில்லரையாகவும் கிடைக்கும்.

முருங்கத்தொழுவு நெசவாளர் கூட்டுறவு
உற்பத்தி & விற்பனை சங்கம் லிமிடெட்,

No. AA. 197,

சென்னிமலை, P. O., தமிழ் நாடு.

சங்க விற்பனை நிலையம்: **தெற்கு ரத வீதி, சென்னிமலை.**

தலைவர் : ***R. சுப்பையன்.***

ஓங்குக கூட்டுறவுத் தொண்டு!

பேராசிரியர் ஓ. இராம. கிருட்டிணசாமி
முதல்வர்
ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயம், கோவை

கூட்டுறவு புனித இயக்கம்; மக்களாட்சி முறையில் சமதர்ம சமுதாயத்தை அமைப்பதற்கேற்ற இயக்கம்; மக்களை மக்களாகப் போற்றும் மாபெரும் இயக்கம்; சமத்துவம், சகோதரத்துவம், அன்யோன்ய உதவி, நியாயம், நேர்மை போன்ற பண்புகளைப் போற்றும் இயக்கம்; போட்டியையும், சுரண்டலையும் ஒழித்து ஒற்றுமையை வளர்க்கும் ஒப்பற்ற இயக்கம். இத்தகைய இயக்கத்திற்காக 30 ஆண்டுகளுக்குமேல் சேவை புரிந்த திரு. சென்னியப்ப கவுண்டரை எல்லோரும் போற்றவேண்டும். அவருடைய சேவை பாராட்டுதற்குரியது. கூட்டுறவு இயக்கம் மக்களியக்கமாக வளர்வது கூட்டுறவுத் தலைவர்களைப் பொருத்தது. நேர்மையும், கண்டிப்பும், கடமையுணர்ச்சியுமிக்க தலைவர்கள் கூட்டுறவு இயக்கத்தில் ஈடுபட்டு இயக்கத்தை வளர்ப்பதற்கு திரு. சென்னியப்ப கவுண்டரின் வாழ்க்கை எடுத்துக்காட்டாக விளங்குவதாக! வாழ்க கூட்டுறவுத் தொண்டு. வளர்க கூட்டுறவு இயக்கம். திரு. சென்னியப்ப கவுண்டரின் சேவையால் கூட்டுறவும், கூட்டுறவால் திரு. சென்னியப்பரின் புகழும் ஓங்குக.

கோயமுத்தூர் சிட்டி கோ-ஆபரேடிவ் பாங்கு, லிமிடெட்

கோயமுத்தூர்

தலைவர்:	துணைத்-தலைவர்:
திரு. R. செங்கோட்டுவேலன், B. A., B. L.	Dr. S. G. ராஜரத்தினம், M. B., B. S.

எல்லாவிதமான டிபாசிட்டுகளும் ஏற்றுக்கொள்ளப்படும். பொதுமக்கள் தங்கள் உடைமைகளைப் பாதுகாத்துக்கொள்ள உறுதியும் நவீனமும் வாய்ந்த பாதுகாப்பு அறைகள் (Safe Deposit Lockers) எங்களிடம் உண்டு. ரூ. 10,000/- பிக்செட் டிபாசிட் செய்பவருக்கு ஒரு "A" பிரிவு பாதுகாப்பு அறை இலவசமாக உபயோகத்திற்கு கொடுக்கப்படும்.

தங்க நகைகளின் பேரில் மாதம் ஒன்றுக்கு ரூ. 100/-க்கு 90 பைசா வட்டிக்கு ஒருவருடம் வரை தவறுதல் வட்டி இல்லாமல் நபர் ஒன்றுக்கு ரூ. 2,000/- வரை கடன் வழங்கப்படும். கோயமுத்தூர் முனிசிபல் எல்லைக்குள் இருக்கும் வீடுகளின் பேரிலும், மற்ற ஸ்தாவர சொத்துக்களின் பேரிலும் குறைந்த வட்டிக்கு ரூ. 10,000/- வரை அடமானக் கடன் வழங்கப்படும்.

எல்லாவிதமான பாங்கி அலுவல்களும் நடத்தப்படும்.

Anna Tex

தரமான படுக்கை விரிப்புகள்
கண்கவரும் வர்ணங்களில்
அழகான துண்டுகள்
வண்ண வண்ண நிறங்களில்
அவ்வளவும் அறிஞர் பெருந்தகை
அண்ணாவின் பெயர் தாங்கி.

தயாரிப்போர்:

அறிஞர் அண்ணா
நெசவாளர் கூட்டுறவு
உற்பத்தி & விற்பனை சங்கம் லிமிடெட், No. C. H. 1
153, வளையக்கார வீதி, ஈரோடு - 1

கூட்டுறவே நாட்டுயர்வு!

கவுண்டிச்சிபாளையம் கைத்தறி நெசவாளர்
கூட்டுறவு உற்பத்தி, விற்பனை சங்கம், லிமிடெட்
No. K. 1172

ஸ்தாபிதம்: 1947

எங்களிடம் கைதேர்ந்த நெசவாளர்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட

வேஷ்டி
காடா பீஸ்
சிட்டைத் துண்டு
டைமன் கலர் டவல்

முதலிய ரகங்கள் குறைந்த விலையுடனும் நீடித்த
உழைப்புடனும் கிடைக்கும்

ரா. அங்கப்ப முதலியார்
தலைவர்

கோவை கூட்டுறவு அச்சுக்கூடத்தின் தலைவர் உயர்திரு. S. K. சென்னியப்ப கவுண்டர் அவர்களின் திருஉருவப்படத்தை உயர்திரு. T. S. அவினாசிலிங்கம் செட்டியார் அவர்கள் திறந்துவைத்தபோது எடுத்த படம்



கோவை கூட்டுறவு அச்சுக்கூடத் தலைவர் உயர்திரு. S. K. சென்னியப்ப கவுண்டர் அவர்களது திருஉருவப்படத் திறப்புவிழாவின்போது, திருஉருவப்படக் கமிட்டியாரால் தயாரிக்கப்பட்ட சிறப்பு மலரை உயர்திரு. T. S. அவினாசிலிங்கம் செட்டியார் அவர்கள் உயர்திரு. கவுண்டர் அவர்களுக்கு வழங்கும் காட்சி



கோவை கூட்டுறவு செய்தி மலர் வெளியீட்டு விழாவின்போது
வங்கித் தலைவர் திரு. S. K. சென்னியப்ப கவுண்டர் அவர்கள் உரை நிகழ்த்தினர்



வைர விழாவன்று மாலையில் நாட்டிய நிகழ்ச்சி நடத்திய குமாரி உஷா அவர்களுக்கு
வங்கித் தலைவரின் துணைவியார் அவர்கள் பதக்கம் அளிக்கும் காட்சி

வங்கித் தலைவர் வாழ்க!

திரு. P. N. பரமசிவம்,
இயக்குநர், கோவை மத்திய கூட்டுறவு வங்கி

பார்நீடு பேர்படைத்த ஈரோட்டின்
பால்சார்ந்த பதிப்பிறந்து
கார்நீடு கண்டதுபோல் அந்நகர்க்கே
காவலராய்க் கால்கொண்டீர்!
பேர்நீடு படைத்ததுறைக் கூட்டுறவின்
பாங்கான பெருந்தலைமை
ஆறைந்தும் மூவாண்டும் ஆர்ந்திருந்து
சிறப்பாக ஆட்சிசெய்தீர்!

ஏர்படைத்த ஏற்றமுறு குடிப்பிறந்தீர்!
ஏழையரின் ஏக்கமெல்லாம்,
சீர்படைத்த செங்கதிர்முன் சிதறியோடும்
பனியெனவே தீர்த்துவந்தீர்!
பேர்படைத்த கோவைநகர்க் கூட்டுறவு
வங்கிக்கே நம்பியானீர்!
நீர்ஆளும் பொதுத்தொண்டில் சென்னிமலைச்
செம்மலென நிறைந்திடுவீர்!

ஊருக்கோர் சிலையெடுப்பார் உம்புகழ்க்கே
உலகமெல்லாம் உன்னிநிற்க!
பாருக்கே கொடைக்கரங்கள் காட்டிநிற்பீர்!
பண்பெல்லாம் பாட்டிசைக்கோ?
யாருக்கும் கொடைவழங்கும் மகராசன்
ஒப்பற்றீர், உழவருக்கே
நார்கொண்ட மலர்க்கூட்டம் மாலையென்ன
மணம்பரப்பி வாழ்கநீடு!

ஆயிக்கவுண்டன்பாளையம் நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனை சங்கம் வரையறுக்கப்பட்டது

எண். கே. 691

ஆயிக்கவுண்டன்பாளையம், பட்டக்காரன்பாளையம் (அஞ்சல்)

கோவை மாவட்டம்

"ஆயிடெக்ஸ்"

40ˢ & 100ˢ கைத்தறிச் சேலைகள் & சோளித் துண்டுகள்
நவீன டிசைன்களில் ஸ்டீல் பன்னையில் தயார் செய்கின்றோம்

"ஆயிடெக்ஸ்" சேலையே அருமை! அருமை!!
அதன் விலையோ எளிமை! எளிமை!!
அனைத்து ரகமும் புதுமை! புதுமை!!
அழைப்பது தங்கள் வருகை! வருகை!!"

ஆயிடெக்ஸ் சேலைகள் எல்லா கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களிலும் கிடைக்கும்

V. N. ஆறுமுகம்
செயலாளர்

A. கண்ணுராஜு
தலைவர்

கைக்கோளபாளையம் நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனை சங்கம் லிமிடெட்

No. AA. 365

கைக்கோளபாளையம் (P. O.), (Via) விஜயமங்கலம்

கோவை மாவட்டம்

"கைடெக்ஸ்"

எங்களிடம் 20 ஈர்இழைத் துண்டுத்தான்கள், 2/40ˢ டைமன் வேஷ்டிகள், 2/17ˢ, படுக்கை விரிப்புகள், தலையணை உறைகள், 30ˢ, 40ˢ, 60ˢ, சாதா, பேட்டு, ஜரிகை பார்டர் கட்டங்கள் 6, 7½, 8 கெஜங்களில் சேலை ரகங்கள் கிடைக்கும்.

எங்கள் சங்க சேலைகள் எல்லா **கோ-ஆப்டெக்ஸ்** விற்பனை நிலையங்களிலும் கிடைக்கும்

விற்பனை நிலையம்: **32, அக்ரஹார வீதி, ஈரோடு.**

தேவைக்கு வருக அல்லது வரைக.

K. G. கொழந்தசாமி
தலைவர்

தனித் தலைவர்

திரு. P. N. அப்பாச்சிக் கவுண்டர்
தலைவர், பனங்காட்டூர் கூட்டுறவு சங்கம்

நமது மாவட்ட கூட்டுறவு மத்திய வங்கியின் தலைவர் உயர்திரு. S. K. சென்னியப்ப கவுண்டர் அவர்கள் ஈரோடு நகர மன்றத் தலைமை ஏற்று மக்கள் மகிழ்வுற சேவைசெய்து நன்மதிப்பைப் பெற்றுள்ளார்கள். மேலும் கூட்டுறவுத் துறையில் நமது மத்திய வங்கியின் தலைமைப் பொறுப்பேற்று நீண்ட நாள் அனுபவத்துடன், நிர்வாகத் திறமையுடன் பணியாற்றி வருகின்றார்கள்.

அவரது சேவையை நம்மைவிட வருங்கால மக்கள் நன்குணர்ந்து போற்றிப் புகழ்வார்கள் என்பதில் ஐயமில்லை. சகாக்களுடன் மனம் விட்டுப் பேசும் தகைமையர்; பொய்யா மொழிப் புலவர் வாக்குப்படி நட்பிற்குரியவர்; கொங்கு நாட்டுப் பாணியில் கடிந்துரை கூறும் தன்மையர்; வெள்ளை உள்ளம் படைத்தவர்; தக்க சமயத்து பிறர்க்குதவும் தகைமையுடையவர். அன்னார் இன்னும் நீண்ட நாள் சேவை செய்ய திடகாத்திரமும், தீர்க்க தரிசனமும் நல்க இறைவனை இறைஞ்சி வாழ்த்துகிறேன்.

திருமநாதம்பாளையம் நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனை சங்கம் லிமிடெட்

No. K. 1129

சூரியப்பம்பாளையம் போஸ்டு, (வயா) நம்பியூர்
கோவை ஜில்லா

20×10-ல் 4×6, 4×7, 4×8 துண்டு தான்கள்
காடா பீஸ்கள், வேஷ்டிகள்.
40×10-ல் காடா பீஸ்கள், வேஷ்டிகள்.
மற்றும்
சாயத்திற்கு உத்திரவாதமுள்ள 8 கெஜம், 6 கெஜம் புடவைகளும் தயார் செய்கிறோம்.

வியாபாரிகளுக்கு மொத்தமாகவும், சில்லரையாகவும் குறைந்த விலையில் சப்ளை செய்யப்படும்.

S. M. ராமசாமி முதலியார்
தலைவர்

POST BOX No 1 PHONE No. 2

THE GOBICHETTIPALAYAM CO-OPERATIVE MARKETING SOCIETY LTD.

No. K. 544
GOBICHETTIPALAYAM
COIMBATORE DISTRICT (TAMIL NADU)

BRANCHES AT: **ERODE & NAMBIYUR**

★

Manufacturers of
HIGH CLASS STANDARD
MIXTURE Nos. 1, 2, 5, 7, 8, 9, 10, 11 and 12

★

UNDER THE CAPTION
BHAVANISAGAR BRAND
VERY POPULAR AMONGST THE RYOTS

★

USE ALWAYS
BHAVANISAGAR BRAND MIXTURES
AND GET GOOD YIELD

V. KUNHIRAMAN, B. A.,
Co-operative Sub-Registrar,
Secretary.

P. N. SENGODAPPAN,
President.

சிந்தனைச் செல்வர் சென்னியப்பர்

கவிஞர் திருலோக சீதாராம்
ஆசிரியர், "சிவாஜி", திருச்சி

சுமார் கால் நூற்றுண்டுக்குமுன்பு ஸ்ரீமான் சென்னியப்ப கவுண்டர் அவர்களைச் சந்தித்து அவருடன் நட்புக்கொள்ளும் வாய்ப்பைப் பெற்றேன். அவரது சிந்தனை ஆற்றலும், இனிய சுபாவமும், செயல் திறனும் தமிழகத்தின் புகழ்பெற்ற கூட்டுறவாளர்களில் ஒருவர் என்ற தனிச்சிறப்பை அவருக்கு உண்டாக்கியிருக்கின்றன.

தன்பால் வருகின்றவர்களின் இயல்பையும், திறமையையும், அவர்களின் எண்ணங்களையும் நன்கு அறிந்துகொண்டு பழகுவதில் ஸ்ரீ சென்னியப்ப கவுண்டர் அவர்களுடைய பண்பாடு மிகவும் உயர்வானது. பண்டைய தமிழ் மரபுகளைப் போற்றிவரும் இவர் இன்றைய உலகின் போக்கையும், சூழ்நிலையையும் நன்கு ஆராய்ந்து, காலவேகத்துக்கு ஈடுகொடுக்கும் தனித்திறமை படைத்தவர். அரசியல் சூருவளியில் எத்துனையோ கூட்டுறவாளப் பிரமுகர்கள் தங்கள் நிலையில் மாறிப்போன பிறகும்கூட, லட்சியவாதியாக, கூட்டுறவுத் துறைக்குப் பணிபுரியும் ஒரு மெய்த்தொண்டர் என்ற நிலையிலிருந்து இவர் சற்றும் பிறழாது தனது கடமையை ஆற்றிவருவது பாராட்டுக்குரியதாகும். அரசியல்வாதிகள் கால வெள்ளத்தில் சிக்கித் தங்கள் கொள்கைகளை அடிக்கடி மாற்றிக்கொள்வதைப் பார்த்துவரும் நமக்கு உறுதியுடன் தமது பணியிற் சிறந்து விளங்கும் ஸ்ரீமான் சென்னியப்ப கவுண்டர் போன்ற பெரியார்களைப்பற்றி எண்ணும்போது பெரு மிதமும், மகிழ்வும் உண்டாகிறது.

ஸ்ரீமான் சென்னியப்ப கவுண்டர் அவர்களுடன் உரையாடுதல் ஒரு இனிய அனுபவமாகும். தெளிந்த சிந்தனையோடும், உன்னத நோக்கங்களோடும் அவர் எடுத்துக்கூறும் செய்திகள் பொருள்பொதிந்தவையாகவும், கேட்போர்க்கு இனிமையாகவும் இருக்கும். அதேபோன்று அறிவாளிகளின் எண்ணங்களை மதித்து ஏற்றுக்கொள்ளும் பாங்கும் ரசிக்கத்தக்கதாகும்.

ஈரோடு கூட்டுறவு யூனியன் தலைவராக 33 ஆண்டுகள் தொடர்ந்து தலைவராக விளங்கியிருக்கிறுர். கோவை மாவட்ட கூட்டுறவு மத்திய வங்கியின் புகழ்வாய்ந்த தலைவராகப் பதினைந்து ஆண்டுகளாக விளங்கிவருகின்ருர். இஃதொன்றே இவருடைய பெரும் பணியின்பால் மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கைக்கும், நன்மதிப்புக்கும் எடுத்துக்காட்டாகும்.

எளிமைகண்டிரங்கும் இவரது பரிவும், நலங்கண்டு வழங்கும் கொடைத் திறமும், அடக்கமும், அமைதியும் நிறைந்தனவாகும். புகழ்ச்சிக்கும், முகஸ் துதிக்கும் செவிசாய்க்காத இவரது இயல்பு பெரிதும் போற்றத்தக்கது.

இவரிடம் செல்லநேர்ந்தபோதெல்லாம் இலக்கிய விஷயங்களில் சல்லாபித்திருக்கும் வாய்ப்பு எனக்கு ஏற்படுவதுண்டு. ஸ்ரீமான் சென்னியப்ப கவுண்டர் அவர்களின் நீண்டகாலப் பொதுவாழ்வின் கரைபடா உழைப்பையும், மேன்மையையும் கருதி அவருக்குச் சிலையமைத்துப் புகழ்மாலைசூட்டும் எண்ணங்கொண்ட நல்ல உள்ளங்களை நான் மனமார வாழ்த்துகிறேன். இதனையொட்டி அவரது குண நலன்களை ஏட்டில் பதிக்க விரும்பிச் சிறப்பு மலர் வெளியிடும் முயற்சியைப் பாராட்டுகிறேன்.

ஸ்ரீமான் சென்னியப்ப கவுண்டர் அவர்கள் நெடுங்காலம் நம்மிடையிருந்து நாட்டுக்குப் பணிபுரியவும், விழாவெடுக்கும் அன்பர்களின் முயற்சி வெற்றி பெறவும் எனது மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்.

CHENNIMALAI SIRAGIRI MURUGAN WEAVERS' CO-OPERATIVE PRODUCTION & SALE SOCIETY LIMITED, No. C. H. 2.

CHENNIMALAI P. O. (Tamil Nadu)

Use Always **ChengiriteX** *Handloom Fabrics*

We have produced high class guaranteed Fast Colour and latest design Handloom Bed-Sheets, Pillow Covers and Special Dhothies. Our goods are available in all Co-optex, Handloom Houses and Super Markets in Tamil Nadu and all other States.

S. M. KARUPPANAN
President

கூட்டுறவுப் பெரியார்!

ஈரோடு திரு. ப. கதிரவன்

(1) கூட்டுறவால் நாட்டுயர்வு தழைக்க எண்ணும்
கூர்த்தமதி பெற்றதினுல் முயன்று நாளும்
கூட்டுறவே தன் பேச்சாய் மூச்சாய்க் கொண்டு
குறிக்கோளை வாழ்க்கையிலே கடைப்பி டித்து
பாட்டிற்குப் பொருளானுர்; பலரும் இன்று
பாராட்டும் திருவானுர் பெருமை பெற்ருர்
ஏட்டினிலே இவர்புகழ்தான் எதிரொ லிக்கும்
என்றென்றும் பெருந் தலைவர், உண்மை காண்பீர்!

(2) வெட்டொன்று துண்டிரண்டாய்ப் பேசும் வீரம்
வெளிப்படையாய்க் கருத்துரைக்கும் வெள்ளை உள்ளம்
சட்டென்று தீர்வு காணும் மிக்க ஆற்றல்
சமமாக யாவரையும் நடத்தும் போக்கு
விட்டகலா தென்றென்றும் நெஞ்சை விட்டே
விருந்தோம்பும் தமிழ்ப்பண்பை இவரி டத்தில்
கட்டாயம் நாம்காண முடியும் நன்றே
கண்கண்ட உயர்மனிதர் இவரே யன்ருே?

(3) தலைவரெனச் சிலபேர்கள் புகழி னேடே
தன்னலமும் பேணிடவே பதவி ஏற்பார்
தலைமைக்கு வேண்டியபல் தகுதி யாவும்
தனிச்சிறப்பாய் இவரிடத்தில் காண லாம்நாம்
நிலைமைக்குத் தக்கபடி நடந்து நல்ல
நிர்வாகத் திறமையினை வெளிப்ப டுத்தி
தலைமுறையில் சாதனைகள் செய்தார்; ஏற்ற
தன்பணியில் முழுநிறைவைத் தந்தார் கண்டோம்!

(4) மாவட்ட வங்கிக்கிவர் தலைவ ராக
மக்கள்குறை களைந்திடவே ஆர்வத் தோடு
சேவைபல செய்திட்டார் புகழைச் சேர்த்தார்
செயற்கரிய செயல்புரிந்த பெரியா ரானுர்
கோவையொரு மாவட்டம் மட்டு மன்றி
கொண்டபுகழ் தமிழகத்தில் முழுது முண்டு
ஆவலினுல் சிலையவர்க்கு வைப்போம் தூய
அவர்பாதை தனில்செல்வோம்; வெற்றி காண்போம்!

The Kanjikovil Weavers' Co-operative Production & Sale Society Ltd., No. A. A. 94

KANJIKOVIL P. O.
(via) NASIYANUR
ERODE S. Rly. (TAMIL NADU)

USE ALWAYS

KANJICOTEX

FABRICS

Manufacturers of :

20s 4 × 8, 4 × 9 Dhothies 50" 1 × 12, Piece 47" 1 × 12 Colour Piece 33" 4 × 6, 4 × 7 and 4 × 8. Chittai Towels and N. F. 17. Towels in Attractive Colours and Various Designs and 30" 1 × 12 Doria Pieces.

R. NALLASWAMY GOUNDER
President

N. B.: Our goods are available at all State Society Emporia and Depots.

"BOMOSTEX"

HANDLOOM FABRICS

Producers of : BED - SHEETS, TOWELS and PILLOW COVERS, SPECIAL DIAMOND DHOTHIES, SPECIAL JACQUARD BED - SHEETS, GADA, MULL DHOTHIES and DORIA SHIRTINGS ETC.

Available in all Co-optex and Handloom Houses

With Best Compliments From :

THE PUNJAI UTTUKULI WEAVERS' CO-OPERATIVE PRODUCTION AND SALE SOCIETY LIMITED, No. A. A. 74

UTTUKULI R. S. ERODE TALUK
(Coimbatore District)

K. G. P. ARUMUGHAM,
President.

நட்பிற்கோர் எடுத்துக்காட்டு!

திரு. பி. கே. சேதுராமசாமி
61, கோவை ரோடு, பொள்ளாச்சி

கூட்டுறவுச் செம்மல் திரு. எஸ். கே. சென்னியப்ப கவுண்டர் அவர்களின் சிலை ஈரோட்டில் நிறுவுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருவது தெரிந்து நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். 1946-வது வருடத்திலிருந்து அன்னாருடன் நான் நெருங்கிப் பழகிவருகிறேன். மனதில் தோன்றும் எந்தக் கருத்தையும் சம்பந்தப் பட்டவர்களிடம் ஒளிவு மறைவு இன்றி சொல்லும் மன உறுதியும், தைரியமும் அவரைப்போல் வேறு யாருக்கும் வராது. கூட்டுறவு இயக்கத்திற்கே ஒத்துழைப்பு என்பது முக்கிய நோக்கமாகும். ஆனல் அந்த இயக்கத்தில் இன்று மலிந்து காணப்படும் பல்வேறு குறைகளில் முதன்மையானது, உள்ளதை உள்ளபடியே சொல்லுவதற்கு விருப்பம் இல்லாமல் பதவியைக் காத்துக்கொள்வதற்காக அவ்வப்போது வெளிப்படையாக ஒற்றுமை காண்பிப்பதுபோல் நடந்துகொள்வது தான், ஆனல் திரு. எஸ். கே. சென்னியப்ப கவுண்டர் அவர்கள் இதற்கு முற்றிலும் மாறுபட்டவர். எந்த சந்தர்ப்பத்திலும் யார் குற்றம் செய்திருந்தாலும், தவறு இழைத்திருந்தாலும் நேரில் அஞ்சாமல் சொல்லும் மனேதைரியம் அவருக்கு உண்டு. இந்த ஒரு குணத்தினல் அவர் சம்பந்தப்பட்ட கூட்டுறவு இயக்கத்தில் மறந்தும் கூட்டுறவு இயக்கத்திற்கு இழுக்கைத்தரும் எந்த தவறையும் செய்வதற்கு எல்லோரும் பயப்படுவார்கள். அவருக்கு அரசியலிலும், கூட்டுறவு இயக்கத்திலும் மிக்க புகழ் பெற்றிருந்தாலும் நண்பர்களுக்கு அவருடைய நட்பின் பலம் இன்றிய மையாதது ஒன்றுகும். அவர் தன்னுடைய சொந்தக் காரியங்களில் அக்கறை எடுத்துக்கொள்வதில்லை என்ற குற்றச்சாட்டும் தன்னுடைய தேக நிலையை சரியான பாதுகாப்புடன் காத்துவரவில்லை என்ற குற்றச்சாட்டும் தவிர, அவருடைய நெஞ்சுறுதியும், தன்னலமற்ற சேவையும் இந்த நாடே பின்பற்றி நடப்பதற்கு முன்மாதிரியாகும். அன்னரின் சிலை ஈரோட்டில் திறக்கப்படுவது குறித்து மட்டற்ற மகிழ்ச்சியும் அந்த முயற்சி இனிதே நடைபெற எனது ஆசியையும் திரு. எஸ். கே. சென்னியப்ப கவுண்டர் அவர்கள் பல்லாண்டு வாழ்ந்திருந்து கூட்டுறவு இயக்கத்தை சீரியமுறையில் நடத்திச் செல்வதற்கு உண்டான திடகாத்திரமான தேக நிலையையும் அவருக்கு கிடைப்பதற்கு எனது பிரார்த்தனையையும் இந்த செய்தியின் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

The Coimbatore District Central Co-operative Supply & Marketing Society Ltd. No. K. 881

Post Bag No. 798, R. S. Puram Post, COIMBATORE - 2

Telegrams : "CENCOPSTOR"

Telephone : 23372 (5 Lines)
Peelamedu Godown : 22074
Tiruchi Road Office : 30955
Indane Gas : 23371
Agro Service Centre : 34994
Gandhipuram Branch of Chinthamani : 31606
Udamalpet Branch : 575

President : Thiru G. R. GOVINDARAJULU

Members : 'A' Class		...	615
'B' Class		...	21,000
Paid up Share Capital		....	Rs. 34,00,000
Reserve Fund and other Funds		...	Rs. 39,50,000
Annual Sales Turnover :	Main wing	...	Rs. 4 Crores
	'Chinthamani'	...	Rs. 3 Crores
Value of Sites and Buildings		...	Rs. 40,00,000

Wholesalers and Retailers in

Rice, Dhall, Oils, Consumer Goods and Cloth etc.

CHINTHAMANI

SUPER MARKET

A successful unit holding the price line in Coimbatore Town dealing in all Consumer requisites through its 17 Departments and its Branches at Gandhipuram and Udamalpet.

Secretary.

இலட்சிய கூட்டுறவாளர்

திரு. T. N. பழனிசாமி, M. A.
தலைவர், துடியலூர் கூட்டுறவு விவசாய சேவா சங்கம்

கோவை மாவட்ட மக்களின் அன்புக்கும், ஆசிக்கும், நன்மதிப்புக்கும் உரிய கூட்டுறவுத் தந்தை உயர்திரு. சென்னியப்ப கவுண்டரவர்களின் சிலை திறப்பு விழாவினையொட்டி வெளியிடப்படும் சிறப்பு மலரில் அன்னாருக்கு முதற்கண் எனது வாழ்த்துக்களையும், அன்புகனிந்த நன்றியினையும் தெரிவித்துக் கொள்கிறேன். அன்னாரைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் கூறிக்கொள்ள என்ன தகுதி படைத்துள்ளேனென ஐயமிருப்பினும் அவரால் உருவாக்கப்பட்டுப் புடமிடப்பட்ட கூட்டுறவு ஊழியர்களில் யானுமொருவனெனும் தகுதி கொண்டு ஒருசில வார்த்தைகள் கூறிக்கொள்ள விழைகின்றேன்.

காலஞ்சென்ற கூட்டுறவு மேதை உயர்திரு டி. ஏ. இராமலிங்கஞ் செட்டி யாரை அடுத்து கோவை கண்ட கூட்டுறவுத் தந்தை உயர்திரு. சென்னியப்ப கவுண்டர் அவர்கள். தன் வாழ்க்கையின் பெரும் பகுதியினை கூட்டுறவு இயக்க மூலம் உழவர் பெருங்குடி மக்களின் நல்வாழ்வுக்காகப் பயன்படுத்திவரும் அருங் குணச் செம்மல். கருருக்கும், கண்டிப்புக்கும் பெயர் போன அன்னாரின் இதயம் மலரினும் மென்மையானது. உண்மை ஊழியனை ஊக்குவிக்கும் பண்புள்ளம் கொண்டவர். சுயநலமின்றி சமுதாயத்தின் ஓர் பகுதியின் மேன்மைக்காகக் கூட்டுறவு இயக்க மூலம் உழைத்து வரும் அவர் தன் வாரிசுகளாகப் பல்வேறு தலைசிறந்த கூட்டுறவு ஊழியர்களையும் தோற்றுவித்துத் தம் மேற்பார்வையில் பல்வேறு கூட்டுறவு ஸ்தாபனங்களையும் நிர்வகிக்கும் பொறுப்பையும், கடமை யையும் ஏற்படுத்தியுள்ளதை இம் மாவட்டம் என்றும் மறவாது.

கூட்டுறவு ஸ்தாபனங்களுக்குச் சிறப்பிடம் கோவை மாவட்டம். அதன் காரணகர்த்தாக்களில் தலை சிறந்த பெரியார் உயர்திரு. சென்னியப்ப கவுண்டர் அவர்கள்.

அவர்கள் இனியும் பல்லாண்டு காலம் வாழ்ந்து கூட்டுறவு இயக்க வாயிலாக மக்களுக்குத் தொண்டு செய்தும், இலட்சிய கூட்டுறவாளர்களைத் தம் வாரிசாகத் தோற்றுவித்தும் பணிசிறக்கச் செய்ய ஆண்டவன் அருள் பாலிக்க இறைஞ்சுகின்றேன்.

கூட்டுறவே! ★ நாட்டுயர்வு!

வெள்ளி விழா ஆண்டு 1964

சிவகிரி நெசவாளர்
கூட்டுறவு உற்பத்தி & விற்பனை சங்கம் லிமிடெட்

சிவகிரி P. O. (வழி) ஈரோடு R. M. S.

கிரிடேக்ஸ்
கைத்தறி ஆடைகள்

★ திணுசில் அழகு!
★ நெசவில் அழுத்தம்!
★ கண்கவர் நிறங்கள்!
★ கவர்ச்சிமிகு ரகங்கள்!

எங்கள் சங்க ஜவுளிகள் எல்லா கூட்டுறவு விற்பனை நிலையங்களிலும் கிடைக்கும்.

S. S. நாச்சிமுத்து, தலைவர்.

தந்தி : "கோபாரிகா"
தொலைபேசி : 38

விற்பனை நிலையம் : டில்லி
கிளை : அன்னூர்

மேட்டுப்பாளையம்
கூட்டுறவு விற்பனை சங்கம் லிமிடெட்

No. K. 913
மேட்டுப்பாளையம்

தயாரிப்பாளர்கள் :—

'உழவன் மார்க் கலப்பு உரங்கள்'

எங்களிடம் எல்லாவித ஸ்டாண்டர்டு கலப்பு உரங்கள், அனைத்துவித இரசாயன உரங்கள், பலவகைப்பட்ட பூச்சி கொல்லி மருந்துகள் ஆகியவை குறைந்த விலையில் கிடைக்கும்.

மருந்து தெளிக்கும் கருவிகள், பாத்திரங்கள், ஜமக்காளம், நாற்காலிகள், மேஜைகள், முதலியவைகள் வாடகைக்கு கிடைக்கும்.

தேவைக்கு அணுகி பயன்பெறுங்கள்.

நான் கண்ட தலைவர்

திரு. அ. இராமகிருஷ்ணன்
நிர்வாக அதிகாரி
கோவை மத்திய கூட்டுறவு வங்கி

ஒரு நாட் காலை மணி ஒன்பது இருக்கும். கோவை கூட்டுறவுப் பதிவாளர், செயலாளர், நான் ஆக மூவரும் வையாபுரித் தோட்டத்திற்குச் சென்றோம். மஞ்சள், செந்நெல், வாழை, கரும்பு முதலிய பயிர்கள், மாதுளை, கொய்யா மற்றும் கனி தரும் மரங்கள், ஒளிவிடும் மலர்கள் இவைகளுக்கிடையே ஒரு ஓட்டு வில்லை வீட்டின் தாழ்வாரத்தில் வயது முதிர்ந்த ஒரு மெல்லிய—முதிர்ந்த—இளைஞர் ஒருவர் நின்றுகொண்டிருந்தார். நெற்றி நிறைய குழைத்துப் பூசிய திருநீற்றின் ஒளி விளங்க முகத்தில் புன்னகை தவழ எங்களை வரவேற்றார். வெள்ளை வேட்டி, சிரித்த முகம், நரைத்த மீசை, விறைத்த பார்வை, ஒளி விடும் கண்கள், அழுத்தமான பேச்சு, துணிவான செயல்—சுத்தமான சுற்றச் சூழ்நிலை, இவைகள் எல்லாம் ஒருங்கே மிளிர்வதைக் கண்டோம். முகமன் கூறி முடிந்த பின்னர் தன் வேலையாளைக் கூப்பிட்டு—சிற்றுண்டி கொண்டு வரச் சொன்னார். நாங்கள் சாப்பிட்டுவிட்டுத்தான் வந்தோம் என்று எவ்வளவோ கூறியும் விடாப் பிடியாகக் காபி, மோர் இவைகளைக் கொண்டுவரப் பணித்தார். ஒன்றும் அருந்தாமல் போவது தமிழன் மரபு அல்ல என்ற முறையில் அவர் உபசரிப்பு இருந்தது. அருந்தினோம்.

இச்சமயத்தில் தன் பக்கத்தில் இருந்த மாதுளங்கனியை எடுத்தார். தானே கத்தியைக் கொண்டு சீவி, மூன்றாக உடைத்து எங்கள் மூவருக்கும் அவர் கைப்படவே தந்தார். சுவைத்தோம். ஆஹா! இதற்கு முன்னர் மாதுளங் கனிகள் பலவற்றை, பல்வேறு வகைக் கனிகளைச் சுவைத்திருக்கிறோம். ஆனால் இதுமாதிரி மாதுளங் கனியை உண்டதே இல்லை. ஆம்! இம்மாதுளங் கனியின் ருசியே அலாதிதான். வெளிறிய சிவப்பு நிற மணிகள்! ஆனால் இனிப்போ கற்கண்டுகூடத் தோல்வியுறும். அதுமட்டுமா? கற்கண்டுச் சுவைநீரைச் சுமந்துகொண்டிருக்கும் அம் மணிகளின் அடிவயிற்றிலே இருக்கும் விதைகள் கூட மிக மிருதுவாக இருந்தன! எனவே அதனைச் சுவைக்கும்போது விதையைக் 'கடிக்'காமல் மென்றுவிட்டோம். பின்னால்தான் விதையிருக்குமே, அவை எங்கே என்று நினைத்தோம்! அவைகளை — அக்கனியின் சுவை நீரைப் பருகும் சமயத்தில் விதைகளும் சுவையோடு சுவையாக இருந்தமையாலும் விதைகளில் 'கடிமை' தோன்றாததாலும் மென்ற விபரம் எங்களுக்கு புரிந்தது!

பின்னர் அவர்களுடன் ஒரு மணி நேரமாய் அளவளாவினோம். அவர் களுடைய பேச்சில் சுயநலச் சுவடே இல்லை. பிறர் நலம் பேணும் பெருந்தகை யாளர். குடியானவன் விவசாயத்துக்கு—உரிய காலத்தில் வங்கி மூலம் கடன் உதவி, அவன் ஏற்றம் பெற்று அதன் மூலமாய் வீட்டையும், நாட்டையும் வளம் பெறச் செய்ய வேண்டும் என்ற ஒரே ஆவல்தான் அவருடைய உள்ளத்தில் சுடர்விட்டுக்கொண்டிருக்கிறது என்று புலனாகியது!

ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள மத்திய வங்கித் தலைவர்கள் மாதந் தோறும் நடைபெறும் தமிழ் நாடு கூட்டுறவு மத்திய வங்கி நிர்வாக சபைக் கூட்டத் திற்குச் செல்வர். அச்சபை நடக்கும்போது, தலைவர் அவர்கள் சொல்கிறார்கள்

என்று வேறு யாறும் கூறினல் ''நம் வங்கித் தலைவர்'' திரு. எஸ். கே. சென்னியப்ப கவுண்டர் அவர்களையே குறிக்கும் என்று சேலம் மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கித் தலைவர் திரு. கே. எஸ். சுப்ரமணியக் கவுண்டர் அவர்கள் குறிப்பிடுவார்கள். இந்த முறையில் தமிழ் நாடு மாநில வங்கியளவிலும் சுயநலம் கருதாப் பிறர் நலம் பேணும் பெருந்தகையாளராகத் திகழ்ந்திருக் கின்ருர்கள்—என்றும் அம்மாநில வங்கி, நம் கோவை மாவட்ட கூட்டுறவு மத்திய வங்கி இவைகள் எல்லாம் சரித்திரப்பூர்வமான சான்றுகள் பல பகரும். இது மிகையல்ல; அனைத்தும் உண்மை.

''ஆர இயற்கை அவா நீப்பின் அந்நிலையே
பேரா இயற்கை தரும்''

என்ற வள்ளுவர் பெருமான் பொய்யாமொழிக்கேற்ப அவா அறுத்த செந்தண்டை பூண்டவர்.

''வெள்ளத்தனைய மலர் நீட்டம் மாந்தர்தம்
உள்ளத்தனையது உயர்வு''

என்ற முறையில் உயர்ந்த உள்ளம் படைத்த மனத்தவர்.

சூரிய வெளிச்சம் எங்கும் சமமாய் வீழ்கிறது. ஆனல் தண்ணீர், கண்ணுடி, மெருகிட்ட உலோகம் இவைபோன்ற பொருட்களில் அவ்வெளிச்சம் நன்ருகப் பிரதிபலிக்கிறது. அதுபோலத்தான் நம் தலைவர் அவர்களுடைய பண்பும் புத்தொளி மிளிர அவர்கள் உள்ளத்தின் வெள்ளைத் தன்மையுடன் வெளிச்சமாக இருக்கிறது! எனவே அவருக்கு வயது எழுபத்தொன்ருனலும் இருபத்தொன்று வயது என்றே மதிக்கத்தக்க வகையில் இளமை பூக்கும் புன்னகையுடன்—அம்மையுடன்—அப்பனுக—ஏழைப்பங்காளனுகக் காட்சி தருகிருர்.

உலகத்தில் வாழும் மனிதர்கள் எல்லாம் தாம் இன்னும் வாழ வேண்டும்—இன்னும் வாழவேண்டும் என்ற எண்ணம் உள்ளவராகவே இருக்கின்றனர். நம் தலைவர் அவர்களிடம் பேசினல் தாம் சாவையே விரும்புருர். ''மரணத்தை அணைத்துக்கொள்ள விரும்புகிறேன்'' என்று—சிரித்துக்கொண்டே சொல்கின்ருர். இத்தகைய நிலை யாருக்கு வரும்? அவர்கள் இருப்பதோ 'வையாபுரித் தோட்டம்'. அவர்கள் பெயரோ ''சென்னியப்பன்'' மக்கள் பெயரோ ''சுப்பிரமணியம்'' ''சண்முகம்'' பேரன்கள் பெயரோ ''சிங்கார வேலன்'', ''சென்னியங்கிரி'' ஆக எல்லாம் 'முருக' மயம். எனவே இளமை, அழகு,—என்றும் இருக்க மரணமிலாப் பெருவாழ்வை விரும்பிய தாயுமானவர், மாணிக்கவாசகர், திருநாவுக்கரசர், இராமலிங்க வள்ளலார் போன்று எங்கள் தலைவர் ''சென்னியப்பர்'' அவர்களும் விரும்புகிருர்கள். இறைவன் தன் சொருபமாகிய அம்மையும் அப்பனுமாக காட்சி அளிக்கும் தருணத்தில்—திருவள்ளுவர் கூறிய பிறவிப் பெருங்கடல் நீந்தி—என்றும் எல்லார் மனதிலும் நிரம்பி நினைத்து வாழும் நல்வழியை இறைவன் அருளும் முறையில் அவர்கள் வாழ்வு ஏனையோருக்கு என்றும் எடுத்துக்காட்டாய் இருக்கும் என்பதில் சிறிதும் ஐயம் இல்லை.

சிலையும் சிந்தனையும்!

திரு. S. P. பெருமாள்சாமி
கோவை மத்திய கூட்டுறவு வங்கி

(1) சென்னியப்பர்க் குச்சிலையேன்? என்றுமிகச்
சிறியமனம் கொண்டவர்கள் கேட்கின்றார்கள்.
தன்னலத்தைத் தவிர்த்ததாலும், தலைமையேற்று
எம்வங்கி தழைத்திடவே உழைத்ததாலும்.

(2) பெரியமனம், கருணைமனம், பிறர்க்கெனவே
உழைக்குமனம், உயரியபல் பொதுப்பணியில்
பெரிதுமூக்கம், பெரியசெயல் செயத்துந்த
விரிவான செயல்திறனும் சிந்தனையும்.

(3) தாளாண்மை என்னுமொரு தகைமைக்கண்
தங்கியநல் செருக்குமிகு வேளாண்குடி.
ஆளாண்மை, நூலாண்மை அனைத்துமுற்(று)
அரிமாவென விளங்குமொரு பெரியாராவர்.

(4) கல்லைப்போலக் கடினநிலை காண்பவர்க்கே,
கனிந்துவிட்ட கனியின்நிலை பழகியோர்க்கு.
சொல்லெலாம் சுடுசொல்லே! அச்சூடும்
செருவற்ற நன்மைதருஞ் சூடாமன்றே?

(5) தங்கத்தால் ஆனவொரு இதயந்தன்னைத்
தான்மூடி மறைக்குமொரு எஃகேயானார்.
எங்கெங்கு தேடினுமே யிவரைப்போல
இருப்பாரைக் கண்டிடுதல் இயலாதம்மா!

(6) எழுபதினைக் கடந்துமொரு இளைஞர்போல
இருந்திடுதல் மிகவரிதாம். இவருக்கான
பழுதற்ற உளத்திட்பம், உறுதி யாவும்
எழுபதினை இருபதாக்கல் என்னவிந்தை!

(7) பிறந்தவர்கள் மறைந்துவிடல் மிகவியற்கை
பிறந்தவர்கள் அனைவருமே வாழ்கின்றாரா?
சிறப்புமிக்க சென்னியப்பர் வாழ்வதிலே
செம்மைமிக்க புகழ்நிலையைக் காணவேண்டும்.

(8) தோன்றியதில் புகழ்கூடித் தோன்றியநல்
துணிவுமிக்க வழியேயிவர் வாழ்க்கையாகும்.
ஆன்ற-புகழ் அனைத்துக்கும் தாமேசொந்தம்
ஆனவர்போ லிவர்வாழ்வு! என்னவிந்தை!

(9) திலகமெனத் திகழ்ந்திடுந் தமிழகப்பெண்
திலகத்தின் கோவையெனுஞ் செவ்வாயாய்
இலகுமிந்தக் கோவையெனும் மாவட்டத்துள்
இலரிவர் போலெனுங் கூட்டுறவாளர்.

(10) சிலைவைத்தல் நமதன்பைச் சேர்த்துவைத்துச்
செய்யுமொரு மதிப்பாகும். செவ்விதேய
அலையெனவே வருமக்கள் அவர்பெருமை
அறிவதற்குச் செய்யுமொரு வழியுமாகும்.

(11) அமிழ்தனைய அன்னையாம் தமிழே வாழ்க!
அன்புகொண்ட பொதுமைப் பெரியர் வாழ்க!
தமிழர்நாடு நலன்களும் சிறந்து வாழ்க!
தகுதிநிறை தமிழர்தம் பண்பு வாழ்க!

தமிழ்மொழி தனக்குள்ள தகுதியேபோல்
தக்கபுகழ் பெருமையும் பண்பு சார்ந்து
தமிழேபோல் இப்புவியில் சென்னியப்பர்
தாம்வாழ இறைவனையே வேண்டுகிறோம்.

தந்தி: "COMILLS" போன்: { 214 361

எங்களது உளங்கனிந்த வாழ்த்துக்கள்

கோவை மாவட்ட
கூட்டுறவு நூற்பு
ஆலை லிமிடெட்

தபால் பெட்டி எண். 8

தாராபுரம்

தரமான 20 & 2/17 ஹேங்ஸ்
மற்றும் 34 கோன் நூல்கள்
உற்பத்தி செய்கிறோம்.
ஆலைக்கு தற்சமயம் பங்குகளும்
சேர்க்கிறோம்.

விபரங்களுக்கு :

ஆலையின் நிர்வகிக்கும் நெறியாளரையோ
அண்மையிலுள்ள தாசில்தாரையோ
அணுகவும்

கோவை மாவட்ட கூட்டுறவு மத்திய வங்கி லிமிடெட்

தந்தி: ''கோடிஸ்ட்பேங்க்''

தொலைபேசி எண்: வங்கி: 33447
33448
33449
துணைச் சேர்மன்: 31304

அஞ்சல் பெட்டி எண். 1398
கோவை - 18

துணைச் சேர்மன்
திரு. வி. வி. இராமசாமி

★ மாவட்டத்திலுள்ள எல்லாக் கூட்டுறவு நிறுவனங்களுக்கும், விவசாயப் பெருங்குடி மக்களுக்கும் பாங்காராகவும், உற்ற தோழனாகவும் பணி புரிகிறது.

★ பிக்சட் டிபாசிட்டுகளுக்கும் மற்ற டிபாசிட்டுகளுக்கும் கவர்ச்சிகரமான வட்டி அளிக்கப்படுகிறது.

★ பிராவிடெண்டு டிபாசிட்டுகளுக்கு 7 சதவிகிதம் கூட்டு வட்டி அளிக்கப்படுகிறது.

★ வாடிக்கையாளர்களின் வசதிக்காக வங்கி முறையின் எல்லா அலுவல்களும் மேற்கொள்ளப்படுகிறது. பாதுகாப்பு பெட்டக வசதிகளும், நகைக் கடன்கள் கொடுக்க ஏற்பாடும் செய்யப்பட்டுள்ளது.

★ விபரங்களுக்கு தலைமை அலுவலகம் அல்லது கிளைகளுக்கு விண்ணப்பிக்கவும்.

எம். பழனிசாமி, பி. காம்., எச். டி. சி.
செயலாளர்

கிளைகள் :	போன் நெ.	கிளைகள் :	போன் நெ.	கிளைகள் :	போன் நெ.
1. ஈரோடு	... 506	6. வெள்ளகோவில்	... 89	10. பவானி	... 528
2. உடுமலை	 202	7. பொள்ளாச்சி	... 984	11 அவினாசி	
3. தாராபுரம்	.. 315	8. ஆர். எஸ். புரம் (கூட்டுறவு சிறப்பு அங்காடி)		12. கிணத்துக்கடவு	
4. கோபி	.. 195	9. கிருஷ்ணபுரம் (கூட்டுறவு சர்க்கரை ஆலை)		13. மேட்டுப்பாளையம்	
5. திருப்பூர்	... 848			14. பெருந்துறை	
				15. சூலூர்	

நாட்டுயர்வு பேணும் கூட்டுறவாளர்

திரு. ப. ச. விசுவநாதன், M. C.
ஈரோடு நகர தி. மு. க. செயலாளர்

நம் தமிழகத்தில், பல்வேறு துறைகளிலும் தனிச் சிறப்புப் பெற்றுத் தலை நிமிர்ந்து நிற்பது ஈரோடு என்பதை அனைவரும் அறிவர். ஈரோடு என்றவுடன், சீர்திருத்தச் செம்மல் – பகுத்தறிவுப் பேரொளி – புத்துலகச் சிற்பி தந்தை பெரியார் அவர்களின் நினைவுதான் முதலில் வரும். அதன் பின்னர் கூட்டுறவுத் தந்தை என மக்களால் போற்றப்படும் திரு. S. K. சென்னியப்ப கவுண்டர் அவர்களது நினைவு வருவது இயல்பு. புகழுக்குரிய திரு. S. K. C. அவர்களின் பெருமை பற்றி என் உள்ளத்தில் எழும் உணர்ச்சிகளுக்கு வடிவம் கொடுக்க விரும்பி இதனை வரைகிறேன்.

திரு. S. K. C. அவர்களிடம் மிக நெருங்கிப் பழகும் அரிய வாய்ப்பினை நான் பெற்றவனில்லை எனினும் அவரோடு நெருங்கிப் பழகிய பலர் மூலம் அவரது குண நலன்களை, சிறப்பியல்புகளை அறிந்து வியந்திருக்கிறேன் என்பது மிகையன்று. சீர்மிகு சின்னியம்பாளையத்தில் உழவர் குடியில் பிறந்த அவர் எண்ணத்தாலும், செயலாலும் எவ்வளவு பெருமை பெற்றிருக்கிறார் என்பதை எண்ணும்போது ஆச்சரியம் ஏற்படினும், 'உயர்வின் வித்து உழைப்பே' என்ற உண்மையும் புலனாகாமல் போகாது. நல்லெண்ணமும் நற்செயலும் வீண் ஆகாது.

இளமை தொட்டே பொது வாழ்வில் அவர் காட்டிய ஆர்வமும், தீவிரமும் இளந் தலைமுறையினர்க்கு நல்லதோர் வழிகாட்டி ஆகும். செயல் திறமும், பண்பு நலமும் ஒருசேரப் பெற்றிருத்தல் சிறப்புக்குரியதல்லவா?

ஈரோடு நகராட்சி மன்றத்தின் உறுப்பினராக இருக்கும் நான், முன்னாள் நகர மன்றத் தலைவராக இருந்த அவரது பணியினை மனக் கண்ணால் கண்டு மகிழ்கிறேன். நகரத்தின் முன்னேற்றத்திற்குத் திட்டமிட்டுச் செயலாற்றி வெற்றி கண்டவர் அவர். நகர மன்றத்தின் மூலம் பொருட்காட்சி நடத்திப் பொது மக்களின் பேராதரவைப் பெற்றவர் இவரே. கண்டிப்பானவர் – எனினும் கை சுத்தமானவர் என்ற காரணத்தால் யாவரும் இவருக்குப் பணிந்தே நடந்து வந்தனர். நிர்வாகத் திறமையில் இவருக்கு நிகர் இவரே. கோபமுள்ள இடத்தில் குணமிருக்கும் என்பதற்கு இவரே நல்லதோர் எடுத்துக்காட்டு. ஆரவார உலகத்தில் அமைதியாக, விளம்பரமின்றி மக்கள் பணிபுரியும் வித்தகர்களில் தலை சிறந்தவர் இவரே என்பது என் கருத்து.

தமிழ் மரபின் உணர்வோடு விருந்தோம்பும் நற்பண்பு வாய்க்கப் பெற்றவர். நாடி வந்தோர்க்கு நன்மை செய்யவேண்டும் என்பதையே இவர் மனம் நாடும். ஏற்றத்தாழ்வின்றி அனைவரையும் சமமாகவே நடத்தும் விரிவான நெஞ்சுடையவர். ஏழையர்பால் இரக்கங்காட்டி இயன்ற உதவியினைச் செய்யும் அருள் உள்ளம் இவருடைமை. உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாத உயர் குணசீலர். தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர்.

இளமையிலிருந்தே கூட்டுறவுத் துறைக்கே தன்னை அர்ப்பணித்துக் கொண்டு, நாட்டுயர்வு பேணும் கூட்டுறவாளராக நாளும் அவர் தொண்டாற்றி வருவதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். ஈரோடு கூட்டுறவு ஒன்றியத்தின் தலைவராகக் கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாகப் பணிபுரிந்து வருகிறார். அது போல் கோவை கூட்டுறவு அச்சுக்கூடம், கோவை மாவட்ட கூட்டுறவு மத்திய வங்கி ஆகியவற்றின் தலைவராகக் கடந்த பல ஆண்டுகளாக அவர் ஆற்றிவந்த பணி அனைவரது பாராட்டுக்கும் உரியதாகும். விவசாய சங்கங்கள், விற்பனைச் சங்கங்கள், நெசவாளர் சங்கங்கள் ஆகியவற்றிற்கு அவ்வப்போது காலாகாலத்தில் மத்திய வங்கியின் மூலம் கடனுதவி அளித்து சமுதாய முன்னேற்றத்திற்குப் பெருந்துணையாக இருந்து வந்ததை யாரும் மறக்கமுடியாது. வழங்குகின்ற கடனை வசூலிப்பதில் அவர் காட்டும் கண்டிப்பும் தேவையானதன்றோ? அனுபவ அறிவின் துணை கொண்டு அவர் சாதித்தவை அனேகம். பெருங் கடலில் சிறு துளி போன்றதே என் கருத்துரை.

இத்தகு சிறப்புப் பெற்ற செம்மல் திரு. S. K. சென்னியப்ப கவுண்டர் அவர்களுக்கு சிலை நிறுவி கௌரவிப்பதன்மூலம், நமது நன்றி மறவாத நற்பண்பை நிலைநாட்டிக்கொள்ள நல்லதோர் வாய்ப்புக் கிட்டியது என்று பெருமிதமும், பெருமையும் கொள்ள உரிமை உடையவர்களாக நாம் ஆகிறோம். செய்ய வேண்டியதைச் செவ்வனே செய்தோம் என்ற நிம்மதி நம் நெஞ்சங்களில் நிரம்புகிறது. நன்றிப் பெருக்கால், ''நாட்டுயர்வு பேணும் கூட்டுறவாளர்'' கன்னித் தமிழ்போல் காலமெல்லாம் வாழ்கவென உள்ளுணர்வு வாழ்த்துகிறது — உலகமும் வாழ்த்தட்டும் உவந்து.

நமது தலைவர்

திரு. P. N, நஞ்சப்பன்
தலைவர், கோபி நகராட்சி மன்றம்

நமது தலைவர் திரு. S. K. சென்னியப்ப கவுண்டர் அவர்கள் தலைவருக்கு எல்லாம் தலைவர். தொண்டருக்கு எல்லாம் தொண்டர். ஏழைப் பங்காளன். மக்கள் சேவகன்.

நமது தலைவர் வாழ்க்கையை எப்படி வாழவேண்டுமென்று வாழ்ந்து காட்டியவர். மற்றவர்கள் அவரது வாழ்வை எடுத்துக்காட்டாகக் கொண்டு வாழும் அளவுக்கு சிறந்து விளங்குபவர் என்பது நாம் யாவரும் அறிந்த உண்மை.

நமது தலைவர் பள்ளியில் நான்காவது படிவம் வரைதான் கற்றவர். அதே சமயம் உலகத்தைப் பள்ளியாகக் கொண்டு தமது அறிவையே ஆசானுகக் கொண்டு தமது விடாமுயற்சியாலேயே சிறந்த மேதா விலாசத்தைப் பெற்றவர்.

தமது இளம் வயதிலேயே தென்னுடு முழுவதும் சுற்றிப் பார்த்தவர். வாலிபத்தில் தமது நண்பருடன் வடநாடு பூராவும் சுற்றிப் பார்த்தவர். அதுசமயம் நடந்த ஒரு சிறு நிகழ்ச்சி நமது தலைவருடைய எதற்கும் அஞ்சாத, எதிர்காலத்தில் நம்பிக்கை கொண்ட திட நெஞ்சத்தைக் காட்டுவதாகும். ஊரை விட்டுச் சென்றே ஒரு மாதத்திற்கு மேலாகிவிட்டது. காஷ்மீரில் கையில் இருந்த பணம் பூராவும் போய்விட்டது. எதிர்பாராத இன்னல்கள் ஏராளமாக எதிரே நிற்கின்றன. நண்பரோ மனமொடிந்துவிட்டார். வாழும் நம்பிக்கையை இழந்துவிட்டார். தற்கொலை செய்துகொள்ளலாம் என்றுகூட நமது தலைவருக்கு யோசனை சொன்னுர். நான் சாகமாட்டேன். இன்னல்களை எதிர்த்துப் போராடுவேன். வாழுவேன். வாழ்ந்து மக்கள் வாழ்வு மலர என்னுலான தொண்டுகளைச் செய்வேன் என்று நமது தலைவர் சொன்னுராம். மனிதன் எதற்காக வாழவேண்டும் என்னும் நம் தலைவரின் சிறந்த லட்சியத்தை இந்த நிகழ்ச்சி எவ்வளவு தெளிவாக நமக்குக் காட்டுகிறது. உலகத்தை அறிந்துகொள்ளவேண்டுமெனும் அவா உந்த நமது தலைவர் கடல் கடந்து மலேயா, சிங்கப்பூர் முதலான இடங்களுக்கும் சென்று வந்தவர். அந்தப் பயணங்களின் பயனை நமக்கெல்லாம் தந்தவர்.

நமது தலைவருக்குக் குழந்தைகள் என்ருலே அலாதியான அன்பு. குழந்தை களிடம் அவர் பழகும் முறை மற்றவர்களுக்கு ஆச்சரியமூட்டும். தோல்வி மனப்பான்மை அவர் இருக்கும் எல்லையில்கூட இருக்காது. உதாரணமாக பரீட்சை முடிவுகள் தெரிந்தவுடன் வெற்றியடைந்த குழந்தைகள் சிரிக்கும். தோல்வி அடைந்த குழந்தைகள் சோர்ந்து இருக்கும். நமது தலைவர் தோல்வியடைந்த குழந்தைகளுக்கு தலைக்கு ஒரு ரூபாய் பரிசும், வெற்றியடைந்த குழந்தைகளுக்கு கால் ரூபாய் பரிசும் கொடுத்து தோல்வியையும் வெற்றியாக மாற்றிவிடும் விந்தை மனிதர். அதோடு, குழந்தைகள் வீட்டை விட்டு வெளியே சென்று பெற்ருேரைப் பிரிந்து கல்வி கற்கவேண்டும். அப்போதுதான் குழந்தைகளின் உள்ளத்திலே பணிவு ஏற்படும். பலரோடு பழகும் திறன் வளரும். தன்னம்பிக்கையும் வளரும் என்ற அசையாத நம்பிக்கை கொண்டவர் நமது தலைவர். பெரியநாயக்கன் பாளையம் இராமகிருஷ்ண வித்யாலயம் தொடங்கப்பட்டபோது அங்கு யாரும் தம்

குழந்தைகளை அனுப்ப முன்வரவில்லை. அங்கு முதன் முதலில் சேர்ந்த பத்து மாணுக்கர்களுள் ஒருவராக தமது தம்பி திரு. S. K. பரமசிவம் அவர்களை அனுப்பி வைத்தார். அந்த மாணுக்கர் திரு. பரமசிவம் அவர்கள் பாராளுமன்ற உறுப்பினராகப் பணியாற்றினர். கோவை மாவட்ட காங்கிரஸ் தலைவராகவும், கோவை மாவட்ட கூட்டுறவு மத்திய வங்கியிலும் நிர்வாக சபை உறுப்பினராகவும் பணி ஆற்றி வருகிருர். திருப்பராய்த்துறையிலே சுவாமி சித்பவானந்தர் பள்ளி ஆரம்பித்தபோது தமது குமாரர்களை அங்கு அனுப்பினர். அவர்களில் திரு. S. C. சுப்பிரமணியம், ஜில்லா முன்சீப்பாகப் பணிபுரிகிருர். திரு. R. செங்கோட்டையன் வியாபாரத் துறையில் சிறந்து விளங்குகிருர். திரு. செங்கோட்டையன் தலைவர் அவர்களுடைய சகோதரருடைய குமாரர் ஆனுலும் வெளி உலகுக்கு நமது தலைவரின் குமாரர் என்ருல்தான் தெரியும். இத்தகைய எல்லாக் குழந்தைகளும் தன் குழந்தைகள் என்கிற பரந்த நோக்கம் நமது தலைவருக்கே உரித்தான தனிப்பண்பு.

வாழ்வில் மற்றவர்களுக்குச் சிறந்த வழிகாட்டி நமது தலைவர் என்பது கீழ்வரும் நிகழ்ச்சியால் நன்கு புலனுகும். எனது தந்தை திரு. நல்லாக் கவுண்டர், தலைவருடைய அருமந்த நண்பர். அவர் மறைந்தது 15 ஆண்டுகளுக்கு முன்பு. கடந்த 15 ஆண்டுகளாக நான் எனது சிறிய தந்தை திரு. P. K. முத்துவேலப்ப கவுண்டருடைய குமாரனுகவே வாழ்ந்தேன் என்ருல் அது தலைவரின் அறிவுரையால் தான். ஆண்டுகள் பதினைந்து மறைந்தாலும் தலைவர் சொன்ன அறிவுரைகள் இன்றும் என் மனதில் அப்படியே பசுமரத்தாணிபோல் இருக்கின்றது. தலைவர் அவர்கள் கூறினர்கள், ''ஒரு ஊரிலே இரண்டு சகோதரர்கள். முத்தவர் பெயர் ராமசாமி, பிறவிக் குருடர் ஆனுலும் அறிஞர். வள்ளல். திருமணமே செய்து கொள்ளவில்லை. குடும்ப வருவாய் ரூ. 10 லட்சத்தையும் வாரி வழங்கிவிடுவார். தம்பி பெயர் நஞ்சப்பன். மனைவியுண்டு. குழந்தைகளும் உண்டு. அண்ணன் குடும்ப வருவாய் பூராவும் வாரி வழங்கிவிடுகிருர். பொருள் சேர்க்க முடியவில்லையே என்று தம்பிக்கு மனக்குறை. தனியே பிரிந்துபோய் நிறையப் பொருள் சேர்க்க வேண்டும் என்கிற எண்ணத்தோடு சொத்தைப் பிரித்துக்கொண்டு போகவேண்டு மென்றபோது, அண்ணன் எவ்வளவோ தடுத்தும் கேளாமல் பிரிந்து சென்று விடுகிருர் தம்பி. பாகப்பிரிவினை செய்து சப்-ரிஜிஸ்திரார் ஆபீசில் பத்திரம் ரிஜிஸ்டர் செய்துவிட்டு அப்பாடா, ஆண்டுக்கு ரூபாய் 5 லட்சம். 10 ஆண்டுகளில் ரூ. 50 லட்சம் சேர்த்துவிடலாம் என்ற எண்ணத்தோடு விடு வந்த தம்பி மாரடைப்பால் மாண்டுவிட்டார். அண்ணனுக்குத் தகவல் கிடைக்கிறது. அவர் தம்பியின் பிரேதத்தின்மீது விழுந்து அழுகிருர். ''எண்ணிய எண்ணமெங்கே; எழுதிய கருரெங்கே; பண்ணிய பாகம் எங்கே; பார்த்தாயாடா நஞ்சப்ப கவுண்டா'' என்ருர். இது நமது தலைவர் சிறந்த அறிஞர் மட்டுமல்ல, அழியா அமரத்துவம் பெற்ற வாழ்வை வளமாக்கும் குட்டிக் கவிதைகளையும், கதைகளையும் இயற்றி எல்லோரையும் இன்புறவைக்கும் வாழ்வியல் கவிஞர் என்பதையும் காட்டுகிறது.

நமது தலைவருடைய பொது வாழ்வு பரந்து கிடப்பது. அது பூராவும் விவரிக்க இடமின்மையால் சுருங்கச் சொல்லவேண்டியதற்கு வருந்துகிறேன். நாட்டின் சுதந்திர இயக்கமான காங்கிரஸில் தீவிர ஈடுபாடு அவருக்கு உண்டு. 1922-ம் ஆண்டிலே நமது தலைவரின் திருமணத்தின்போது, அதுவும் மூன்றங்குல அகலம் ஜரிகை போட்ட வெண்பட்டாடை உடுக்க வேண்டும் என்ற கண்டிப்பும் கட்டுப்பாடும் இருந்த அந்த நாளிலேயே நமது தலைவர் சாதாரணக் கதராடையே

உடுத்தார் என்ருல் எளிமையிலே அவருக்கு உள்ள மோகமும், நாட்டுப்பற்றும் நன்கு புலனுகிறது. கடந்த 40 ஆண்டுகளாகக் கூட்டுறவு இயக்கத்திலே, பல ஸ்தாபனங்களிலே பங்கு கொண்டு பாடுபட்டு வருகிருர். தற்சமயம் கோவை மாவட்ட கூட்டுறவு மத்திய வங்கியின் தலைவராகவும், கோயமுத்தூர் கூட்டுறவு அச்சுக்கூடத்தின் தலைவராகவும், கூட்டுறவு பயர் அண்டு ஜெனரல் இன்ஷ்யூரன்ஸிலும், சென்னை மாநில கூட்டுறவு வங்கியிலும் மற்றும் பல ஸ்தாபனங்களிலும் நிர்வாக சபை உறுப்பினராகவும் பங்கு கொண்டு பணியாற்றி வருகிருர்.

1947—1952-ம் ஆண்டு முடிய ஈரோடு நகரசபைத் தலைவராகப் பணியாற்றி உள்ளார். தமது பொது வாழ்வின் ஆரம்பத்தில் 6 ஆண்டு காலம் பஞ்சாயத்து கோர்ட்டு தலைவராகவும் பணிபுரிந்துள்ளார். நேர்மையும், ஒழுக்கத்தையும் தமது பேச்சாகவும், மூச்சாகவும் கொண்டுள்ள நமது தலைவரின் அடிச்சுவட்டில் நடந்து நாமும் நமது வாழ்வை வளமாக்கிக்கொள்வோமாக.

1—5—1900-ம் ஆண்டிலே பிறந்த நமது தலைவருக்கு இரண்டு குமாரத்திகளும், இரண்டு குமாரர்களும் உண்டு. இன்னும் நமது தலைவரும் எனது தாயாரும் வாழும் வாழ்வை நேரில் சென்று பார்த்தவர்களுக்குத் தெரியும். புதுமணத் தம்பதிகளும் பொருமை கொள்ளும் வண்ணம் தமது 71-ம் வயதிலும் எழில் நிரம்பிய இன்பம் பொங்கும் வாழ்வு வாழ்ந்துகொண்டிருக்கும் நமது தலைவரும் என் தாயும் திங்களும் செங்கதிரும் எனச் சிறந்து நூருண்டு வாழவேண்டுமென நாமும் இந்நன்னுளில் வாழ்த்துவோம்.

துணிவு மிக்க நேர்மையாளர்

திரு. ஈ. வெ. கி. சம்பத், ஈரோடு

திரு. S. K. சென்னியப்ப கவுண்டர் அவர்களை எனது சிறு வயது முதற் கொண்டே மிகவும் நன்கு அறிவேன். அவர்கள் குடும்பமும் எங்கள் குடும்பமும் பல தலைமுறைகளாகவே நட்புறவு கொண்டவை. திரு. S. K. C. அவர்களை அறிந்த எவருக்கும் அவரது அஞ்சாமையும், துணிவு மிக்க ஆண்மையுமே முதலில் கவனத்துக்கு வரும். அவர் அளவுக்கு துணிச்சல் மிக்கவர்களை இக் காலத்தில் சந்திப்பது மிகவும் அருமை.

இந்த துணிச்சலுக்குக் காரணம் சிறிதும் சுயநலமற்ற அவரது நேர்மையே என்பது அனைவரும் அறிந்த ஒன்று. தன் மனதுக்குச் சரியெனப்பட்ட எதற்கும் எத்தகைய சக்திகளையும் எதிர்த்துப் போராடும் நெஞ்சுரம் மிக்கவர். மேற் கொண்ட எந்தப் பொறுப்பினையும் நீதியாகவும், திறமையாகவும் நிறைவேற்றும் பண்பினர்.

ஈரோடு நகரசபைத் தலைவராக அவர் பொறுப்பேற்று அவர் ஆற்றிய அரும் பணிகளை ஈரோடு நகரம் என்றும் மறக்க முடியாது. மாற்றாரின் துயரத்திலும், பிரச்னைகளிலும் உளமாரப் பங்குகொண்டு உதவும் பெருந்தகைமை தனிச்சிறப்பு. எந்த ஒரு பிரச்னையிலும் ஒரு நிலை நின்று, எவ்வளவு நெருங்கிய நண்பராயினும் தவறு கண்ட இடத்து சுட்டிக்காட்டும் திரு. S. K. C. அவர்களின் நட்பு வாய்க்கப் பெற்ற அனைவருக்கும் ஒரு சிறந்த துணையாகும்.

சோம்பல் என்பதே இன்னதென்று அறியாது எங்கும், எதிலும், எப்பொழுதும் சதா துருதுரு என்று அவர் சுறுசுறுப்புடன் கடமையாற்றுவது காணக்காண மிகவும் மகிழ்ச்சியாக இருக்கும். அவரது முதுமைப் பருவத்திலும் கூட்டுறவு இயக்கத்தில், குறிப்பாக கோவை மாவட்டத்தில் அவர்கள் ஆற்றிவரும் தொண்டு மிகவும் போற்றற்குரியது.

கல்லூரி சென்று பட்டம் பெருதவரேயன்றி மற்றபடி அவரிடம் உரையாடும் வெறும் ஒரு சில நிமிடங்களிலேயே அவர் ஓர் மேதை என்பதை உணர முடியும். உலகைப் பற்றியும், மனித இயல்புகள் பற்றியும், அவரது ஆழ்ந்த அனுபவ அறிவு மற்றவர்களிடம் புலப்படுத்துவது கேட்கக்கேட்கத் தெவிட்டாத விருந் தாக விளங்கும். நொடிக்கொரு கதையும், பழம் பாடலும், பழமொழியும் ஆக அவரது உரையாடலில் உருண்டுவரும் அறிவுக் கதிர்கள் அனைவரையும் பரவசப் படுத்தும்.

அவரது திறமைக்கும், அனுபவத்திற்கும், அறிவுக்கும், நேர்மைக்கும் மிகப்பெரிய மாநிலப் பொறுப்புக்களை ஏற்று நடத்த வேண்டுமென விரும்புகின்ற வர்களில் நானும் ஒருவன்.

திரு. S. K. C. அவர்கள், நல்ல உடல் நலத்தோடு நீண்டநாள் வாழ்ந்து நாட்டுக்கு நல்ல சேவை புரிய மனமார வாழ்த்துகிறேன்.

சரியான முடிவு!
வளையாத பண்பு!
பொறுப்பான நிர்வாகம்!

திரு. K. S. அங்கமுத்து, B. A.
முன்னாள் செயலாளர்
கோயமுத்தூர் மத்திய கூட்டுறவு வங்கி, கோயமுத்தூர்

திரு. எஸ். கே. சென்னியப்ப கவுண்டர் அவர்கள் கோயமுத்தூர் ஜில்லா கூட்டுறவு மத்திய பாங்குடன் நெடுநாள் தொடர்பு கொண்டுள்ளவர். சென்ற பத்து ஆண்டுகளில் பாங்கியின் லேவாதேவிகளும் சேவையும் மிகப்பெரிய அளவிற்கு வளர்ந்து நிற்கிறது. சென்ற பதினைந்து ஆண்டுகளில் கூட்டுறவுத் துறையில் குறிப்பாக கூட்டுறவு பாங்கு அலுவல்களில் தேசத்தின் முன்னேற்றத் திற்கேற்ப மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. கோயமுத்தூர் ஜில்லா கூட்டுறவு மத்திய பாங்கு நமது மாநிலத்திலேயே பெருமைக்குரிய ஒரு தனி இடத்தை வகிக்கின்றது. இதன் செயல்பாடுகள் இதனைப்போன்ற ஏனைய ஸ்தாபனங்களுக்கு சில சமயங் களில் வழிகாட்டியாகவும் இருப்பதுண்டு. இவ்விதம் செயல் முறைகள் அதிகரிக்க, அதிகரிக்க பொறுப்புக்களும் அதிகமாகின்றன. இதற்கு நிர்வாகத்தில் அவ்வப் போது முடிவு செய்யப்படவேண்டிய விஷயங்களை மிக்க தெளிவாகவும், பயனுள்ள தாகவும், துணிவுடன், எவருக்கும் அஞ்சாமல், பாரபட்சமின்றி முடிவு எடுப்பதில் தான் உள்ளது. இதற்கு ஸ்தாபனத்தின் தலைவரின் பங்கு மிகவும் முக்கியம். இந்த வகையில் திரு. எஸ். கே. சென்னியப்ப கவுண்டர் அவர்களின் சேவை மிகவும் பயனுள்ளதென்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். அவர் எதையும் மனதில் வைத்துக்கொள்ளாமல் வெளிப்படையாக எடுத்துக்கூறுபவர். உயர் அதிகாரிகளே கூறினாலும், தம் மனதிற்குச் சரியில்லையென்றுபடும் விஷயங்களில் வளைந்து கொடுக்காமல், சரியான முடிவுகளை துணிச்சலாக வெளியிடுபவர். தவறு செய்துவிட்டுபின் அதை உணர்ந்தவர்களை மன்னிப்பதுடன், தானே பரிகாரங்களை தெரிவித்து தைரியம் அளித்து பாதுகாப்பு அளிக்கும் பெருங்குணம் படைத்தவர். மற்றவர்களிடம் அன்பும், இரக்கமும் காட்டுபவர். எவருக்கும் நன்மை செய்ய வேண்டுமென்ற நல்லெண்ணம் படைத்தவர். தம்மை அணுகுபவர் எவராயினும் அவர் கூறுவதை பரிவுடனும், மிகக் கவனமாகவும் கேட்டு தம்மால் இயன்ற உதவிகளைச் செய்வதில் தயங்காதவர். அவர் விட்டிற்கு யார் சென்றாலும், வந்தவர் முதலில் ஏதாவது சாப்பிட்டபின்தான் வந்த காரியம்பற்றி விசாரிப்பார். அவ்விதம் வருபவர்களிடம் எவ்வித பேதமும் காட்டாது காரியத்தைக் கவனமாகக் கேட்டுத்தெரிந்து, தம்மால் இயன்ற அளவு நன்மைகள் செய்பவர்.

பொறுப்பான பதவியில் இருப்பவர், வசதியும், செல்வாக்கும் உள்ளவர். எனினும், எளிமையாக வாழ்பவர். நல்ல மனம், தாராள சிந்தனை, சிக்கலான விஷயங்களையும் எளிதில் புரிந்துகொள்ளும் கூர்ந்த அறிவுத் திறமை, இதமாகப் பழகும் உயர்ந்த பண்பு ஆகியவற்றுக்கோர் எடுத்துக்காட்டாக விளங்குபவர் திரு. எஸ். கே. சென்னியப்ப கவுண்டர் அவர்கள்.

அன்னாரைச் சிறப்பிக்க, சிலை நிறுவி, சிலை திறப்பு சிறப்பு மலர் வெளியிடும் விழா வெற்றிகரமாக இனிது நிறைவேற பிரார்த்திக்கிறேன்.

எங்கள் சங்க ஜவுளி தமிழ் நாடு அரசாங்கத்தின் முதல் பரிசும்
வெள்ளிக் கோப்பைகளும் பரிசு பெற்றது

"கள்டெக்ஸ்"

கள்ளியம்புதூர் நேசவாளர்
கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம், லிமிடேட்
No. A. A. 124
விஜயமங்கலம் போஸ்டு, (வழி) ஈரோடு, கோவை மாவட்டம்

கண்கவர் வண்ணங்கள்! நீடித்த உழைப்பு! சிறந்த தயாரிப்பு!
நவீன ரகங்கள்! குறைந்த விலை! கெட்டிச் சாயம்!

எங்கள் சங்க ஜவுளிகள் ஈரோடு 32 நெம்பர் அக்ரஹாரம் வீதியிலுள்ள எங்கள் குடோனில் மொத்தமாகவும், சில்லரையாகவும் கிடைக்கும்
மற்றும்
கோ-ஆப்டெக்ஸ் நிலையங்களிலும்,
கோவை சிந்தாமணி சூப்பர் மார்க்கட்களிலும்,
திருப்பூர் வளர்மதி சூப்பர் மார்க்கட்டிலும் கிடைக்கும்.

வளர்க கூட்டுறவு! வாழ்க அவர்தம் புகழ்!

திரு. S. K. சென்னியப்ப கவுண்டர் அவர்களின்
அளவற்ற ஆற்றலுக்கும், பற்றற்ற பதவிக்கும்
அவரது அயராத சேவைக்கும்
ஏற்ப சிலை எடுத்ததற்கு எங்கள் மனமார்ந்த நல் வாழ்த்துக்கள்

விஸ்வம் & கோ.
எலக்ட்ரிகல் டீலர்ஸ்
309, நேதாஜி ரோடு, ஈரோடு-1

ஈரோடு தாலூக்காவிற்கு *R. M. V.* மோட்டார்களின் அங்கீகாரம் பெற்ற விற்பனையாளர்கள். எங்களிடம் வீட்டு ஒயரிங் வேலைகளுக்குத் தேவையான சகலவிதமான சாமான்களும் கிடைக்கும்

ஆயில் இஞ்சினின் தென்னிந்திய மொத்த விற்பனையாளர்கள்

சி. கு. சென்னியப்ப கவுண்டர்

டாக்டர் ல. கி. முத்துசாமி, எம். பி., பி. எஸ்., ஈரோடு.

திரு. சென்னியப்ப கவுண்டர் இருக்கும் இடத்தில் எப்போதும் கலகலப்பாக இருக்கும். எப்பொழும் வேடிக்கையாகவும், வீரமாகவும் பேசுவார். சிறுவர்க்கு அவர் மீது மிகப்பற்று.

நான் 4–வது வகுப்பு வரையில் சின்னியம்பாளையத்தில்தான் படித்தேன். அப்போதே அண்ணர் சென்னியப்ப கவுண்டர் ஈரோட்டில் படிக்க வந்து விட்டார்கள். அவருக்கு சிறுவர்களிடத்தில் மிகப் பிரியம்.

ஒருதடவை அவர் விரலில் இருந்த மோதிரத்தைக் கழற்றி நான் போட்டுக் கொண்டு எங்களூர் லக்காபுரத்திற்கு போயிருந்தேன். அங்கு என் விரலில் இருந்த மோதிரத்தைப் பார்த்துவிட்டு ஒகோ மோதிரம் போட்டுக் கொண்டாயா? இது என்ன பித்தளை, இதையா போட்டுக்கொள்வது என்று கேலி செய்தார்கள். அப்படியா என்று அதைக் கழற்றி எங்கேயோ வீசி எறிந்து விட்டேன். அடுத்த நாள் அவர் என்னைக்கண்டு மோதிரத்தைக் கேட்டார். நடந்ததைச் சொன்னேன். அவர் 'அட, தங்க மோதிரம் ஆச்சே! சரி, போனல் போகிறது என்று சொல்லி விட்டார். வேறுயாராவதாக இருந்தால் என்ன திட்டுத் திட்டி இருப்பார்கள்? கூப்பாடு போட்டிருப்பார்கள். அடியும் கொடுத்திருப்பார்கள்.

இது சம்பவம் அவருடைய பெருந்தன்மையையும், சிறுவர் மீதுள்ள பாசத்திற்கும் பணத்தைப் பற்றி கவலைப்படாத தன்மையையும் காட்டுகிறது. அண்ணர் சென்னியப்ப கவுண்டருடைய தம்பி காலஞ்சென்ற திரு. முத்துசாமி, காலஞ்சென்ற அந்தியூர் அட்வகேட் பூசப்ப கவுண்டர், நான் ஆகியவர்கள் மகாஜன ஹைஸ்கூலில் படித்துக் கொண்டிருந்தோம். சக்கிலியத் தெருவிலே ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்திருந்தோம். சமையற்காரனிருந்தான். அண்ணர் தான் எல்லாவற்றையும் கவனித்துக்கொள்பவர்.

ஒரு நாள் காலையில் நாங்கள் எழுந்து பார்த்தால் எங்கள் சமையல்காரர், அண்ணர், பாத்திரங்கள் காணும். பின் தெரியவந்தது. தஞ்சாவூர்ப் பக்கத்தில் நாடகக் கம்பெனி நடத்துவதற்காக பெற்றோருக்கும் தெரியாமல் பள்ளியையும் விட்டு விட்டு போய்விட்டார் என்று.

இன்னொரு சம்பவம். நான் சென்னையில் படித்துக் கொண்டிருந்தேன். கருப்பாக அழுக்கேறிய வேஷ்டி சட்டையுடனும் தூசி படிந்த முகத்துடனும் அண்ணரும், குப்புசாமி முதலியாரும் ஆஸ்டலுக்கு வந்தார்கள். எனக்கு அதிர்ச்சியும், ஆச்சரியமும். வீட்டை விட்டு ஓடிப்போய் மாதக் கணக்காகி விட்டதென்று கேள்விப்பட்டிருந்தேன்.

ஒரே சந்தோஷமாக தங்கள் சுற்றுப் பயணத்திலே, ஒரு இரவு இவர்கள் படுக்க எங்குமே இடம் கிடைக்கவில்லையாம். சத்திரம் என்று போய்ப் படுத்தால் இவர்களைப் பிச்சைக்காரர்கள் என்றே, சந்தேகப் பேர்வழிகள் என்றே துரத்தி விடுவார்களாம்.

இப்படியெல்லாம் இருந்தவர் தேர்தல்களிலே இறங்கினார். யாராவது அகங்காரத்துடன் அக்கிரமம் செய்தால் பொறுக்கமாட்டார். அதே சமயம் நியாயத்தையும் உணர்ந்தவர்.

ஈரோட்டில் அந்தக்காலத்தில் உப்பு வியாபாரம் காதர் சாயபு என்று ஒருத்தர் செய்து கொண்டிருந்தார். அவர் வேறு யாரையும் உப்பு வியாபாரம் நடத்த இயலாமல் மிரட்டித் துரத்திவிடுவாராம். இதைக் கண்டு கொதித்து எழுந்த சென்னியப்ப கவுண்டர் உப்பு வியாபாரம் தொடங்கினார். ஆரம்பத்தில் அடிக்கடி அடிதடி நடக்கும். பயப்படவே மாட்டார்.

பல தேர்தல்களிலே நின்று தோற்றிருக்கிறார். வெற்றியடைந்த போது இருக்கும் குதூகலமே தோற்ற போதும் இருக்கும்.

அவர் திறமையான, நேர்மையான நிர்வாகி என்பதற்கு அவர் ஈரோடு முனிசிபல் சேர்மனாகவும், கோவை பாங்கு தலைவராகவும் பணிபுரிந்ததே சான்று.

அவர் நீடுழி வாழ்க.

ஏருடைத் தலைவர்

— சக்திக்கனல்

குன்றுடை யானைப் பற்றி
கொங்கு வேளாளர் கூட்டம்
நன்றினி தறிவார்! அந்த
நல்லவன் "வெள்ளைச் சோளம்"
என்றிடு வார்கள்! நெஞ்சில்
இம்மியும் கபடில் லாதோன்
அன்றுளான்! இன்றும் உள்ளான்
அவன் பெயர் சென்னியப்பன்.

உள்ளதை உள்ள வாறே
ஒருதுளி மறைக்கா மற்றுன்
வெள்ளையாய் உரைப்பான்! மிக்க
மெலிந்தவர் தம்மைக் காப்பான்!
துள்ளிமுன் னோடிக் கண்ணீர்
துடைக்கின்ற அருள் நெஞ்சத்தான்!
சொல்லவோ உவமை? அன்னோன்
தூய்மை நெஞ்செங்கே காண்பீர்?

சூட்டுகள் கோட்டு தொப்பித்
துரைகளின் துடுக்கு வீண்ஆர்ப்
பாட்டங்கள் இவனைக் காணில்
பணிந்திடும்! நடுக்கம் கொள்ளும்!
ஊட்டுவோன்! உழைப்போன்! ஏழைக்
குருகுவோன்! உண்மை காப்போன்!
நாட்டினில் இவன்போ லுண்டோ?
நல்லவன்! இவனே யன்றோ?

தோப்பினில் குடியி ருக்கும்
"துறவி"யைக் காணச் சென்றோம்
சாப்பிடும் நேரம் உண்மைத்
தமிழரின் பண்பைக் கண்டோம்!
கூப்பிட்டான்! குதித்து வந்தான்!
குளிர்ந்த நீர் எடுத்தவண்ணம்
சாப்பிட வரட்டும் வண்டிச்
சாரதி நம்மோ டென்றான்!

சின்னியம் பாளை யத்துச்
சிங்கமோ? வேளா ளர்நல்
லெண்ணமோ? இரும்போ? எஃகோ?
எதிர்ப்பினுக் கஞ்சா நெஞ்சோ?
தன்னலம் தனை எரித்த
தழலிதோ? தருமம் தானோ?
என்னெனச் சொல்வேன் எங்கள்
ஏருடைத் தலைவன் மாண்பை?

குறைந்த விலை ! நீடித்த உழைப்பு !!

பள்ளக்காட்டுப்புதூர் நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிமிடெட்

நெ. AA. 128

சென்னிமலை போஸ்டு, ஈரோடு (வழி)

எங்களிடம்:

2/17s நூலினால் தயார் செய்யப்பட்ட
50X90, 60X90 பெட்ஷீட் ரகங்களும்,
தலையணை உறைகளும், துண்டு ரகங்களும்
20s சிட்டைத் துண்டு மடிகளும்
குறைந்த விலையில் கிடைக்கும்

S. ராமசாமி,
தலைவர்.

சங்க விற்பனை நிலையம்:

தெற்கு ராஜ வீதி, சென்னிமலை

அணைக்கும் கரங்கள்

திரு. எம். பழனிசாமி, பி. காம்,. எச். டி. சி.,
செயலாளர்,
கோவை மாவட்ட கூட்டுறவு மத்திய வங்கி, கோவை.

நீண்ட பெருங்காலம் கோவை மாவட்ட கூட்டுறவு மத்திய வங்கியின் தலைமைப் பொறுப்பு ஏற்று, புகழ் திகழ நிர்வாகம் நடத்திய இம்மாவட்டத்தின் கூட்டுறவுப் பெரியார் திரு. எஸ். கே. சென்னியப்ப கவுண்டர் அவர்கள் முதிர்ந்த ஆழ்ந்த அனுபவமும், மாநிலம் முழுவதும் தனித்திறம் பெற்ற தலைவர் எனவும், புகழப் பெற்றவர். அவர்களின் தலைமைப் பொறுப்பின் கடைசிக் கட்டத்தில் 4 ஆண்டுகள் வங்கியின் செயலாளராகப் பணிபுரிந்து அவரது உள்ளத்தில் இடம் பெற்றுள்ள நான் அவரைப் பற்றி சில வரிகள் எழுதுவதற்கு தகுதியுடையவனே என்ற கருத்தில் அவரது ஒரு சில தன்மைகளைப் பற்றி மட்டும் இவ்விடம் குறிப்பிட விழைகின்றேன்.

வடலூர் இராமலிங்க வள்ளலார் அருட்பாவில் இறைவனிடம் என்ன வரம் கேட்கிறார் தெரியுமா ?

> '' உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்
> உறவு கலவாமை வேண்டும் ''

என்ற வரம். இந்த வெள்ளை மனம் எல்லோருக்கும் வாய்ப்பதில்லை. லட்சத்தில் ஒருவர் இருக்கலாம். இங்கு பெரியார், கூட்டுறவுத் தந்தை கவுண்டர் அவர்களை நினைக்கின்றேன். கண்ணில் நீர் துளிர்க்கிறது. வார்த்தைகளில்தான் எத்தனை கடுமை ? ஆனால் உள்ளம் ! கவிஞர்கள் வார்த்தையில் சொன்னால் '' பூப்போன்ற உள்ளம் '' என்று சொல்லலாம். அது கூட சரியில்லை ; தாய் உள்ளம் என்பது தான் சரியான சொல்.

உள்ளத்தை மறைப்பது என்னும் கலை அவர்கட்கு தெரியாத ஒன்று. நெஞ்சில் பட்டதை படீர் என்று வெடிப்புறக் கூறும் பண்பு அவர் பண்பு. ஆம் ! ஒளிவு மறைவின்றி எவ்விடத்தும் வெடிக்கும் துப்பாக்கிக் குண்டு அவர் பேச்சு.

அவரிடம் இன்னார், இனியர் என்ற பாகுபாடு இல்லை. அவர் எல்லோருக்கும் பொது, எது நியாயமோ அது அவர்கட்கு விருப்பம். அதனால்தான், இம் மாவட்டத்தில் மட்டுமல்ல, இம்மாநிலத்திலுள்ள கூட்டுறவாளர்களால், மிகவும் மதிக்கப்பெற்று போற்றப்பட்டு வருகிறார்.

குற்றம் காணின், பெரும் சினம் கொள்ளும் அவர், குற்றத்தை ஒப்புக் கொள்ளின் மன்னிக்கும் பெருந்தன்மை படைத்தவர். அது அவருக்கே உள்ள தனிப்பெரும் பண்பு. அதையே நான் அணைக்கும் கரங்கள் கொண்டவர் என்கின்றேன். உழைப்பை, உழைப்பாளியை அவர் போற்றும் விதமே தனி.

விருந்தோம்பலில் கொங்கு நாட்டுப் பண்பாடு என்னவென்பதை கவுண்டரிடம் உயர் அதிகாரிகள் முதற்கொண்டு அனைவரும் நன்கு அறிவார்கள். இன்று அவர்களால் வாழ்க்கையில், பிழைப்புப் பெற்றவர்கள், உயர்வு பெற்றவர்கள் எண்ணில் அடங்கா.

சில சமயம், தந்தைக்கும் உயர்வான கவுண்டர் அவர்கள் சிலரிடம் கண்டிப்பாக நடந்து கொண்டதைக் கண்டிருக்கிறேன். ஆனால் அதனால் யாரும் பாதிக்கப்பட்டதில்லை. அக்கண்டிப்பு சம்பந்தப்பட்டவர்களின் நல்லதொரு முன்னேற்றத்திற்கு அடிகோலாகவே அமைந்து விடும் என்பது நான் கண்ட உண்மை. எனவேதான் அப்படிப்பட்ட நல்லவர்களால்தான் இந்த நாடு என்றும் நிலைபெற்று வாழ்கிறது என்று பாவலர்கள் பாடுகிறார்கள். எனவே அனைவரது அன்புக்கும், மரியாதைக்கும் உரிய தந்தை அவர்கள் நீடூழி வாழ வேண்டும்.

வாழ்க அவர் தொண்டு, வளர்க அவர் புகழ்.

ஈரோடு கூட்டுறவு பால் வழங்கும் யூனியன் லிமிடெட்

எண் ஏ. ஏ. 388

67, அகில்மேடு வீதி

ஈரோடு

போன் : 52

பொதுமக்களுக்கும், கல்வி ஸ்தாபனங்கள், மருத்துவ நிலையங்கள் மற்றும் இரயில்வே கேன்டீன்களுக்கும் சுத்தமான பால் குறித்த நேரத்தில் வழங்கி வருகிறோம்

ருசிகரமான ஐஸ்கிரீம், கோவா முதலியன குறைந்த விலையில் விற்பனை செய்கிறோம்

டாக்டர் ல. கி. முத்துசாமி, எம். பி., பி. எஸ்.
தலைவர்

ஏ. பி. நாச்சியப்பன், எம். சி.
செயலாளர்

Telegrams : "CHENTEX"

Phone : Office : 32
Colony : 38

Chennimalai Weavers' Co-op. Production & Sale Society Ltd.

CHENNIMALAI, TAMIL NADU

Chentex

Adds charm to modern living

BEDSPREADS TABLE CLOTHS
FURNISHING FABRICS
PILLOW COVERS

Available in an array of colours guaranteed for fast colour

Recipients of First Prizes from Tamil Nadu Government and Gold Medals from various Exhibitions

Sold at all the Selling Units of

The Tamil Nadu Handloom Weavers' Co-operative Society Ltd. and Handloom Houses in India and Abroad

M. P. NACHIMUTHU, B. A., B. L.
President

COPRESS, COIMBATORE.